விலை ரூபா 20 பக்கங்கள் 28

சாமானியனாக வாழ்ந்து காட்டும் ஜனாதிபதி மைத்திரி
பக். 16

# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
தெளிவான வானிலை

சுடர் 30 கதிர் 190 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 22, வெள்ளிக்கிழமை 05.06.2015



"போதைப்பொருள் பாவனையற்ற இலங்கையை உருவாக்குவோம்"
விரிவு பக்.04

## ஜனாதிபதி பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 5
தனது உயிருக்குப் பல தடவைகள் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட பின்னர் தற்போது தான் தனது பாதுகாப்புக் குறித்து தீவிரம் காட்ட ஆரம்பித்திருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
இதன் முதற்கட்டமாக ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரி நீக்கப்பட்டு, புதிய பொறுப்பதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.
புதிய பொறுப்பதிகாரியாக பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் முனசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். ஜூன் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், இந்த நியமனத்தை பொலிஸ் மா அதிபர் வழங்கியுள்ளார்.
ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்க தொடர்ந்தும், ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிலேயே பணியாற்றுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது அவரது பாதுகாப்புப் பக்.24

# நிதி மோசடியில் ஈடுபட்டார் டக்கி



### இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் நேற்று குற்றச்சாட்டு பதிவு

யாழ்ப்பாணம், ஜூன் 5
முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் மகேஸ்வரி நிதியம் ஆகியவற்றுக்கு எதிராக நிதி மோசடிக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான முறைப்பாடு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு செயலகத்தில் நேற்றுக் காலை பதியப்பட்டது.
யாழ்ப்பாணத்தில் உள்ள லொறி உரிமையாளர்களிடம் இருந்து 2 கோடி ரூபாவை டக்ளஸ் தேவானந்தாவும் அவரால் உருவாக்கப்பட்ட மகேஸ்வரி நிதியத்தைச் சேர்ந்தவர்களும் மோசடி செய்துள்ளனர் என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட பார ஊர்தி உரிமையாளர் சங்கம், லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளது எனத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். பக்.24

## மாணவனைப் பிணை எடுப்பதாக பெற்றோரை ஏய்த்து பண மோசடி

### இருபாலை இளைஞர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ். நீதிமன்றத் தொகுதி மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்டவர்களில் மாணவர்களை விடுவித்துத் தருவதாகக் கூறிப் பணம் பெற்று மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவரைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். அவர் ஏற்கனவே வேறு வழக்குகளில் சந்தேக நபராக இருப்பதனால் நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ். நீதிமன்றக் கட்டடத் பக்.24

## பாலியல் வன்கொடுமை சந்தேகநபர் மாட்டினார்

### பரந்தன் சிறுமி நீதிமன்றில் அடையாளம் காட்டினார்

கிளிநொச்சி, ஜூன் 5
கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் பகுதியில் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட 6 வயதுச் சிறுமி, தன்னுடன் தவறாக நடந்துகொண்டவரை நேற்று அடையாளம் காட்டினார். ஏற்கனவே மறியலில் வைக்கப்பட்டிருந்த 15 வயதுச் சிறுவனையே சிறுமி அடையாளம் காட்டினார்.
சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் சிறுமியின் ஊரைச் சேர்ந்த அந்தச் சிறுவனை பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர். எனினும் சிறுமியின் வாக்குமூலம் தெளிவற்றதாக - முன்னுக்குப் பின் முரணானதாக - இருந்ததால் சந்தேகநபர் மீது தெளிவான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாதிருந்தது என்று பொலிஸார் கூறினர்.
இதனை அடுத்து, சந்தேகநபரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்ட கிளிநொச்சி நீதிவான், அடையாள அணிவகுப்புக்கும் உத்தரவிட்டார். நேற்றுமுன்தினம் நீதிவான் எம்.ஐ.வஹாப்தீன் முன்னிலையில் ஆள் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது.
தன்னைக் கொடுமைக் பக்.24

## போதைப் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை

### மாகாண - கொழும்பு அரசுகளின் ஒத்துழைப்புடன்

யாழ்ப்பாணம், ஜூன் 5
வடக்கு மாகாணத்தில் அதிகரித்துச் செல்லும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தேசிய அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினரை இந்த வார இறுதியில் சந்தித்துப் பேசவுள்ளார் என வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தில் பக்.24

## ரயர் எரிப்பு; மூவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூன் 5
கடந்த மே மாதம் யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிக்கப்பட்ட ஹர்த்தாலின் போது வீதியில் டயர்களைப் போட்டு எரித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவர் நேற்று பிணை பக்.24

## 5 மாணவர் உட்பட அறுவருக்கு பிணை

### பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த வழக்கில் நேற்று வழங்கியது நீதிமன்றம். 36 பேரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5
யாழ்ப்பாண நீதிமன்றத் தொகுதி உள்ளிட்ட பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்த குற்றங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில், மாணவர்கள் ஐவர் உள்ளிட்ட அறுவருக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டது. 36 பேரினது விளக்க மறியல் எதிர்வரும் 8ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. பக்.24

முதல்வர் கருணாநிதியின் மகள்

# கனிமொழி கூறியபடியே சரணடைந்தார் எழிலன்

### மனைவி அனந்தி முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூன் 5
முன்னாள் தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் மகள் கனிமொழி கூறியதற்கு அமைவாகவே, தனது கணவர் இராணுவத்தினரிடம் சரணடைந்தார் என்று முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று சாட்சியமளித்தார், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்தவரான எழிலனின் (சசிதரன்) மனைவியும் வடக்கு பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநர் அனுமதிக்காக காத்திருக்கும் நியதிச் சட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வடக்கு மாகாண சபையின் சுகாதார மற்றும் கல்வி தொடர்பிலான நியதிச் சட்டங்கள் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும், ஆளுநரது அனுமதி இன்னமும் கிடைக்கப்பெறவில்லை. அதனால் குறித்த நியதிச் சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாத நிலைமை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண் சபையில், கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் சுகாதார அமைச்சின் நியதிச் சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. குறித்த நியதிச் சட்டத்தில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மார்ச் 30 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் குறித்த நியதிச் சட்டத்துக்கு ஆளுநர் இன்னமும் அங்கீகாரம் வழங்கவில்லை. குறித்த நியதிச் சட்டத்தை ஆளுநர், சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளமையாலேயே, அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின், கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற அமர்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. குறித்த நியதிச் சட்டம் ஆளுநரின் அங்கீகாரத்துக்காக கடந்த மே மாதம் 19 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நியதிச் சட்டத்துக்கும் ஆளுநர் இன்னமும் அங்கீகாரம் வழங்கவில்லை. இதேவேளை, வடக்கு மாகாண சபையில் எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெறும் அமர்வில், முன்பள்ளிகளுக்கான நியதிச் சட்டம் சபையில் சமர்பிக்கப்படவுள்ளது. (ற-5)

## அரியாலையில் மோட்டார் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5

அரியாலை பகுதியில் மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

முள்ளி வீதி, அரியாலை பகுதியில் உள்ள வீட்டு கேற்றின் முன்பாக கிடங்கு வெட்டும்போது குறித்த மோட்டார் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வீட்டு உரிமையாளர் உடனடியாக யாழ்.பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து, பொலிஸார் இராணுவத்தினருக்கு அறிவித்து குறித்த குண்டை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-106)


## முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு 4, 500 பேர்

கொழும்பு, ஜூன் 5

முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு புதிதாக 4 ஆயிரத்து 500 பேரை இணைத்துக்கொள்வதற்கு அரச நிர்வாக மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு திட்டமிட்டுள்ளது.

கடந்த முறை இடம்பெற்ற போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே தெரிவித்துள்ளார்.

போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் பரீட்சைகள் திணைக்களத்தினால் விரைவில் தமக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் முகாமைத்துவ உதவியாளர்களாக இணைத்துக் கொள்ளப்படுகின்றவர்களை பயிற்சியின் பின்னர் வெற்றிடம் நிலவும் அரச நிறுவனங்களில் சேவைக்கு அமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-10)



சங்கானை அரசால் சித்தி ஞான வைரவர் தேவஸ்தான வைகாசி விசாகப் பொங்கல் தினத்தன்று மடை பரவி பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர்.

## வாள்வெட்டில் முடிந்தது இளைஞர் வாய்த்தர்க்கம்

### நால்வர் வைத்தியசாலையில் கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 5

இரு குழுக்களுக்குள் இடம்பெற்ற வாய்த் தர்க்கம் வாள் வெட்டில் முடிவுற்று நால்வர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மலையாளபுரத்தில் நடந்துள்ளது.

கிளிநொச்சி மலையாள புரத்தில் இடம்பெற்ற பிறந்தநாள் விழா ஒன்றில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இந்த வாள்வெட்டு சம்பவம் நடந்துள்ளது என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மலையாளபுரத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் சுகந்தன் (வயது–19), எஸ்.சாந்தன் (வயது–19), மணியண்ணன் பிரசாந்த் (வயது–19) ஆகிய மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் ரி.வினோதன் (வயது–21) என்பவர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் அனைவரும் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டிருப்பதால் எவரையும் கைது செய்யமுடியவில்லை எனவும் இது சம்பந்தமான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது அடுத்தடுத்து இரண்டு வாள்வெட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இது மக்கள் மத்தியிலே அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது. (ற-21)

## அருணகிரிநாதர் பாடல்கள் மனனப் போட்டி

சுழிபுரம், ஜூன் 5

கந்தர் அனுபூதி அருணகிரிநாதர் அருளிய 51 பாடல்கள் மனனம் செய்தவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பறாளாய் முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடல்களை மனனம் செய்த சிறுவர்கள் பாடல்களைப் பாடி பரிசுகள் பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-28)

## முத்திங்கள் நூல் வெளியீடு

சுழிபுரம், ஜூன் 5

நல்லை நாவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின் முத்திங்கள் வெளியீடு மலராசிரியர் மகா வித்துவான் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மலர்க்குழுவினரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வெளியீடு யாவருக்கும் வழங்கப்பட்டு வருகின்றது. பெற விரும்புபவர்கள் சபையின் செயலாளர் திரு.என். தில்லை நடராசனுடன் தொடர்பு கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவலர் பெருமானது கிடைத்தற்கரிய நூல்கள், கட்டுரைகள் ஆகியவற்றை தம்வசம் வைத்திருப்போர் பாதுகாப்பாக வைத்துக் காக்க தந்துதவுமாறு நாவலர் சபையினர் வேண்டியுள்ளனர். (ற-28)

## டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு மாநகர பகுதியில் இன்றுமுதல்

### தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ். மாநகரப் பகுதியில் டெங்குத் தாக்கம் அதிகமாக காணப்படும் பிரதேசங்களில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இன்றிலிருந்து முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் தொடர்ந்து மூன்று நாள்கள் இடம்பெறும். நல்லூர், வண்ணார் பண்ணை, நாவாந்துறை ஆகிய இடங்களில் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் என்று மாநகர சுகாதார பகுதியினர் தெரிவித்தனர்.

யாழ். மாநகரப் பகுதியில் மேற்படி மூன்று இடங்களிலும்தான் டெங்கின் தாக்கம் காணப்படுகிறது. இதன் காரணத்தினால் இந்தப் பிரதேசங்களில் தொடர்ந்தும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையை முன்கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை நல்லூரிலும், நாளை சனிக்கிழமை நாவாந்துறையிலும், திங்கட்கிழமை வண்ணார்பண்ணையிலும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறும்.



யாழ். மாநகர சபைச் சுகாதாரப் பகுதியின் சகல பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதார பாதுகாவலர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், கிராமசேவகர்கள், பொலிஸார் போன்றோர் இந்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் ஈடுபட உள்ளனர். இந்த டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையின்போது இந்தப் பிரதேசங்களில் சகல வீடுகளும் தரிசிப்புக்கு உட்படுத்தப்படும்.

இந்த நாள்களில் இந்தப் பகுதியில் மாநகராட்சி மன்றத்தின் கழிவகற்றும் பணிகளும் முன்னெடுக்கப்படும். (ற-17)

## கட்டடம் இடிந்து விழுந்ததில் தொழிலாளர் ஒருவர் காயம்

### மன்னாரில் சம்பவம்



மன்னார், ஜூன் 5

மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தின் பின் பகுதியில் அமைந்திருந்த பழைமையான கட்டடம் ஒன்று இடிக்கப்பட்டபோது திடீரென அது இடிந்து விழ்ந்தது. அதன் இடிபாடுகளுக்குள் சிக்கி தொழிலாளர் ஒருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. காயமடைந்தவர் மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் பின் பகுதிக்கு முழுமையாக சுற்று மதில் அமைக்கப்பட்ட நிலையில் மாவட்டச் செயலகத்தின் பின் பகுதியில் கடந்த காலங்களில் வியாபார நிலையமாக காணப்பட்ட குறித்த கட்டடம் கடந்த சில தினங்களாக உடைக்கப்பட்டு வந்தது.

நேற்றுக் காலை முதல் இரண்டு தொழிலாளர்கள் குறித்த கட்டடத்தின் எஞ்சிய பகுதிகளை உடைத்துக்கொண்டிருந்த போது கட்டடத்தின் கீழே நின்று வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளி ஒருவர் மீது அது திடீரென இடிந்து வீழ்ந்துள்ளது.

குறித்த தொழிலாளியின் கால் கட்டட உடைவுகளில் மாட்டிக்கொண்ட நிலையில் வீதியால் சென்றவர்களின் உதவியுடன் நீண்ட நேரத்தின் பின் குறித்த தொழிலாளி மீட்கப்பட்டு உடனடியாக மன்னார் பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

55 வயதுடைய குறித்த நபரின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதோடு கால் பகுதியில் முறிவு மற்றும் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் தாக்கினர்

## அழுதவாறு கூறி நீதிமன்றில் மருத்துவ சிகிச்சை கோரினர் நீதிமன்ற தாக்குதல் சந்தேகநபர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5
கடந்த மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களில் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் தாம் பொலிஸாராலும், சிறைச்சாலை உத்தியோகத்தர்களாலும் கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர். தமக்கு மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுத்தருமாறு நீதிமன்றில் கோரியுள்ளனர்.
புங்குடுதீவு மாணவி கொலைக்குக் கண்டனம் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது யாழ்.நகரப் பகுதிகளில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 130 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த மாதம் 21 ம் திகதி யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
அவர்களில் ஒரு தொகுதியினரின் வழக்குகள் நேற்றுமுன்தினமும், கடந்த திங்கட்கிழமையும் அழைக்கப்பட்டன.
அதன்போதே சந்தேக நபர்களால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. சந்தேக நபர்களில் சிலர் அழுதவாறு நீதிமன்றில் மருத்துவ சிகிச்சைகள் வழங்குமாறு கோரினர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்த சில சந்தேக நபர்கள் காயங்களுக்கு கட்டுகள் இடப்பட்டிருந்த நிலையில் காணப்பட்டனர். (ந-103)

## பாழடைந்த வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 5
ஊர்காவற்றுறை கரம்பொன்னில், பாழடைந்த வீடு ஒன்றிலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றைப் பொலிஸார் மீட்டுள்ளனர். அது ஊர்காவற்துறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
கரம்பொன் மேற்கு ஜே/54 கிராம அலுவலர் பிரிவில் கடந்த வாரம் மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளது. ரோந்து சென்றபோதே குறித்த பாழடைந்த வீட்டில் இருந்து பொலிஸார் அந்த மோட்டார் சைக்கிளை மீட்டுள்ளனர்.
உரிமை கோரப்படாத நிலையிலுள்ள அந்த மோட்டார் சைக்கிள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ந-4)

## 60 சதவீதமான கிணறுகள் மாத இறுதிக்குள் துப்புரவு

### மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட வலி.வடக்கில்

யாழ்ப்பாணம், ஜூன் 5
வலி.வடக்கில் விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள கிணறுகளில் அறுபது சதவீதமானவை இந்த மாத இறுதிக்குள் துப்புரவு செய்யப்படவுள்ளன. அத்துடன் 12 மில்லியன் ரூபா செலவில் உள்ளக வீதிகளின் புனரமைப்பும் நடைபெறவுள்ளன என்று வலி.வடக்குப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.
வலி.வடக்கில் இரு கட்டங்களாக மக்கள் மீள்குடியேற்றத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். இதுவரையில் 773 குடும்பங்கள், விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியமர்வதற்காகப் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். மூன்று குடும்பங்கள் மாத்திரம் மீளக் குடியமர்ந்துள்ளனர்.
விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள வீதிகள் எவையும் அடையாளம் காண முடியாத நிலையில் பற்றைக்காடுகளாக காணப்பட்டன. தற்போது அவை வெட்டித் துப்பரவு செய்யப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 3 வீதிகள் மற்றும் பிரதேச சபைக்குச் சொந்தமான 23 வீதிகள் என்பன துப்பரவு செய்யப்பட்டுள்ளன. அவற்றைப் புனரமைத்து மக்கள் பாவனைக்கு ஏற்ற வகையில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. புதிய அரசின் நூறு நாள் வேலைத் திட்டத்தில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் இதுவரையில் உயர் பாதுகாப்பு வலயத்தில் விடுவிக்கப்படாத 12 கிராமங்களுக்கும் உரிய 12 மில்லியன் ரூபா நிதியிலேயே வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.
விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள கிணறுகள் யாவும் துப்புரவு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இவற்றை துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யுனிசெப், பாசிக், வைகோ ஆகிய அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்தப் பணிகளை தற்போது முன்னெடுத்துள்ளன. இந்த மாத இறுதிக்குள் 60 சதவீதமான கிணறுகள் துப்புரவு செய்து முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனை விட, வர்த்தலைவிளான் மருதடி பிள்ளையார் ஆலயத்துக்கு புனர்வாழ்வு அதிகார சபையினால் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ந-5)

## 3 ஆயிரம் புசல் விதை நெல் விவசாயிகளுக்காக கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜூன் 5
இந்த ஆண்டில் பெரும்போக நெற்செய்கைக்காக யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் மூவாயிரம் புசல் விதை நெல்லைக் கொள்வனவு செய்துள்ளது.
கொள்வனவு செய்யப்பட்ட விதை நெல் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்பட்ட பின்னர் அவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்று பொது முகாமையாளர் ரி.ரவிமயூரன் தெரிவித்தார்.
இந்த விதை நெல் கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாகவே விவசாயிகளுக்கு வழங்கப்படும். பி.ஜி. 406 இனத்தைச் சேர்ந்த இந்த விதை நெல்லையே கூடுதலாக சங்கம் கொள்வனவு செய்து இருந்தது.
கடந்த போகத்தின்போது இந்த நெல் விவசாயிகளிடம் இருந்து சங்கத்தால் கொள்வனவு செய்யமுடிந்தது. இந்த ஆண்டின் போகத்துக்காக குறைந்தது மூவாயிரம் புசல் நெல்லை சங்கம் கொள்வனவு செய்யமுடிந்தது.
இந்த விதை நெல்லை ஜூலை மாதத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விதை நெல் முழுமையான ஆய்வின் பின்னர் உறுதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-17)

## பொது இடத்தில் புகைத்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 5
சுன்னாகம் நகரப் பகுதியில் பொது இடத்தில் நின்று மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் புகைப்பிடித்த இருவருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் சி.சதீஸ்தரன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தீர்ப்பளித்தார்.
குறித்த இருவரையும் கடந்த 2ஆம் திகதி சுன்னாகம் பொலிஸார் கைது செய்திருந்தனர். அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அபராதம் விதிக்கப்பட்டது. (ந)

## வாக்காளர் தினத்தை முன்னிட்டு இன்று விழிப்புணர்வு செயற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 5
வாக்காளர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாண தேர்தல்கள் திணைக்களத்தால் வாக்காளர் பதிவைத் தூண்டும் துண்டுப் பிரசுர விநியோகமும், தெரு நாடகமும் யாழ்.நகரில் இன்று இடம்பெறவுள்ளது.
கடந்த ஜூன் முதலாம் திகதி தேசிய வாக்காளர் தினமாகும். வடக்கு மாகாணத்தின் பிரதான நிகழ்வு வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்றது. இந்த நிலையில், யாழ்.மாவட்டத்திற்குரிய நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.
யாழ்.மத்திய பஸ் நிலையம் மற்றும் அதனைச்சுற்றியபகுதிகளில்காலை 8 மணியிலிருந்து 9 மணி வரையில் துண்டுபிரசுர விநியோகம் இடம்பெறவுள்ளது. அதன்பின்னர் காலை 9 மணியிலிருந்து 10.30 மணி வரையில் சென்ஜேம்ஸ் பாடசாலை முன்பாக தெரு நாடகமும் நடைபெறவுள்ளது.
ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பதிவு மீளாய்வின் போது வாக்காளர் தமது பெயர்களை, கிராம சேவையாளர் ஊடாகப் பதிவு செய்வதை வலியுறுத்தியே இவை மேற்கொள்ளப்படவுள்ளன. (ந-5)

## வடக்கு முதலமைச்சருக்கு எதிராக பிரதேச சபை சிற்றூழியர் வழக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 5
வலி.கிழக்குப் பிரதேச சபையின் சிற்றூழியர் ஒருவரால் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உட்பட எட்டுப் பேருக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதையடுத்து குறித்த சிற்றூழியருக்கு வழங்கப்பட்ட இடமாற்றத்தை எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில் இடைநிறுத்தி வைக்குமாறும் மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.
வலி.கிழக்குப் பிரதேச சபையில் பணியாற்றும், விளையாட்டரங்க வீதி, கல்வியன்காட்டைச் சேர்ந்த ந.துதிகரன் என்பவரால் தொடுக்கப்பட்ட வழக்கிலேயே, நீதிமன்று இவ்வாறு கட்டளை வழங்கியுள்ளது.
வலி.கிழக்குப் பிரதேச சபையில் இடம்பெற்ற நியமன முரண்பாடுகள் தொடர்பில், ஓய்வு பெற்ற நீதிபதியால் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின் முடிவில், ஓய்வு பெற்ற நீதிபதியால் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அதனை நடைமுறைப்படுத்துமாறு, வடக்கு மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி அமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரைப் பணித்திருந்தார்.
அதற்கமைய, வலி.கிழக்குப் பிரதேச சபையில் பணியாற்றும் சிற்றூழியரான ந.துதிகரனுக்குத் தண்டனை இடமாற்றம் வழங்கப்பட்டது. குறித்த சிற்றூழியர் அதன்பின்னர், கடந்த மாதம் 5 ஆம் திகதி சுகவீன லீவு பெற்றுள்ளார். பின்னர் கடமைக்கு சமூகமளிக்கவில்லை. கடந்த 25 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு முகவரியிட்டு, நெடுந்தீவு அரச வைத்தியசாலையின் மருத்துவ அறிக்கையை சமர்பித்துள்ளார். குறித்த மருத்துவ அறிக்கையில் 20 ஆம் திகதி வரையில் சிகிச்சை பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையிலேயே, யாழ்.மேல் நீதிமன்றத்தில் குறித்த ஊழியர் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். அதில், எதிராளிகளாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபையின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வலி.கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர், வலி.கிழக்குப் பிரதேச சபையின் தற்போதைய தவிசாளர், வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலக பொறுப்பதிகாரி மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
குறித்த வழக்குத் தொடர்பில், யாழ். மேல் நீதிமன்று விடுத்துள்ள கட்டளையில் எதிர்வரும் 24 ஆம் திகதி வரையில், இடமாற்றம் மேற்கொள்ளப்படக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-5)

## பயனாளிகளுக்கு நண்டு வளர்ப்புக் கூடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5
ஊர்காவற்றுறை தம்பாட்டி கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்குட்பட்ட 10 பயனாளிகளுக்கு நண்டு வளர்ப்புக்கான கூடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி அன்ரன் யோகநாயகம் தெரிவித்துள்ளார்.
பாசிக் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கடல்நீர் வளர்ப்புத் திட்டத்தின், பெரு நண்டு வளர்ப்புத் திட்டத்தில் இணைந்த பயனாளிகளுக்கு இந்தக் கூடுகள் வழங்கப்பட்டுள்ளன.
அதிகரித்த கேள்வியை நிவர்த்தி செய்யவும் பின்தங்கிய கிராம மக்களின் வாழ்வாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யவும் இந்த பெரு நண்டு வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதற்கான பயிற்சிகள் ஏற்கெனவே நிறுவனத்தால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.– என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (ந)

## அனுமதியின்றி கடலட்டை பிடித்த 7 பேர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 5
வேலணைப் பிரதேசத்தில் அனுமதிப் பத்திரம் இன்றி கடல் அட்டை பிடித்த 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக, கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பி.ரமேஷ் கண்ணா தெரிவித்தார்.
கடந்த 2 ஆம் திகதி வேலணை கடற் பிரதேசத்தில், கடற்தொழில் திணைக்களத்தின் அனுமதிப் பத்திரம் இன்றி கடல் அட்டை பிடிப்பில் உள்ளூர் மீனவர்கள் ஈடுபடுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, தேடுதல் முன்னெடுக்கப்பட்டிருந்தது.
இதன்போதே குறித்த 7 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் அன்றைய தினமே, ஊர்காவற்றுறை நீதிவானின் இல்லத்தில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் இது தொடர்பிலான வழக்கு எதிர்வரும் 16 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
இதேவேளை, கடல் அட்டை பிடிப்பில் ஈடுபடுவதற்கு யாழ்.மாவட்ட கடற்தொழில் திணைக்களத்திடம் அனுமதி பெற்றுக்கொள்வதில் எந்தத் தடையும் இல்லை என்று உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ந-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போதைப்பொருள் பாவனையற்ற இலங்கையை உருவாக்குவோம்

## சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு வடக்கு, கிழக்கில் நேற்று விழிப்புணர்வுப் பேரணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

சர்வதேச புகைத்தல் மற்றும் மது ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விழிப்புணர்வுப் பேரணிகள் நடத்தப்பட்டன. அதில் பாடசாலை மாணவர்களும், பொது அமைப்புகளும், பொது மக்களும் கலந்து கொண்டனர்.

**வவுனியா**

வவுனியா பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பேரணி வவுனியா தமிழ் மகா வித்தியால முன்றலில் ஆரம்மானது. பேரணி வவுனியா நகர பகுதியில் உள்ள மணிக்கூட்டு கோபுர வீதியை வந்த டைந்து. அங்கிருந்து பஸார் வீதியுடாக வவுனியா மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது. பின்னர் வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி மோ.சரஸ்வதியிடம் வவுனியா மாவட்டத்தில் போதை பொருள் பாவனைக்கு எதிரான செயற்பாட்டை விரைவு படுத்துமாறு கோரும் மனு கையளிக்கப்பட்டது. அதன் பின்னர் போதை பொருள் பாவனையை தடுக்கும் வகையிலான விழிப்புணர்வு நாடகம் நடத்தப்பட்டது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் மாணவர்களால் புகைத்தல் மற்றும் மதுபான பாவனைக்கு எதிராக விழிப்புணர்வு கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவர்கள் இந்த கவனவீர்ப்பு பேரணியை நடத்தினர். மகா வித்தியாலயத்தில் ஆரம்பமான பேரணி கோசங்களை எழுப்பியவாறும், சுலோகங்களை ஏந்தியவாறும் ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையம் வரை சென்றடைந்து முடிவுற்றது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிமனை மற்றும் முள்ளியவளை பொலிஸ் மற்றும் முள்ளியவளை தண்ணீரூற்று வர்த்தகர் சங்கம் இணைந்து பாடசாலை மாணவர்களையும் இணைத்து புகைத்தலுக்கு எதிரான பேரணியை நடத்தினர்.

இதில் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் மற்றும் முள்ளியவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.அபயசேகர மற்றும் வர்த்தகர் சங்க பிரிதிநிதிகள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்க பிரதிநிதிகள், வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள், வித்தியானந்த கல்லூரி , கலைமகள் வித்தியாலயம் தண்ணீரூற்று இ.த.க. பாடசாலை . மற்றும் தண்ணீரூற்று முஸ்லீம் மகா வித்தியாலய மாணவர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



பேரணி வித்தியானந்த கல்லூரியில் ஆரம்பித்து மாஞ்சோலை வைத்தியசாலை வரை சென்று இறுதியாக முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முடிவுற்றது.

**மன்னார்**

மன்னாரில் மன்னார் தலைமை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச புகைத்தல் மற்றும் மது எதிர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது. மன்னார் பிரதான பாலத்துக்குகு முன் பேரணி ஆரம்பமானது. அதில் புகைத்தல் மற்றும் மது பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான பதாகைகள் முச்சக்கர வண்டிகளில் காட்சிப்படுத்தப்பட்டு அவை பவனியாக சென்றன.

சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அழகக்கோன், பிரதி பொலிஸ் அத்தியட்சகர் திரியந்த பீரிஸ், மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அஜந்த றொட்ரிகோ, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், சர்வமதத்தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், சிவில் பாதுகாப்பு குழு பிரதிநிதிகள் எனப் பலர் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணி மன்னார் நகர மண்டபத்தில் முடிவடைந்தது. அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு விழிர்ப்புணர்வு நிகழ்வுகள் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

**மட்டக்களப்பு**

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை நினைவுகூரும் விசேட விழிப்புணர்வுப் பேரணியும் 'திரிய சவிய' வாழ்வாதாரக் கடன் வழங்கும் வைபவமும் நேற்று பனங்காட்டில் இடம் பெற்றன.

ஆலையடிவேம்பு பிரதேச திவிநெகும திணைக்கள சமுக அபிவிருத்திப் பிரிவின் சமுக அபிவிருத்தி உதவியாளர் எம். தெய்வேந்திரனால் ஏற்பாடு செய்யப்பட்ட புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி கிராம மட்ட திவிநெகும அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களின் பங்கு பற்றுதலுடன் பனங்காடு தபால் நிலையச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி சாகாம வீதியிலுள்ள ஆலையடி வேம்பு தெற்கு வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிக்கு முன்னால் நிறைவடைந்தது.

அதேவேளை 'என்றும் போதையற்ற ஒழுக்கம் நாட்டுக்குத் தேவை' எனும் தொனிப்பொருளில் மண்முனை தென்மேற்கு பிரதேச பொது மக்களால் எதிர்ப்பு பேரணி நடத்தப்பட்டது. இந்தப் பேரணி கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு ஆகிய இடங்களில் இருந்து மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகம் வரை சென்றது.

பிரதேச செயலகத்தை அடைந்ததும் உதவிப்பிரதேச செயலாளர் ந.நவேஸ்வரனால் மது, புகைத்தல் எதிர்ப்பு, தொடர்பான விளங்கங்கள் வழங்கப்பட்டன. இதனை வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களமும், சமூக அபிவிருத்திப் பிரிவும், சிறுவர் மற்றும் சுகாதார அமைச்சும் இதனை ஏற்பாடு செய்திருந்தன.

(ற-21,10,421,433,56)

# மின்சார வசதியை ஏற்படுத்துமாறு சிவநகர் கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 5

தமக்கு இதுவரை மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள புதுக்குடியிருப்பு சிவநகர் கிராம மக்கள், இது தொடர்பாக பல தரப்பினருக்கு அறிவித்திருந்த போதும் எவ்வித பயனும் இல்லை என்றும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

போர் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியமர்ந்த புதுக்குடியிருப்பு சிவநகர் கிராமத்தில் உள்ள 4 வீதிகளை உள்ளடக்கிய 40க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கே இவ்வாறு மின்சாரம் கிடைக்கப் பெறவில்லை என அந்தக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பில் பல பகுதிகளில் வடக்கின் வசந்தம் மூலம் மின்சாரம் கிடைத்தபோதும் தங்களுக்கு அது கிடைக்கவில்லை என்றும் அதனால் பாடசாலை மாணவர்கள் முதல், வயதிபர்கள் வரை மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான புதுக்குடியிருப்பு மின்சார சபை, முல்லைத்தீவு மின்சார சபை, யாழப்பாணம் மின்சார சபை போன்ற பல இடங்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் அறிவித்திருந்த போதும் வெறும் ஏமாற்றமே கிடைத்ததுள்ளது என்றும், உரியவர்கள் இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சிவநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் தெரிவித்தனர்.

(ற-21)

# அண்மையில் பெய்த மழையால் சிறு தானியச் செய்கை பாதிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 5



முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மே மாதம் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறுதானியச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதென முல்லைத்தீவு மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்தின் சிறிய மற்றும் நடுத்தர மற்றும் பெரிய நீர்ப்பாசன குளங்களின் கீழ் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை உப உணவுப்பயிர் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களினூடாக நிலக்கடலை, எள்ளு போன்ற பயிர்களும் பயிரிடப்பட்டிருந்தன. கடந்த மாதம் பெய்த மழையால் அதிகளவான பயிர்கள் அழிவடைந்துள்ளன. முத்தையன் கட்டு, துணுக்காய், ஒட்டுசுட்டான் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் சிறுதானியச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒரு மாதமான பயிர்கள் மழை வெள்ளத்தால் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ற)

# பெண்ணின் சங்கிலி அறுத்த திருடன் அசந்து தூங்கும்போது சிக்கினான்

## சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி, ஜூன் 5

வீதியில் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடிய ஒருவர் ஒரு வாரத்தின் பின்னர் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவேளை பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் கடமை முடித்து சாவகச்சேரி கெருடாவிலில் உள்ள வீட்டுக்குச் சைக்கிளில் சென்ற பெண் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றிருந்தார். அந்தப் பெண் மோட்டார் சைக்கிள் இலக்கத்தைக் குறித்துக் கொண்டதுடன், அது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். மோட்டார் சைக்கிள் இலக்கத்தையும் பொலிஸாரிடம் கொடுத்தார்.

இந்தநிலையில் நேற்று அதிகாலை 5 மணியளவில் குறித்த பெண்ணின் உறவினர் ஒருவர் சாவகச்சேரிச் சந்தைக்குச் சென்றுள்ளார். அப்போது குறித்த மோட்டார் சைக்கிள் சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்தது. அதை அடையாளம் கண்ட உறவினர் உரிமையாளர் யார் என விசாரித்துள்ளார். அங்கிருந்தவர்கள் கடையொன்றின் முன்னால் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ஒருவரைக் காட்டினார்கள்.

பெண்ணின் உறவினர் சம்பவத்தை அங்கிருந்தவர்களிடம் தெரிவிக்க சந்தையில் நின்றிருந்தவர்கள் சேர்ந்து குறித்த நபரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குறித்த நபர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை, சுழிபுரம் வழக்கம்பரை சிவபூமிச் சந்தியில் கடந்த சனிக்கிழமை மாலை கடைக்குச் சென்ற பெண்ணை வீதியில் வைத்து தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த 7 பவுண் தாலிக் கொடியையும் தங்கச் சங்கிலியையும் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் நகைகளை அபகரிக்க முற்பட்ட வேளையில் பெண் துணிச்சலுடன் போராடியபோதிலும் யாரும் உதவிக்குச் செல்லாததால் பெண்ணை மோசமாகத் தாக்கிவிட்டு நகைகளை அபகரித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ஜுன மகேந்திரனை எதிர்ப்பதன் பின்னணி அனைவருக்கும் தெரியும்

## சபையில் சாடினார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜூன் 5

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அர்ஜுன மகேந்திரன் நியமிக்கப்பட்டதை எதிர்க்கும் பின்னணியில் உள்ள நிகழ்ச்சி நிரல் என்ன வென்பதை இன்று முழு நாடும் புரிந்து கொண்டுள்ளது என நேற்றுமுன்தினம் சபையில் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிர மசிங்க,வெளிநாட்டு பிரஜையொருவருக்கு இலங்கையில் தொழில் புரிவதற்கோ, வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கோ எந்தவிதமான தடையும் கிடையாது என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் விசேட அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் காலை 9.30 மணிக்கு கூடியது.

இதன்போது மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தொடர்பாக தினேஷ் குணவர்த்தனவின் கேள்விக்கு பதிலளித்து விசேட உரையொன்றை ஆற்றும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். பிரதமர் சபையில் தொடர்ந்தும் உரையாற்றுகையில்;

வெளிநாட்டு பிரஜையான கே.பத்மநாதன் என்ற கே.பி.க்கு இலங்கையில் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு கே.பியை ஒப்படைக்குமாறு பல நாடுகள் வேண்டுகோள் விடுத்த போதிலும்அதனைநிராகரித்துகேபியை பாதுகாக்க இலங்கை அரசு முயற்சிகளை மேற் கொண்டது.

எந்தவொரு நாட்டினதும் பிரஜையாகுவதற்கு சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும். அது சட்டரீதியானது. இதேபோன்று கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவில் சத்தியப்பிரமாணம் செய்தார்.

பாலித கோஹன்ன ஆஸ்திரேலியாவில் பிரஜையாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார். கடந்த ஆட்சியாளர்கள் அமெரிக்கா பிரஜையை இங்கு வரவழைத்து நாட்டின் பாதுகாப்பை ஒப்படைக்கும் போது நீங்கள் இது தொடர்பில் கேள்வியெழுப்பியிருந்தால் அதனை நியாயப்படுத்தலாம். 2005 நவம்பர் மாதம் 25 ஆம் திகதி தான் கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராகப் பொறுப்பேற்றார்.

அவருக்கு இரட்டை பிரஜாவுரிமை நவம்பர் மாதம் 30 ஆம் திகதியே கிடைத்தது. உங்களது சிந்தனைக் கமைய அமெரிக்க பிரஜையொருவருக்கு அவ்வாறான பதவி வழங்கப்பட்டமை நியாயமானதாக இருக்கலாம். சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக பதவி வகித்தவர் ஒரு அமெரிக்கர் ஆவார். வெளிநாட்டுசேவையை ஆஸ்திரேலிய பிரஜைக்கு வழங்கியபோது நீங்கள் கேள்வியெழுப்பவில்லை.

ஆனால் அன்று வாய்கள் மூடி மௌனிகளாக இருந்தவர்கள் அர்ஜுன மகேந்திரனின் பிரஜாவுரிமை தொடர்பாக கேள்வியெழுப்புகின்றனர். அதேவேளை இன்று உங்களுக்கு கேள்வியெழுப்புவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன். கடந்த ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன அமெரிக்க பிரஜைகள் தொடர்பாக கேள்வி யெழுப்பியிருந்தால். வெள்ளை வானிலேயே பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.

இன்று வெள்ளை வானில் கடத்தல்கள் இல்லை. எனவே இன்று பலரது வாய்கள் திறக்கப்பட்டுள்ளன. அமெரிக்க பிரஜாவுரிமையைக் கைவிடும் எவ்விதமான நடவடிக்கைகளையும் கோத்தபாய ராஜபக்ஷ இதுவரையில் மேற்கொள்ளவில்லை. அமெரிக்க பிரஜையொருவருக்கு வேறொரு நாட்டில் பிரஜையாகும் உரிமையுள்ளது. ஆனால் அமெரிக்காவுக்கு துரோகமிழைத்தால் வழக்கு தொடர்வதற்கு அமெரிக்காவுக்கு அதிகாரம் உள்ளது.

இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர் முதலில் அமெரிக்க பிரஜையாக கருதப்படுகின்றார். இதன் காரணமாகத்தான் எமது நாட்டில் மக்கள் பிரதிநிதிகள், ஜனாதிபதி ஆகியோர் இலங்கை பிரஜையாக இருக்க வேண்டுமென்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே அரசில் பதவிகளை விடுத்து, ஏனைய எந்த பதவிகளுக்கும் வெளிநாட்டவர்கள் நியமிக்கப்படலாம். உதயங்கன வீரசிங்க பாலித கோஹன்ன, லக்ஷ்மன் ஜயவீர, ஜாலிய விக்கிரம சூரிய போன்ற பெயர் பட்டிய லொன்றை உங்களுக்கு கையளிக்க முடியும்.

இவர்கள் அனைவரும் அரசில் முக்கிய பதவிகளை வகித்தவர்கள். இவர்கள் அனைவரும் வெளி நாட்டு பிரஜைகள். கடந்த ராஜபக்ஷ ஆட்சியில் பலர் சீசல்ஸ், ஏமன் தீவுகள், பிரிட்டன், அன்டோரா, மொரோக்கோ, உகண்டா போன்ற நாடுகளில் பிரஜாவுரிமைகளை பெற்றுக் கொண்டுள்ள னர். அவ் வாறு எவரும் வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்றுக்கொள்ளாமல் இருந்தால் அது தொடர்பில் எனக்கு சான்றிதழ் வழங்குங்கள். அர்ஜுன மகேந்திரன் இலங்கையில் பிறந்தவர், இங்கு வாழ்ந்தவர், தொழில் புரிந்தவர், கல்விமான். அவர் ஆரம்பகாலத்தில் இலங்கை மத்திய வங்கியில் 11 வருடங்கள் தொழில் புரிந்தவர். அதன்பின்னர் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்தார். 2002ஆம் ஆண்டில் இலங்கை முதலீட்டு சபை தலைவர் பதவி வகித்தார். 2004 வரை அப்பதவியில் இருந்தார். பின் னர் ராஜபக்ஷ ஆட்சி உருவானது. அதன் பின்னர் அவர் நாட்டை விட்டு வெளியேறினார். அர்ஜுன மகேந்திரன் மட்டுமல்ல பலர் ராஜபக்ஷ கூட்டத்தினருக்குப் பயந்து நாட்டை விட்டு வெளியேறினர்.

ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் போன்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எமக்கு இல்லாமற் போயுள்ளனர். அன்று இந்த நாட்டில் ஒரு பயங்கரமான இருண்ட யுகமே காணப்பட்டது. இதன் காரண மாகவே அர்ஜுன மகேந்திரன் தொழில்புரிய சிங்கப்பூர் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவ்வாறு அவர் சென்றிருக்காவிட்டால் லசந்த விக்கிரமதுங்க, பிரதீப் எக்னெலியகொட போன்ற பலருக்கு ஏற்பட்ட நிலைமை அர்ஜுன மகேந்திரனுக்கு ஏற்பட்டிருக்கும். இதனால் அவர் சிங்கப்பூருக்கு சென்று தனது உயிரைப் பாதுகாத்துக் கொண்டார்.

இவ்வாறானதோர் சூழ்நிலையிலேயே கடந்த ஜனவரி 8 ஆம் திகதி புதிய யுகம் மைத்திரிபால சிறிசேன தலைமையில் உருவாகியது. இதன் பின்னர் உயிர்ப் பயத்தால் நாட்டை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் நாட்டுக்கு வர ஆரம்பித்தனர்.

அத்தோடு மரண பயத்தால் வெளிநாடு சென்றவர்களை மீள இங்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். அர்ஜுன மகேந்திரனை மட்டுமல்ல அன்று ராஜ பக்ஷவின் பயங்கரமான யுகத்துக்கு பயந்து வெளிநாடு சென்ற பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிய ஷாந்த ஜயகொடியையும் வரவழைத்தோம்.

அன்றைய ஆட்சியில் பழிவாங்கப்பட்ட சரத் பொன்சேகா மற்றும் ஷிராணி பண்டாரநாயக்க போன்றோருக்கு நீதியை பெற்றுக் கொடுத்தோம். ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பொருளாதார நிபுணரல்லாத ஒருவர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பல ஊழல் மோசடிகள் இடம் பெற்றன. பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்ட பிரான்ஸ் நாட்டின் டொமினிக் ஸ்ரிங்கனின் சேவையும் மத்திய வங்கிக்கு பெற்றுக் கொள்ளப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது. ராஜபக்ஷவை போன்று பெண்களுக்கு எதிராக பாலியல் வன்முறையில் ஈடுபட்டோரை நாம் இலங்கைக்கு அழைத்துவரவில்லை. இலங்கையில் பிறந்து வளர்ந்த கல்வி நிபுணத்துவம் உள்ளவர்களை நாம் இங்கு கொண்டு வந்தோம். நீங்கள் நிபுணத்துவமிக்கவர்களை கண்டு பயப்படுகின்றீர்கள் ஏனென்றால் முன்னைய ஊழல் மோசடிகள் வெளியாகும் என்ற அச்சமே காரணமாகும். அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. அவருக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச் சாட்டுக்களை விட பல மடங்கு ஊழல் மோசடிகள் தற்போது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எனவேதான் எமது நல்லாட்சியின் பயணத்துக்கு தடை போடுகின்றனர். கூச்சல் போடுகின்றனர். தினேஷ் குணவர்த்தன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர் அல்ல. இன்று சுதந்திரக் கட்சியை கட்டியெழுப்ப ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன எடுக்கும் முயற்சிகளுக்கு நீங்கள் தடைவிதிக்கின்றீர்கள். உங்களுக்கு அமைச்சர் பதவிகள் தேவையென்றால் என்னிடம் கூறுங்கள். அதற்கான உதவிகளை நான் செய்கிறேன்.

உங்களது இனவாதம், மதவாதம் மற்றும் குலவாதத்தை ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் நிராகரித்துள்ளனர். அதனை மெதமூலனவுக்கு அனுப்பி வைத்தனர். எனவே மீண்டும் இனவாதம் தலைதூக்க இடமளிக்க மாட்டோம்.

கடந்த தேர்தலில் நீங்கள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவை தோல்வியடையச் செய்யவே முயற்சிகளை மேற்கொண்டீர்கள். அண்மையில் சுசில் பிரேம ஜயந்த வெளியிட்ட அறிக்கையிலும் ஜனாதிபதியை சாடியுள்ளார். ஆனால் நாங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொள்வோம். உண்மைக்கான, சத்தியத்துக்கான பாதையில் செல்வோம். திருடர்கள் மோசடிக் காரர்களை நிராகரிப்போம். ஒழுக்கமுள்ள இலங்கையை கட்டியெழுப்புவோம். – என்றார். (ற)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: மனதில் உற்சாகம் அதிகரிக்கும். மனைவியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். பணியாளர்கள் வேலை விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**இடபம்**: ஆரோக்கிய விடயத்தில் அக்கறை உருவாகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். அரசு வகை எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். மனைவி வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும்.

**மிதுனம்**: இனிமையாகப் பேசி அனைவரையும் கவர்வீர்கள். சுப விடயம் குறித்த பேச்சில், நல்ல முடிவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், அதிர்ஷ்டவசமாக ஆதாயம் உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் விசுவாசமாகப் பணியாற்றுவர்.

**கடகம்**: சாதுரியமாகச் செயற்பட்டு நற்பலன் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் இல்ல சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**சிங்கம்**: திடீர் செலவால், சேமிப்பு கரையும். மனைவியின் செயல்பாடு மகிழ்ச்சி அளிக்கும். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப வருமானம் காண்பீர்கள். உறவினர்களின் ஆதரவுடன் சுப நிகழ்ச்சி நடந்தேறும்.

**கன்னி**: அறிமுகம் இல்லாதவரிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில், நிர்வாகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுவீர்கள். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்

**துலாம்**: குடும்பத்தினரின் ஒத்துழைப்பு, வளர்ச்சிக்கு துணைநிற்கும். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வீடு வந்து சேரும். அரசு வகையில், நன்மை கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்**: தொழில், வியாபாரத்தில், புதிய மாறுதல் மூலம் நன்மை அடைவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்கும் முயற்சி வெற்றி பெறும். பிள்ளைகளின் எதிர்கால நலன் குறித்து, ஆலோசனை செய்வீர்கள்.

**தனுசு**: சமூகத்தில் நல்லவன் என பெயர் பெறுவீர்கள். கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு மறையும்.

**மகரம்**: சுதந்திர மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்கவும். சுப விடயத்தில் எதிர்பார்த்த முடிவு கிடைக்கும்.

**கும்பம்**: உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் ஆச்சரியப்படுவர். தொழில், வியாபாரத்தில், வருமானம் பெருகும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்**: சமயோசிதமாக செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில், சாதனை புரிவீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

## வித்தியாபாலனுக்கு டாக்டர் பட்டம்

பொலிவூட் நடிகை வித்தியாபாலனின் கலைச் சேவையை பாராட்டி ராய் பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

கான்கள் ஆதிக்கம் செலுத்தி வரும் பொலிவூட்டில் அவர்களுக்கு நடிப்பில் போட்டியாக உருவானவர் வித்தியாபாலன். பொலிவூட்டில் கான்கள் வெற்றிகரமாக உள்ள நிலையில் உங்கள் பெயரில் கான் இல்லாமல் வெற்றி பெற்றுள்ளீர்கள். உங்கள் பெயரில் கானை சேர்ப்பீர்களா என்று கேட்டதற்கு, வேண்டுமானால் அவர்கள் தங்களின் பெயரில் பாலனை சேர்க்கட்டும் என்று தில்லாக கூறியவர் வித்தியா பாலன்.

நிஜத்திலும், படங்களிலும் வித்தியாசமான வித்யாபாலனுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

## விண்டோஸ் 10




மைக்ரோசொப்ட் நிறுவனம் வசதிகள் அதிகரிப்பட்ட விண்டோஸ் 10 வேர்சன் இயங்குதளத்தை ஜூலை 29 ஆம் திகதி 190 நாடுகளில் வெளியிடுகிறது. இது குறித்து மைக்ரோசொப்ட் நிறுவனம் விடுத்துள்ள அறிவிப்பில், உலகம் முழுவதும் 40 லட்சம் மக்களின் கருத்துக்கள் கேட்கப்பட்டு, சோதனை செய்யப்பட்டு 150 கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்காக விண்டோஸ் 10 தயார் செய்யப்பட்டுள்ளது. கணினி தொழில் நுட்பத்தில் புதிய சகாப்தத்தை படைத்து, புதிய தலைமுறையை இது உரு வாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, விண்டோஸ் 7 மற்றும் 8.1 வேர்சன் பயன்படுத்துவோர்கள் வெளியீட்டு நாளன்று, விண்டோஸ் 10 வேர்சனை இலவசமாக அப்கிரேட் செய்யலாம்.

கடந்த 29 ஆண்டு கால பயணத்தில், இந்த வேர்சனுடன் விண்டோஸ் தொழில்நுட்பத்தை நிறுத்தப்போவதாக மைக்ரோசொப்ட் தெரிவித்துள்ளது.

## அசத்திய மணமகள்



திருமணம் நடைபெறும் இடத்துக்கு குதிரை வண்டிகளிலோ அலங்கார ஊர்திகளிலோ தாம் அழைத்து வரப்படுவதையே மிகச் சிறந்த வழிமுறையாக மேற்குலக நாடுகளைச் சேர்ந்த மணமகள்மார் கருதுவது வழமை.

ஆனால் பிரிட்டனைச் சேர்ந்த ஜெனி பக்லெப் என்ற மணமகளோ தனது திருமணத்தின் போது திருமணம் நடைபெறும் இடத்துக்கு பிரேதப் பெட்டி யொன்றில் வந்திறங்கி அனைவரையும் வியப் பில் ஆழ்த்தியுள்ளார்.

ஜெனி பயணம் செய்த பிரேதப்பெட்டியானது அறுவடை இயந்திரத்துடன் இணைக்கப்பட்டு மோட்டார் சைக்கிள் ஒன்றால் இழுத்துச் செல்லப்பட்டது. மோட்டார் சைக்கிள் அபிமானியான தனது சகோதரர் ரொரை கௌரவப்படுத்தும் வகையிலேயே ஜெனி இவ்வாறு விநோதமான முறையில் திருமணம் நடைபெறும் இடத்துக்கு வந்துள்ளார்.

ஜெனி சவப்பெட்டியில் திருமணம் நடைபெறும் இடத்திற்கு வரும் திட்டத்தை மணமகனான கிறிஸ்தோப்பர் லொக்கெட்டுக்கு கூட தெரிவிக்காது இரகசியமாக வைத்திருந்துள்ளார்.

இதன் காரணமாக திருமணம் நடைபெறும் இடத்துக்கு கொண்டு வரப்பட்ட பிரேதப் பெட்டியில் ஜெனி இருந்ததைக் கண்டதும் மணமகன் உட்பட அனைவரும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## ரிலாக்ஸா வாசியுங்க...

பல ஆண்டுகளாக ஃபேர் அன் லவ்லி மார்க்கெட்டில் விற்பனையாகுது. அப்படின்னா கறுப்பான பெண்களே நாட்டில் இருக்கக்கூடாது அல்லவா.!
இதுக்கு போடுங்கய்யா வழக்கு

## சரத்குமாருக்கு எதிராக களமிறங்கும் நாசர்



ஜூலை 15 ஆம் திகதி நடிகர் சங்கத் தேர்தலை நடத்த திட்டமிட்டு இருக்கிறார்கள். நடிகர் சங்கத் தலைவர் பதவிக்கு நாசர் போட்டியிடத் திட்டமிட்டு இருக்கிறார்.

தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு 2006 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை தலை வராக இருந்து வருகிறார் சரத்குமார். 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடிகர் சங்கத் தேர்தல் நடை பெறுவது வழக்கம். 2006, 2009, 2012 ஆகிய மூன்று வருடங் களுமே தலைவர் பதவிக்கு சரத்குமாரை யாரும் எதிர்த்து போட்டியிடவில்லை.

இந்த நிலையில் 2015 ஆம் ஆண்டுக்கான நடிகர் சங்கத் தேர்தலை அறிவித்திருக்கிறார்கள். இந்த முறை ஜூலை 15 ஆம் திகதி சினி மியூசிசியன் யூனியன் வளாகத்தில் தேர்தல் நடைபெற இருக்கிறது.

நடிகர் சங்கத் தலைவர் தேர்தலில் சரத்குமார் மற்றும் விஷால் இருவருக்கும் இடையே நேரடி போட்டி உருவாகி இருக்கிறது. தொடர்ச்சியாக 4 ஆவது ஆண்டாக போட்டியிட முடிவு செய்திருக்கிறார் சரத்குமார். விஷால் கூட்டணியில் இருந்து நாசர் தலைவர் பதவிக்கும், பொது செயலாளர் பதவிக்கு விஷாலும் போட்டியிட முடிவு செய்திருக்கிறார்கள். பல்வேறு குளறுபடிகள் நடைபெற்று வருவதால் இந்த முறை தேர்தல் பயங்கர விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



20 ஆண்டுகளுக்கு முன்னர் நாகர்கோயில் மத்திய மாகா வித்தியாலத்தின் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட 21 மாணவர்களை நினைவுகூரும் வகையில் நினைவுத் தூபி ஒன்று அமைக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல்லை கடந்த 2 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நட்டனர்.

# போதையில் இளைஞர்கள் வீதியில் கூடி நின்று சேஷ்டை

## நடவடிக்கை எடுக்குமாறு திருநாவற்குள மக்கள் கோரிக்கை

வவுனியா, ஜூன் 5

வவுனியா, திருநாவற்குளத்தில் உள்ள 1ஆம், 2ஆம் ஒழுங்கைப் பகுதியில் இளைஞர்கள் சிலர் மதுபோதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மாலை 5 மணிக்கு அந்தப் பகுதியில் இளைஞர் குழுக்கள் ஒன்று கூடுகின்றனர் என்றும், அவர்களில் சிலர் மதுபோதையில் வீதியால் செல் லும் பெண்களுடன் தகாத வார்த்தைப் பிரயோகம் மேற்கொள்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. அத்துடன் அவர்கள் உரத்துச் சத்தமிடுவதால் அயலில் உள்ளவர்களும் குறிப்பாக சிறுவர்களும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வடக்கில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களைக் கருத்தில் கொண்டு பொலிஸார் இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-402)

# மாணவர்கள் கௌரவிப்பு

வலி.வடக்கு, ஜூன் 5

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் கடந்தாண்டு இடம் பெற்ற க.பொ.த சாதாரண் பரீட்சையில் இளவாலை பகுதியில் சிறந்த பெறு பெறுகளை பெற்ற மாணவ மாணவிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு சங்கத் தலைவர் எஸ்.ரிசாந்தன் தலைமையில் சங்க வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக தமிழ் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, மெய்யியல் துறையின் சிரேஷ்ட விரிவுரை யாளர் கே.சிவகரன், சுன்னாகம் றோட்டறிக் கழகத் தலைவரும் அதிபருமான எஸ்.வாமதேவன்



மற்றும் அன்ரன் ராஜா ஆகியவர்கள் கலந்து கொண்டு மாணவர் களுக்கான பரிசில்களை வழங்கினர். (ற-86)

# உடுவில் வாள்வெட்டு சம்பவம்: சந்தேகத்தில் ஒருவர் கைது

வலி.வடக்கு, ஜூன் 5

உடுவில் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம் பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்படையவர் எனக் கருதப்படும் பெண் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத் தப்பட் டுள்ளார்.

தலையில் வாள் வெட்டுக்கு உள்ளாகிப் படுகாயத்துடன் சேர்க்கப்பட்டவரான வலி.வடக்கு பிரதேச சபை ஊழியர் கருணாகரனின் மனைவியின் தாயாரே சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மூளாயைச் சோந்தவர் எனவும் இவரே தனது உறவினர் மற்றும் பிள்ளைகள் ஏனையவர்களையும் அழைத்து வந்து குறிப்பிட்ட சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக்கருதப் படும் மேலும் சிலரை கைது செய்ய சுன்னாகம் பொலிஸார் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதுடன் புலன் விசாரணைகளையும் மேற் கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-86)

2 ஆம் ஆண்டு நினைவலைகள்



திருமதி வாலாம்பிகை தியாகராஜா
வையகத்துள் அறிமுகம்
01.02.1938
தெய்வத்துள் சங்கமம்
25.06.2013
திதி: திருதியை
(05.06.2015 வெள்ளிக்கிழமை)

ஆண்டுகள் இரண்டாகிவிட்டாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கின்றோம் எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் அன்பான நினைவுகள் என்றும் எம்மை விட்டு நீங்காதம்மா
இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

283/12, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
...
மருமக்கள், உறவினர்கள்.

# பாடசாலை மாணவர் கற்றலுக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 5

கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இரண்டு பாடசாலை மாணவர்களின் கல்வி வசதிக்கு கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட விநாயகர் ஆலயம் நிதி உதவியை வழங்கியுள்ளது.

ஆலயத்தின் நலிவுற்றோருக்கான ஒதுக்கப்பட்ட உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த இரண்டு மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு ஒரு தொகை நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. அதன்போது ஆலய பரிபாலன சபையின் தலைவர் ஜெ.முத்துக்குமாரசாமி அவர்களினால் இந்த நிதி மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. (ற-17)

இறைபாதங்களில் அமைதியுற வேண்டுகின்றோம்

10 ஆம் வருட நினைவு | முதலாம் வருடநினைவு

பிறப்பு 14.04.1922 | பிறப்பு 14.03.1934



இறப்பு 25.03.2005 | இறப்பு 05.06.2014

அமரர் பிரகாசம் அந்தோனிப்பிள்ளை | அமரர் அந்தோனிப்பிள்ளை சிசிலியா

கண்ணின் கருமணி போல எமைக் காத்து வந்தீரையா
உம்மிலிருந்து தொலைவில் இருக்கின்றோமே - என
எண்ணும் போதெல்லாம் உணர்கின்றோம் வெறுமையை

எம் தாயையும் இழந்து சிந்தை கலங்கி நிற்கின்றோம்
தாயானவளே நீயே தந்தையாய் எமைத் தாங்கி நின்றீரம்மா

ஆண்டுகள் கடந்து அகவை அதிகமானாலும் இழந்து போகாது உமை எம் நெஞ்சம்
சத்தம் இன்றி கதறுகின்றன - எம் மனம் நாம் தவறவிட்ட நேசங்களை நினைந்து.
இறைபாதங்களில் அமைதியுற வேண்டுகின்றோம்.

98/9, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
077 005 9359

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(6167)(45.7.3)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22.08.1948



மறைவு
17.05.2014

அமரர் பொன்னுத்துரை பாலிதராஜா



ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எங்கள் மனம்
எம் வாழ்வில் ஒளி விளக்காய்
என்றென்றும் ஒளிர்ந்தவரே!
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
என்றும் மறவோம் உங்கள் அன்பை

...கோட்டை வீதி,
குளப்பிட்டி, கொக்குவில்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று உலக சுற்றுச் சூழல் தினம்: 11ஆம் திகதிவரை விழிப்புணர்வு

## வடக்கு சுற்றாடல் அமைச்சர் அறிவிப்பு

தென்மராட்சி, ஜூன் 5

இன்றைய தினத்தை உலக சுற்றுச் சூழல் தினமாகக் கடைப்பிடிக்கு மாறும் – இன்று முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயற் றிட்டங்களை மேற்கொள்ளுமா றும் வட மாகாண விவசாய கமநல சேவைகள் கால் நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச் சர் பொ.ஐங்கரநேசன் திணைக் களத் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது குறித்து குறிப்பிடப்பட்டுள்ள தாவது:–

இந்த வருட சுற்றாடல் தின கருப் பொருளாக 'ஏழு பில்லியன் கனவு கள் ஒரு கிரகம். கவனத்தோடு நுகர்வோம்' என்பது தெரிவு செய் யப்பட்டுள்ளது.

உலகின் தற்போதைய சனத்தொகை ஏழு பில்லியன். அதிகரித்துச் செல் லும் மக்கள் தொகையால் பேராசை யுடன் அளவுக்கு அதிகமாக இயற்கை வளங்கள் நுகரப்படுவதே இன்றைய சுற்றுச்சூழல் அனர்த் தங்களுக்கான பிரதான காரணம் ஆகும்.

அதனை அடிப்படையாகக் கொண்டே இயற்கை வளங்களை அளவோடு நுகர்ந்தால் வளமாக வாழலாம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு மேற்குறித்த கருப் பொருளை ஐக்கிய நாடுகள் சபை தெரிவு செய்துள்ளது.

எமது சுற்றாடல் அமைச்சு கடந்த 2014 ஆம் ஆண்டில் இருந்து ஜூன் 5 ஆம் திகதி உலக சுற்றுச் சூழல் தினத் தைக் கொண்டாடுவதோடு ஜூன் 5 தொடங்கி ஜூன் 11 வரையான காலப் பகுதியைச் சூழல் விழப்புணர்வு வாரமாகவும்கடைப்பிடித்து வருகிறது. இந்தக் காலப்பகுதியில் பொதுமக் களி டையே விழப்புணர்வை ஏற் படுத்தும் விதமாக குறித்தகாலப் பகுதி யில் செயற்றிட்டங்களை மேற் கொள்ள வேண்டும்.– என்றுள்ளது. (ற–9)

# வில்பத்து விவகாரம் தொடர்பில் முஸ்லிம் தலைவர்கள் ஆராய்வு



கொழும்பு, ஜூன் 5

வட மாகாண முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்தைத் தடுக்கும் வகை யில் முன்வைக்கப்பட்டுள்ள வில் பத்து விவகாரம் தொடர்பில் முஸ் லிம் அரசியல் தலைவர்கள் விசேட கலந்துரையாடலில் ஈடு பட்டனர்.

இந்தக் கலந்துரையாடல் புதன் கிழமை இரவு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான றிசாத் பதியுதீன் தலைமையில் வெள்ளவத்தையி லுள்ள மெரைன்கிரேண்ட் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, பிரதி அமைச்சர் எம்.எஸ். அமீர் அலி, நாடாளுமன்ற உறுப் பினர்களான ஹுனைஸ் பாரூக், எம்.எஸ்.அஸ்லம், பைசர் முஸ்தபா, மாகாண சபை உறுப்பினர்களான அஸாத் சாலி, ஏ.எம்.ஜெமீல், பைரூஸ் ஹாஜி மற்றும் உவைஸ் ஹாஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதன்போது சட்டத் தரணி ருஸ்தி ஹபீப், வில்பத்து கள விஜயம் தொடர்பான விசேட அறிக் கையொன்றைச்சமர்ப்பித்தார். (ற)

# போதைப்பொருள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி, ஜூன் 5

போதைப் பொருள் பாவனை மற் றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வும் கருத்தரங்கு இன்று மு.ப. 9 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொன் விழா மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலய பாட சாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்கள், கிராம அலுவலர்கள், பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங் களின் தலைவர்கள், செயலாளர் கள், பொருளாளர்கள் எனப் பலர் கருத்தரங்கில் பங்குபற்றவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச போதைப் பொருள் விழிப்புணர்வு மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கருத் தரங்கில் மருத்துவர் சிவசங்கர், மருத்துவர் சிவரூபன், தென்ம ராட்சி கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி வே.க. சந் திரகுமார் உட்பட பலர் கருத்துரை களை வழங்கவுள்ளனர் என அமை யத்தின் தலைவர் க.அருந்தவ பாலன் அறிவித்துள்ளார். (ற–9)

# மண்முனை தென்மேற்கு பிரதேச அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டம்

## பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது

மட்டக்களப்பு, ஜூன் 5

100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கிராமத்துக்கு ஒரு வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான அபிவிருத்திக் கூட்டம் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் திருமதி.சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் நேற்று வியாழக் கிழமை இடம்பெற்றது.

அதில் வேலைத்திட்டங்களின் முன் னேற்றம் குறித்தும் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் கலந்து ரையாடப்பட்டது.

அதன்போது பல குறைபாடுகள் மக்களால் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக மண்முனை பாலத்தில் இருந்து மாவடிமுன்மாரி வரை செல்கின்ற வீதி உடைந்து மக்கள் பயணம் செய்வதில் பல சிரமங்கள் இருப்பதனால் அந்த வீதியை புனர மைக்க வேண்டும், மண்முனை பாலத்தில் உள்ள மின் குமிழ்கள் ஒளிராமல் உள்ளன அவற்றை ஒளிரவைக்க வேண்டும், முறை யற்ற விதத்தில் மண் அகழ்வுகள் இடம்பெற்றால் அவை தடுக்கப்பட வேண்டும், மதுபானம் அதிகம் விற்பனையாகின்ற இடமாக மட்டக் களப்பு மாவட்டத்தில் பட்டிப் பளை பிரதேசம் உள்ளது. அதனைக் கட்டுப் படுத்த வேண்டும் என பல கோரிக் கைகள் முன்வைக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், மாவட்ட திட்ட மிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ் செழியன், மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர், உதவிப் பிரதேச செயலாளர் ந.நவேஸ் வரன், கொக்கட்டிச்சோலை பொலிஸ் பொறுப்பதிகாரி பெர்னாண்டோ, கோட்டக்கல்விப் பணிப்பாளர் நதயா சீலன், செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தினர் எனப் பலர் கலந்து கொண் டனர். (ற–10)

# உள்ளூராட்சி வாரம் 2015 நிகழ்வுகள் செப்ரெம்பரில்

தென்மராட்சி, ஜூன் 5

'உள்ளூராட்சி வாரம் 2015' நிகழ்வு களை எதிர்வரும் செப்ரம்பர் மாதத்தில் நடத்துவதற்கான ஏற்பாடு களை மேற்கொள்ளுமாறு உள் ளூராட்சி ஆணையாளர் சகல உள்ளூராட்சி சபைகளின் செயலா ளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி வார நிகழ்வுகள் எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 13ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டுள் ளது. 'சிறப்பான சேவையை வழங்குவதன் மூலமே நாட்டுக்கு உயர்வு' என்னும் தொனிப் பொரு ளில் செயற்றிட்டங்கள் அமைய வேண்டுமெனக் குறிப்பிடப்பட் டுள்ளது.

உள்ளூராட்சி வார செயற்பாடு களின் படி செப்ரெம்பர் 7ஆம் திகதி நடமாடும் சேவைகள் தினமாகவும், 8ஆம் திகதி வருமான மேம்பாட்டுத் தினமாகவும் 9ஆம் திகதி சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு தினமாக வும் 10ஆம் திகதி பொதுமக்கள் பயன்பாட்டுத் தினமாகவும் 11ஆம் திகதி சுற்றாடல் மற்றும் மரம் நாட் டும் தினமாகவும் 12ஆம் திகதி கல்வி மற்றும் நூல் நிலைய அபிவிருத்தி தினமாகவும்13ஆம் திகதி விளை யாட்டு தினம் மற்றும் சான்றிகழ் மற்றும் பரிசில்கள் வழங்கும் தின மாகவும் கடைப்பிடிக்கும் வகை யில் திட்டங்களை ஏற்பாடு செய்யு மாறும் அறிவிக்கப்பட் டுள்ளது. (ற–9)


துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்மன்



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதி யில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் ஜூன் மாதம் 06.07.08 ஆம் திகதிகளில் ஞான வைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப் பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார்.

பூசை நேரம்:

முற்பகல் 10.30 - 12.30 மணிவரை

மாலை 5.30 - 6.30 மணிவரை

(60433) (45.3.6)

குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்

தொடர்பு: 021 221 9127, 077 801 2226



விண்ணப்பம் கோரல்

இந்திய கலாசார உறவுகள் சபை, இந்திய அரசாங்கம், புது டெல்லி யினால் நுண்கலை, ஆற்றுகைக்கலை இளமாணிப் பட்டப்படிப் பிற்கான (சங்கீதம், நடனம், சித்திரம்) புலமைப்பரி சிலுக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையோரிடமிருந்து கோரப்படு கின்றன.

விண்ணப்பதாரி 20 - 25 வயதிற்கிடைப்பட்டவராகவும் க.பொ.த. உயர்தரத்தில் சம்பந்தப்பட்ட பாடத்தில் (உ–ம்) (நடனம், சங்கீதம், சித்திரம்) 'B' தரச் சித்தியும் பெற்றிருத்தல் அவசியம்.

விண்ணப்பப்படிவங்களை இல.14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதரகத்திலோ அல்லது htt:/www.iccrindia.net/scholarshipschemes.html எனும் இணையத்தளத்திலோ அல்லது வட இலங்கை சங்கீத சபைத் தலைமைக் காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 15.06.2015 இற்கு முன்னதாக இந்திய துணைத்தூதரகத்தில் நேரில் கையளிக்கவும்.

யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரும்,

வட.இலங்கை சங்கீதசபைத் தலைவரும்.

(சி.16452)(45.3.7)


# திருமலைக்கு புதிய மறை மாவட்ட ஆயர்

திருகோணமலை, ஜூன் 5

திருகோணமலை மறை மாவட்ட ஆயராக நோயல் இமானுவேல் கிரிஸ்டியன் நிய மிக்கப்படவுள்ளார் என்று வத்திக்கான் அறி வித்துள்ளது. குறித்த மறை மாவட்ட ஆயராக செயற்பட்ட கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அண்மையில் பதவி விலகி யதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே நோயல் இமானுவேல் பாப்பரசரினால் நியமிக்கப்பட்டுள்ளார். (ற–10)

# அபிவிருத்திக்கான புதிய சந்தர்ப்பங்கள்: கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தின் அபிவிருத்திக்கான புதிய சந்தர்ப்பங்கள் எனும் தலைப்பிலான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இந்தக்கலந்துரையாடலில் சிறப்புப் பேச் சாளராக முன்னாள் சிரேஷ்ட விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண கலந்து கொள்வார். (ஐ)

# கைதடி இல்லத்தில் ஆன்மிக திரையரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 5

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களின் வசதி கருதி ஆன்மிகத் திரை அரங்கு ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இல்ல வளாகத்தில் இதற்கென ஒதுக் கப்பட்ட கட்டடத்தில் இந்தத் திரை அரங்கு மண்டபம் அமைக்கப்பட் டுள்ளது.

ஆன்மிகம் சம்பந்தமான படக் காட்சிகள் இந்தத் திரையரங் கூடா கக் காண்பிக்கப்பட்டு வருகின்றன. வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமை நாள்களில் இந்தத்திரையரங்கில் ஆன் மிக படக்காட்சியை முதியோர் கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின் றனர்.

முதியோர் இல்லத்தில் தங்கியிருக் கும் முதியோர்களின் பொழுது போக்குக்காகவும் மற்றும் ஆன்மிக அறிவை வளர்ப்பதற்காகவும் இந் தத் திரை அரங்கு அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ற–17)

# சின்னஞ்சூட்டும் வைபவம்

தென்மராட்சி, ஜூன் 5

கெற்பெலி அ.த.க. பாடசாலை மாணவ தலைவர்களுக்கான சின்னஞ் சூட்டும் நிகழ்வும் பாடசாலைக்கு புதிதாகத் தயாரிக்கப்பட்ட மாணவர் கழுத்துப் பட்டி அறிமுக விழாவும் இன்று மு.ப. 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

பாடசாலை அதிபர் பொ.நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சி.சிவநாதனும், சிறப்பு விருந்தினராக கல்வி வலய வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி தி.அபராஜிதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற–9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய மாணவர்களுக்கு மீள்பரீட்சை நாளை முதல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற இறுதிப் பரீட்சைக்கு தோற்றிச் சித்தியடையத் தவறியவர்கள் அல்லது நூனசித்தி பெற்றவர்களுக்கான மீள்பரீட்சை நடைபெறவுள் ளது என்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தெரிவித்துள்ளார்.

2011ஆம் ஆண்டு மற்றும் 2014ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத அல்லது நூனசித்தி பெற்றவர்களுக்கான மீள் பரீட்சை நாளை சனிக்கிழமை முதல் எதிர்வரும் 11ஆம் திகதி வரை அந்தந்த கலாசாலைகளில் நடைபெறும் எனவும் உரியவர்களை குறித்த காலப்பகுதியில் பரீட்சைக்குத் தோற்றுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 2005/2006 கல்வி ஆண்டு மாணவர்கள் தமது இறுதிப் பெறுபேற்றுச் சான்றிதழை கலாசாலை கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

(ற-10)

# நஞ்சு கலக்காத இயற்கை உலகை எதிர்காலச் சந்ததிக்கு கொடுப்போம்

## மட்டக்களப்பு விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பணிப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 5

இந்தப் பூமியை நஞ்சு கலக்காத இயற்கை உலகமாக எதிர்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டும் – என்று தெரிவித்தார் மட்டக்களப்பு விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பணிப்பாளர் ஆர். கோகுலதாஸன்.

இயற்கை விவசாயத்தில் இணைவோம் எனும் தொனிப் பொருளில் விழிப்புணர்வு வீதி நாடகம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மட்டக்களப்பு உறுகாமம், கித்துள் சந்தி பொதுச் சந்தை முன்றிலில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு நெய்தல் ஊடக தரிசனம் எனும் அமைப்பு இந்த வீதி நாடகத்தை வழங்கியிருந்தது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே விரிவாக்கல் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது:–

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் உலகம், சுவாசிக்கும் காற்று, எமது மண், நீர் ஆகியவற்றை நாம் மனித செயற்பாடுகளால் அவற்றின் இயற்கைத் தன்மையிலிருந்து மாற்றியமைத்து மாசுபட வைத்திருக்கின்றோம். இந்த நஞ்சூட்டப்பட்ட இயற்கையிலிருந்து உணவுகளை உற்பத்தி செய்து உண்டுவாழும் நாம் தேகாரோக்கியமானவர்களாக இல்லை. எம்மில் பெரும்பாலானவர்கள் நடமாடும் நோயாளிகளாகவே இருக்கின்றோம். சமகாலத்தில் தொற்றா நோய்கள் அதிகரித்துக் காணப்படுவதற்கு எமது சூழலும் நாம் நுகரும் விவசாய உற்பத்திகளும் நஞ்சூட்டப்பட்டிருப்பதே காரணமாகும்.



விவசாயச் செய்கையில் மிதமிஞ்சிய அளவுக்கு இரசாயனங்களைப் பாவிப்பதால் பல்வேறு சூழல் சுற்றாடல் இயற்கை நாசங்களை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

தற்சமயம் எங்களை இரசாயனங்களிலிருந்து பிரித்து வைக்க முடியாதவர் களாக நாம் இரசாயனங்களுக்கு இசைவாக்கம் அடைந்துள்ளோம். இரசாயனப் பாவனை விவசாயிகளிடையே ஒரு போதை மாதிரி ஊடுருவியுள்ளது. எனவே, இந்த நிலையிலிருந்து நாம் படிப்படியாக விடுபட்டு எமது இந்த உலகத்தையும் இதில் வாழப்போகும் எதிர்கால சந்ததியையும் பாதுகாப்பதற்கு சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பணிப்பாளர் ஆர். கோகுலதாஸன், உதவிப் பணிப்பாளர் கே.ராஜாம்பிகை, விதை உற்பத்திப் பிரிவு உதவிப் பணிப்பாளர் வி.பேரின்பராஜா, பிரதேச விவசாயப் போதனாசிரியர்களான ஏ.டபிள்யூ.எம். சிபான், வி.இளமாறன், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பத்மநாதன், உட்பட அதிகாரிகளும் விவசாயிகளும் கலந்து கொண்டனர்.

(ற-10)

**சேவை**

தாவடிக்கு அண்மையில் நடமாடும் மிருக வைத்திய சேவைகளுக்கு.

தொடர்பு: 077 973 8802 021 224 2502

**மணமகள் தேவை**

யாழ் இந்து ,மலேசியா வாசியான மணமாகாத பொறியியலாளராகக் கடமையாற்றும் 56 வயதுடைய மணமகனுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை.

தொடர்பு: pnmal1@yahoo.co.uk

T.P: 006 012 2822 117 (9ஆம் திகதிக்குப் பின்புதொடர்பு கொள்ளவும்)

076 591 2520

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம் 1982ஆம் ஆண்டு பிறந்த பரணி 3ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற (பாவம் 49) அரச சேவைபுரியும் மணமகனுக்கு மணமகளை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு:

0711576097, 0774345654 (60441) (10.6.3)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

கொழும்புத்துறை, முதலாம் குறுக்குத் தெருவில் கொழும்புத்துறை வீதிக் கரையில் 459 இலக்கம் கொண்ட வீடும், நான்கு பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

செல்லையா கணபதிப்பிள்ளை,

கொழும்புத்துறை.

தொடர்பு: 077 691 4124 (41163) (10.6.3)

# சிக்கின சட்டவிரோத மதுப் போத்தல்கள்



கொழும்பு, ஜூன் 5

இறக்குமதி வரி செலுத்தப்படாமல் இத்தாலியிலிருந்து இலங்கைக்குள் சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட 5 ஆயிரம் கிலோ கிராம் பாஸ்தா மற்றும் 115 மதுப் போத்தல்களை சுங்க அதிகாரிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைப்பற்றியுள்ளனர். இவற்றின் மொத்த பெறுமானம் 11 இலட்சத்துக்கும் அதிகமாகும் என சுங்க திணைக்களப் பேச்சாளர் சட்டப் பணிப்பாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–


இத்தாலியிலிருந்து 40 அடி உயரமான கொள்கலனில் மேற்படி பொருள்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டன. இவை 5 பேரின் பெயர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. குறித்த கொள்கலன் கடந்த 29 ஆம் திகதி இலங்கை துறைமுகத்தை வந்தடைந்தது. இதில் தனிப்பட்ட நபரின் வீட்டு உபகரணங்கள் இருப்பதாகவே குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் சுங்க அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் கொள்கலனை சோதனையிட்ட போதே மேற்படி பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

5 ஆயிரம் கிலோ பஸ்தாவின் விலை சுங்கவரியுடன் 07 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவாகும். அதேபோன்று மதுப்போத் தல்களுக்காக செலுத்தப்பட வேண்டிய வரிப்பணம் சுமார் 3 இலட்சத்து 61 ஆயிரம் ரூபாவாகும். இதில் 78 சாராயப் போத்தல்களும் 37 வைன் போத்தல்களும் இருந்தன.– என்றார்.

(ற-10)

# அரசமைப்புப் பேரவையில் இந்திய வம்சாவளியினர் பிரதிநிதித்துவம் இல்லை

– தினேஷ் எம்.பி.



கொழும்பு, ஜூன் 5

அரசமைப்புப் பேரவையில் இந்திய வம்சாவளி பிரதிநிதித்துவமும் இல்லை. நாடாளு மன்றத்தின் பெண்களின் பிரதிநிதித்துவமும் இல்லாத நிலையில் அதனை முழுமையான அரசமைப்புப் பேரவையாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று நாடாளு மன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தேர்தலுக்குப் பின்னரான புதிய அரசின் கீழேயே அரசமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் இரண்டாம் இலக்க அறையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற மஹிந்த அணியின் விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றிய தாவது:–

அரசமைப்பு பேரவைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படுவது தொடர்பில் அனைத்து கட்சித் தலைவர்களுடனும் பேச்சு நடத்தியே தீர்மானம் எடுக்கப்படவேண்டுமென அர சமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஆனால் இத்தகைய முறை பின்பற்றப்படாம லேயே அரசமைப்புப் பேரவைக்கு உறுப் பினர்கள் நியமிக் கப்பட்டுள்ளனர். இதனை இன்று (நேற்றுமுன்தினம்.) இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்துக்கூறினோம். பிரதமர் அதனை ஏற்றுக்கொண்டார்.

எதிர்வரும் நாள்களில் இது தொடர்பில் பேச்சு நடத்த இணக்கப்பாடு காணப்பட்டது. அத் தோடு இந்தச் சபையில் அமைச்சர்களை நியமிக்க முடியாது. நாடாளுமன்ற உறுப்பி னர்களே நியமிக்கப்பட வேண்டும். ஆனால் தற்போது அமைச்சர்கள் நியமிக் கப்பட்டுள்ளார்கள். எனவே அதில் சுயநலன் இருந்தது. அத்தோடு பெருந்தோட்ட மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக இந்திய வம்சாவளி பிரதிநிதித்துவமும் இல்லை. பெண்களின் பிரதிநிதித் துவமும் இல்லை –என்றார்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் நாடாளு மன்ற உறுப்பினர் ஜீ.எல். பீரிஸ் கருத்துத் தெரிவித்ததாவது:–

இன்றைய நாடாளுமன்றத்தில் அரசு சிறுபான் மையாகவே உள்ளது. பெரும்பான்மையினர் எதிர்க்கட்சியில் உள்ளனர். எனவே நாடாளு மன்றத்தின் பலம் எமக்கே உள்ளது– என்றார்.

பந்துல குணவர்த்தன கருத்துத் தெரிவிக் கை யில் வெளிநாட்டு பிரஜையொருவர் எமது நாணயத் தாளில் கையெழுத்திட்டுள்ளார். இதற்கு எதிராக நாம் நீதிமன்றம் செல்ல வுள்ளோம் – என்றார். செய்தியாளர் சந்திப்பில் வாசுதேவ நாணயக்கார கருத்துத் தெரிவிக் கையில்–

எதிர்காலத்தில் பலத்துடன் செயற்படுவோம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டும் –என்றார்.

(ற)

**Clerk தேவை (பெண்)**

ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள கல்வி நிறுவனம் ஒன்றுக்கு பதிவுகளை மேற்கொள்வதற்கு எழுதுவினைஞர் தேவை.

(60437) (3.7.5) தொடர்பு: 077 970 7322

**ஓம் சக்தி ஜோதிட நிலையம்**

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள பிரபல ஜோதிடர்

சிவசங்கர் ஜோதிடர்

உடல்நலக்குறை, திருமண யோகம், தொழில் வியாபாரம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப் பயணங்கள் எல்லா பிரச்சினைகளுக்கும் தீர்வு சொல்லப்படும்.

ஒரு முறை எங்களை சந்தித்துப் பயன்பெறுங்கள்.

தொடர்பு: 077 618 7261

காலை 8.00மணி - இரவு - 7.00 மணி வரை

நல்லூர் கோயில் வடக்கு வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.

**விஷேட விலைக்குறைப்பு**

4R(10 படத்துக்கு மேல்) - 10.00

அழைப்பிதழ்கள்

4R(100 படத்துக்கு மேல்) - 09.00

4R(300 படத்துக்கு மேல்) - 08.00

4R(100UP INKJET PRINT) - 06.00

12x30 NT ALBUM PRINT - 200.00

12X30 EMBOSSING PRINT - 2000.00

மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப் 0312221358 62/20, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## நாட்டிய, சித்திர ஆசிரியர்களுக்கு செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை பரத நாட்டியம் மற்றும் சித்திரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. அதில் பங்குபற்றும் ஆசிரியர்கள் வரைதலுக்குரிய உபகரணங்கள், நட்டுவாங்கம் மற்றும் ஆசிரியர் அறிவுரை வழிகாட்டி என்பவற்றுடன் வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கேட்டுள்ளார். (ற-108)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### மரண அறிவித்தல்

திருமதி **வேதவல்லி பரமானந்தம்**



வண்ணார்பண்ணை, நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேதவல்லி பரமானந்தம் நேற்று (04.06.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - மருக்கொழுந்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற பரமானந்தத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான துரையப்பா - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பரமசிவம், பரமேஸ்வரி, சின்னத்தம்பி மற்றும் பசுபதி ஆகியோரின் சகோதரியும், நவனீத கிருஸ்ணன் (ராசா), இராதாகிருஸ்ணன், பாலமுரளி கிருஸ்ணன், கோகுலகிருஸ்ணன் (கண்ணன்), சந்தானகிருஸ்ணன் (சந்திரன்), சிவராமகிருஸ்ணன் (ரமணன்) ஆகியோரின் தாயும், ரஞ்சிதமலர், சுபத்திரா, தாரணி, புனிதா, சங்கீதா, ஜனித்தா ஆகியோரின் மாமியும், வினோஜிதன், கஜன், வேணுஷா, சுவேதா, அபிமலர், ஆதித்தன், தரணிதன், கோபிதன், அபிராகவி, சுபராகவி, அர்ச்சனா, ஆதவன், திகழ்நிலவன், அக்ஷ்விகா, அக்ஷ்ரன், அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான இராசதுரை, திருநாவுக்கரசு, சண்முகராஜா மற்றும் திருமதி உருத்திரமணிதேவி, திருச்செல்வம், காலஞ்சென்றவர்களான கோபால கிருஸ்ணன், தையல்நாயகி (மணி), துரைஐயா, உதயசுந்தரி மற்றும் கலாவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2015) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18/5, கேசாவில் பிள்ளையார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை வட. மேற்கு,
யாழ்ப்பாணம். 021 222 1799 (60440) (45.3.6)

தகவல்:
பிள்ளைகள்.



### மரண அறிவித்தல்

**கதிர்காமத்தம்பி விஜயராசா** (நிசந்தன்- செல்லா)



மண்ணில் 26.02.1967 விண்ணில் 27.05.2015

திருகோணமலை முதலாம் வட்டாரம் குச்சவெளியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கதிர் காமத்தம்பி விஜயராசா (நிசந்தன் -செல்லா) கடந்த 27.05.2015 புதன்கிழமை லண்டனில் அகால மரணமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமத்தம்பி- சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும். காலஞ்சென்ற திருநாவுக்கரசு,. இராசநாயகி ,கேதீஸ்வரி( குட்டி), நவரத்தினராசா (மணி), விஜயகுமார் (ரஞ்சன்), ஜெயராணி (ஆதார வைத்திய சாலை,மாங்குளம்),ஜெயராசா (ராசன்) காலஞ்சென்ற தவராசா, ஜீவானந்தம், நந்தகுமார் (தவா),விக்னேஸ்வரன் (தயா-பிரான்ஸ் )ஆகியோரின் அன்புச் சகோதரனும். கோமளாதேவி (இந்தியா), சோமசுந்தரம்(நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை) ,நடனசபாபதி (கொக்கிளாய்), குணசுந்தரி ,இராசமலர் (கலா) இரத்தினசிங்கம்(கொக்கிளாய் கிராமிய வைத்திய சாலை), இரஞ்சிதமலர் (உடை யார் கட்டு மகா வித்தியாலய ஆசிரியை), ஜெயா,இராசமலர் ,பத்மினி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கௌரீஸ்வரன் (திருமால்- லண்டன்), கௌரீஸ்வரி(கௌரி- பிரான்ஸ்), ஜெகதீஸ்வரி,ஜெகதீஸ்வரன்(இந்தியா) வசந்தராஜ், சஜித்தா, திவ்யந்தி, சனுஜா, பிரதீபன்,ஜெனனி(கொழும்பு பல்கலைக்கழகம்),துவாரகன், சிவகி,மிதுஷன்,(கொழும்பு பல்கலைக்கழகம்), கிதுர்ஷன், தனுர்ஷன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், வேணுதாஸ்(டுபாய்),ரூபதாஸ்(டுபாய்), புஸ்பதாஸ் சிவதாஸ்(தென் கிழக்கு பல்கலைக்கழகம்),கயானன்,ஜெயராஜ் (லண்டன்), ஜெகநாதன்,காலஞ்சென்ற சுபேசன்,சுலக்சன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விக்ரம்(லண்டன்),பிரணவன்(லண்டன்),தீனதயாளன்(லண்டன்),அக்ஷயா (பிரான்ஸ்) , விபூசனன்(பிரான்ஸ்) ,லக்ஷமன்(இந்தியா) , ஜனர்த்தனி(இந்தியா), ஜனுசா, கர்ஷயன்(லண்டன்),ரஸ்வின் (லண்டன்) ,கவிநயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.06.2015 ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : மைத்துனர் நடன சபாபதி
077 023 5520

ஜெயராணி (சகோதரி) 077 039 2962
நவரெட்ணராசா (மணி) (சகோதரன்) 071 409 5411

தகவல்:
சகோதரி இ. ஜெயராணி
(ஆதார வைத்தியசாலை
மாங்குளம்)
(56669) (45.5.3.8)


# மாணவரை ஊக்கப்படுத்துவதில் ஆசிரியர்கள் பின்னிற்கக்கூடாது

## பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தர்மரட்ணம் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன் 5

கிடைக்கும் வசதி வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சலிப்பின்றி ஏழைச் சிறார்ளுக்கு கல்வி கற்பித்துக் கொடுப்பதிலும், அவர்களை ஊக்கப்டுத்துவதிலும் ஆசிரியர்கள் பின்நிற்கக் கூடாது – என கிளிநொச்சி பூநகரி கோட்டக் கல்வி பணிப்பாளர் தர்மரட்ணம் தெரிவித்தார்.

கிளிநொச்சி பரமன் கிராய் அ.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

மாணவர்களை ஊக்கப்டுத்துவதற்கு அவர்களுக்கு அளிக்கப்படும் பரிசில்களும், பாராட்டுக்களும் இன்றியமையாத ஒன்றாகும். ஊக்கப் படுதப்படாத கல்வி மரத்தில் அடிக்கும் மழுங்கிய ஆணிக்குச் சமனா னது. தோல்விகளில் இருந்து நிமிர்ந்தெழவும், சாதனைகளைப் படைப்பதற்கும் ஊக்கப்டுத்துதல் இன்றியமையாத ஒன்றாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு வரும் ஆசிரியர்கள், மாணவர்கள் அதிகமாக இருக்க வேண்டும். கெட்டிக்கார மாணவர்களாக இருந்தால் தான் அவர்களுக்குக் கற்பிக்க முடியும் எனக் கருதக்கூடாது. கிடைத்த வசதிகளையும், வாய்ப்புக்களையும் கொண்டு முழுநிறைவோடு பணியாற்றி இப்பிரதேச பிஞ்சுகளை வளர்த்தெடுக்க வேண்டும்.

பெரும்பாலான ஆசிரியர்கள் இட மாற்றத்தால் பெற்ற அசௌகரியம், குடும்பச் சுமை போன்ற காரணத்தால்: இப் பிரதேசத்திலே பணியாற்ற சலிப் படைவது வேதனைக்குரியது. சிலர் தங்கள் தொழிலை சிறிதளவேனும் எண்ணாது பாடசாலைகளில் அதிகமான நேரத்தை கூடிக் கதைப்பதிலும், கைத்தொலைபேசியை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்துவதிலும் செலவிடுகின்றனர். இது மிகவும் வருந்தத் தக்கது. – என்றார். (ற-21)

# ஒலிம்பியாட் போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பரில்

கரணவாய், மே 5

இலங்கை பிரயோகப் புள்ளி விவர நிறுவனம் நடத்தும் தேசிய புள்ளி விவர ஒலிம்பியாட் போட்டிகள் எதிர் வரும் செப்ரம்பர் மாதம் நடைபெறவுள்ளன. தமிழ் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம், அனுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

பிரிவு 1 இல் தரம் 9, 10, 11 மாணவர்களும் பிரிவு 2 இல் தரம் 12, 13 களில் இணைந்த கணிதம், கணிதப் புள்ளிவிவரவியல், வணிகப் புள்ளி விவரவியல் பாடங்களைக் கற்கும் மாணவர்களும் இதற்கு விண்ணப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-108)

# வைகாசி விசாகப் பொங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

தெல்லிப்பழை சித்தியம்புளியடி சித்தியம்பட்டி அண்ணமார் ஆலயத்தின் வைகாசி விசாகப் பொங்கல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அதிகாலை 5 மணிக்கு விசேட அபிசேகம் நடைபெற்று 6 மணியளவில் பொங்கல் நடைபெறவுள்ளது. (ற-10)

# பரிசில் நாள் இன்று

தென்மராட்சி, ஜூன் 5

சாவகச்சேரி மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு வித்தியாலய நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வித்தியாலய பழைய மாணவியும் புத்தூர் ஆயுள்வேத மருத்துவருமான செல்வி கணேசமணி சங்கீதாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாட முதன்மை ஆசிரியர் திருமதி சி.உருத்திரமூர்த்தியும், கௌரவ விருந்தினராக வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் சு.சிவகுமாரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-9)

# கடலில் மூழ்கி இளைஞன் சாவு

மட்டக்களப்பு, ஜூன் 5

பாசிக்குடா கடலில் நீராடிக்கொண்டிருந்த இளைஞரொருவர் நீருள் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 23 வயதான எஸ்.ரீ.துஸான் துலன் ஜய என்பவே உயிரிழந்ததாக கல்குடா பொலிஸார் தெரிவித் தனர்

கலேவெல, கனாதென்ன பிரதேசத்திலிருந்து பஸ் வண்டியில் 33 பேர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாசிக்குடாவுக்கு வந்ததாகவும் அவர்கள் கடலில் நீராடிக்கொண் டிருந்த போது இந்த அசம்பாவிதம் இடம்பெற்றதாக வும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணை களையும் கல்குடா பொலிஸார் ஆரம்பித் துள்ளனர். (ற-10)


### மரண அறிவித்தல்



**சிவசம்பு கமலநாதன்**

(முன்னாள் கல்விப்பணிப்பாளர் - வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சு, திருகோணமலை, முன்னாள் கல்விப் பணிப்பாளர் - கிளிநொச்சி கல்வி வலயம்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு கமலநாதன் 02.06.2015 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு- உமையம்மை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற தங்கபூரணத்தின் அன்புக் கணவரும், திருமதி கமலாதேவி லோகசுந்தரம் (இளைப்பாறிய ஆசிரியை, யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), திருமதி விமலாதேவி சியாம் சுந்தர் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதர னும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் சங்கத்தானை இல்லத்தில் இன்று (05.06.2015) வெள்ளிக்கிழமை முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 06.06.2015 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
பெறாமக்கள் < திருவருள் 077 453 4219
கமலாகரன் 076 662 5102

(சி.16156) (45.6.5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Projector உடன் கூடிய ஸ்மார்ட் கைப்பேசி

ஸ்மார்ட் கைப்பேசி உலகில் Projector உடன் கூடிய கைப்பேசிகள் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகப் படுத்தப்பட்டிருந்தன. எனினும் அவை மக்கள் மத்தியில் எதிர்பார்த்த வரவேற்பைப் பெற்றிருக்கவில்லை.

இந்த நிலையில் Lenovo நிறுவனம் தற்போது Lenovo Smart Cast எனும் Projector உடன் கூடிய ஸ்மார்ட் கைப்பேசியை அறிமுகம் செய்யவுள்ளது. இதில் Projector ஊடாக Key Board இனை இயக்கும் வசதியும் உள்ளடக்கப்பட்டிருத்தல் விசேட அம்சமாகும். சில புதிய தொழில்நுட்பங்களை உட்புகுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த Projector கைப்பேசியானது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.





# அசைவுகளை துல்லியமாக கண்டுபிடிக்கும் நவீன சாதனம்

தொடுதிரை தொழில் நுட்பத்தைத் தொடர்ந்து கை அசைவுகளைக் கொண்டு சாதனங்களைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம் பிரபல்யமடைந்து வருகின்றது. இந்த தொழில் நுட்பத்தைக் கொண்ட சாதனங்களை உற்பத்தி செய்வதில் கூகுள் நிறுவனமும் முனைப்புக்காட்டி வருகின்றது. இதன் ஓர் அங்கமாக சிறிய கை அசைவுகளையும் துல்லியமாக கண்டறியக்கூடிய வன் பொருள் (Hardware) சாதனத்தை Project Soli எனும் திட்டத்தினூடாக உருவாக்கியுள்ளது.

இந்தச்சாதனமானது கை அசைவுகளை மட்டுமல்லாது விரல் அசைவுகளையும் உணரக்கூடியதாக வடிவமைக்கப்பட்டிருத்தல் விசேட அம்சமாகும். இதேவேளை விரைவில் இந்தப் புதிய தொழில் நுட்பத்தை முற்றுமுழுதாகக் கொண்ட ஸ்மார்ட் சாதன வடிவமைப்பில் கூகுள் நிறுவனம் களமிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சம்சங் கலக்ஸி ரப் S2 விரைவில்

சம்சங் நிறுவனம் சம்சங் கலக்ஸி ரப் S2 எனும் புத்தம் புதிய ரப்லற்இனை அடுத்த மாதமளவில் அறிமுகம் செய்யவுள்ளது. இந்த ரப்லற் ஆனது 8 அங்குல அளவு மற்றும் 9.7 அங்குல அளவுகளை உடைய திரைகளைக் கொண்ட இரு பதிப்புக்களாக வெளியிடப்படவுள்ளது. இவற்றில் 64-bit Samsung Exynos Processor, பிரதான நினைவகமாக 3ஜிபி நினைவகம், 32ஜிபி சேமிப்பு நினைவகம் என்பன தரப்பட்டுள்ளன.

இவை தவிர 8 மெகா பிக்சல்களை உடைய பிரதான கமரா மற்றும் 2.1 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.



பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த திங்கட்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ற-23)

# மதிதயன் கொலையை கண்டித்து ஆர்ப்பாட்டம்

## திருகோணமலையில் நடத்தப்பட்டது

மட்டக்களப்பு, ஜூன் 5

மட்டக்களப்பு, சமூக சேவை உத்தியோகத்தரின் கொலையைக் கண்டித்து திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள சமூக சேவைத் திணைக்களத்துக்கு முன்பாக அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை திருகோணமலை மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஏற்பாடு செய்து நடத்தினர்.

'சமூக சேவையாளனுக்கு நடந்த அநீதிக்கு உடன் நடவடிக்கை எடுங்கள்', 'நலிவுற்ற சமூகத்துக்கு உதவியவருக்கு உரிய பரிசு இது தானா?', 'கனிவான நண்பரை கொலை செய்த கயவரை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்' போன்ற வாசகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"இந்தக் கொலையைச் செய்தவர்கள் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவர்களைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அத்துடன் எமக்குப் பாதுகாப்பும் வழங்க வேண்டும்."– என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

மட்டக்களப்பு, நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தராகக் கடமை யாற்றி வந்த சச்சிதானந்தம் மதிதயன் கடந்த மாதம் 26 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாதோரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். (ற-10)



# கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸாருக்கு பற்றாக்குறை

கிளிநொச்சி, ஜூன் 5

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெண் பொலிஸார் அதிலும் குறிப்பாக தமிழ்ப் பெண் பொலிஸார் பற்றாக்குறையாகவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் பெண்கள் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்வதில் பொலிஸார் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒரு தமிழ் பெண் பொலிஸும் இரண்டு சிங்கள பெண் பொலிஸாரும் கடமையில் உள்ளனர். கிளிநொச்சியில் தற்போது குடும்ப வன்முறைகள், மற்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் அதிகமாகக் காணப்படுவதால் அது தொடர்பில் பெண்களால் முறைப்பாடு செய்யமுடியவில்லை. ஆண் பொலிஸாரிடம் முறை[illegible] வதற்கு பெண்கள் ச[illegible] துடன், பிரச்சினை தொடர்பில் முழுமையான விடயங்களைத் தெரிவிப்பதும் இல்லை என்றும் கூறப்படுகின்றது. அதனால் பொலிஸாரால் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், முறைப்பாடு செய்ய வருபவர்கள் மிகவும் நீண்ட நேரம் [illegible] உள்ளது என்றும்தெரிவிக்கப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனக் கப்பல் விபத்தில்

## 400 இற்கும் மேற்பட்டோர் சாவு



பீஜிங்,ஜூன் 5
ஈஸ்டர்ன் ஸ்டார் என்ற கப்பல் சீன நகரான நஞ்சிங்கில் இருந்து சோங் குயிங்க்குச் சென்று கொண்டிருந்த போது கடந்த 2 ஆம் திகதி கடும் புயலில் சிக்கி ஹூபி பகுதியில் உள்ள யாண்ட்சே நதியில் மூழ்கியது.

கப்பலில் 410 பயணிகளும், 48 ஊழியர்களும் பயணம் செய்துள்ளார்கள். இந்தத் தகவல் அறிந்த மீட்பு படையினர் விரைந்து சென்று கடுமையாக போராடிக் கப்பலின் உள் அறைகளில் இருந்த 40 பேர் வரையானோரை மீட்டனர். எனினும் மீதியுள்ள வர்களை மீட்க முடியாத அளவுக் குக் கப்பல் மூழ்கியது. அதனால் அதில் உள்ளவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்படுகிறது.

ஆனாலும் 4 நாள்கள் ஆகியும் இதுவரை முழுமையாக மீட்பு பணி நடக்கவில்லை. கப்பலை மேலே தூக்குவதற்காக இராட்சத படகு கிரேன் கொண்டு வரப்பட்டுள்ளது. அதை நிமிர்த்துவதற்கு முயற்சி நடந்து வருகிறது. மேலும் கப்பலில் துளையிட்டு உள்ளே சென்று அங்கு சிக்கி இருப்பவர்களை மீட்பதற்கும் முயற்சி நடக்கிறது. ஆனால் தற்போதைய நிலையில் கப்பல் முற்றிலும் மூழ்குவதற்கு வாய்ப்பு இருப்பதாக மீட்பு படையினர் கூறுகின்றனர். அப்படி மூழ்கிவிட்டால் உள்ளே உயிருடன் இருப்பவர்கள் அனைவரும் உயிரிழக்க நேரிடும்

இதற்கிடையே கப்பலில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் மீட்புப் பணி நடக்கும் இடத்துக்கு வந்து குவிந்தவண்ணம் உள்ளனர். அவர்களை ஆற்றுப் பகுதிக்கு செல்ல பொலிஸார் அனுமதிக்கவில்லை. அதனால் அவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

மீட்புப் பணியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் ஈடுபட்டுள்ளனர். எனினும் ஒன்றிரண்டு உடல்கள் தான் சிக்கியுள்ளன. இந்த விபத்துக் குறித்து கப்பல் கப்டன் கூறுகையில், இந்தக் கொடூர விபத்து ஒரு சில நிமிடங்களில் நிகழ்ந்து விட்டது. அதற்கான காரணம் என்ன என்பதை உணர முடியவில்லை. எனினும் திடீரென வீசிய சூறாவளி தான் காரணமாக இருக்கலாம் என நம்புகிறோம் எனக் கூறியுள்ளார்.

சீனாவின் யாங்ட்சி நதியில் நடைபெற்ற விபத்துகளில் இது தான் மிகவும் மோசமான விபத்து என சீன அரசு தெரிவித்துள்ளது. (ஐ)

## போர் நிறுத்தத்தை மீறியது உக்ரைன்

டான்ஸ்க்,ஜூன் 5
ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற உக்ரைன் நாட்டில் தற்போது உள்நாட்டு போர் நடந்து வருகிறது. உக்ரைனில் வசித்து வரும் ரஷ்ய ஆதரவாளர்கள் உக்ரைனின் ஒரு பகுதியை பிரித்து ரஷ்யாவுடன் இணைக்க முயற்சித்து வருகின்றனர். அவர்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையே கடும் போர் நடந்து வந்தது. ரஷ்யா ஆதரவாளர்களுக்கு ரஷ்யா ஆயுத உதவிகளைச் செய்து வருகிறது. இந்த நிலையில் இருதரப்புகளுக்கும் இடையே அமைதிப் பேச்சு நடந்தது. கடந்த பெப்ரவரி மாதம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் பின்னர் எந்தப் பெரிய தாக்குதலும் நடைபெறவில்லை.

உக்ரைன் டான்கஸ் நகரை ரஷ்ய ஆதரவாளர்கள் கைப்பற்றி வைத்துள்ளனர். அங்கு நேற்று முன்தினம் திடீரென மோதல் வெடித்தது. இராணுவம் மற்றும் ரஷ்ய ஆதரவாளர்கள் தம்மிடையே கடும் போரில் ஈடுபட்டனர். இருதரப்பினரும் பீரங்கி மற்றும் டாங்கிகள் மூலம் தாக்குதல் நடத்தினார்கள். தொடர்ந்து போர் நடந்து வருகிறது. அதில் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கும் என கருதப்படுகிறது. ஆனால் உயிரிழந்தோர் பற்றி எந்த விவர மும் தெரியவில்லை. மீண்டும் போர் தொடங்கி இருப் பதால் உக்ரைன் ரஷ்யா இடையே பதற்றமான நிலை உருவாகியுள்ளது. (ஐ)

## தொழிலாளர்களுக்கு கட்டாய ஓய்வு
### டுபாய் அரசு உத்தரவு

டுபாயில் வருடம் தோறும் கடும் வெயில் காலத்தில் கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட வெட்ட வெளியில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு உச்சி வெயில் நேரமான பகல் வேளையில் இரண்டரை மணி நேரம் கட்டாய ஓய்வளிக்க வேண்டும் என்ற உத்தரவு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டும் வெயிலின் தாக்கம் கடுமையாகஇருக்கும் எனவானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இதன் மூலம் கடுமையான வெயிலில் வேலை செய்யும் தொழி லாளர்கள் தலைவலி, காய்ச்சல், வாந்தி, திரவச்சத்து குறைபாடு போன்றவற்றால் மயக்கமடைய நேரிடும்.

இதனைத் தவிர்க்க, வெட்டவெளிகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் வெயிலின் நேரடித் தாக்கத்துக்கு உள்ளாவதை தடுக்கும் வகையில், இந்த மாதம் முதல் உச்சி வெயில் நேரமான முற்பகல் 12.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை அவர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட வேண்டும். இந்த உத்தரவு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரை நடைமுறையில் இருக்கும்.

மேலும் மனித ஆற்றலின் மூலம் செய்யப்படும் வேலைகளுக்கு பதிலாக இயந்திரங்களைப் பயன்படுத்தவும் வேலை கொள்வோர் முயற்சிக்க வேண்டும். தொழிலாளர்கள் தளர்வான ஆடையணிந்து பணி புரிகிறார்களா? என்பதை கண்காணித்து அவர்களுக்கு போதுமான குடிதண்ணீர் வசதியும் செய்து தரப்பட வேண்டும் என டுபாய் அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இதனை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் தொழிலாளர்களுக்கு, வேலை அளிக்கும் நிறுவனங்கள் இந்த உத்தரவை நிறைவேற்றுகி றார்களா? என கண்காணிக்க சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்தியா-அமெரிக்கா இடையே இராணுவ ஒப்பந்தம் கைச்சாத்து



புதுடெல்லி,ஜூன் 5
இந்தியா வுக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்திருந்த அமெரிக்க இராணுவ அமைச் சர் அஸ்டன் கார்ட்டர், இந்திய இரா ணுவ அமைச்சர் மனோகர் பாரிக்கருக்கும் இடையே பிரதி நிதிகள் மட்டத்திலான பேச்சு நடைபெற்றது. 90 நிமிட நேர பேச்சுக்குப் பின்னர் , இரு நாடு களுக்கும் இடையே 10 வருடங்களுக்கான இராணுவக் கட்டமைப்பு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அதில், மனோகர் பாரிக்கரும், [illegible]டன் கார்ட்டரும் கையெழுத்திட்டனர். அந்த ஒப்பந்தம், இராணுவ உபகரணங்களை இரு நாடுகளும் கூட்டாக தயாரிக்கவும், உளவுத் தகவல்களை பகிர்ந்து [illegible] [illegible] பப்படுகிறது. (ஐ)

## ஆப்கானிஸ்தானில் இராணுவத் தாக்குதல்




காபூல்,ஜூன் 5
ஆப்கான் இராணுவத்துடன் இணைந்து தீவிரவாதிகளுக்கு எதிராக போரிட்டு வந்த நேட்டோ படையினர் இந்த வருடத்தின் தொடக்கத்தில் ஆப்பானிஸ்தானிலிருந்து வெளியேறி விட்டனர். அந்த நிலையில் அங்கு தலிபான் களைக் குறிவைத்து இந்த நாட்டு இராணுவம் தீவிர தாக் குதல் நடத்தி வருகிறது.

நாட்டின்பல்வேறு இடங்களில்நேற்று முன்தினம் அதிரடியாக இராணுவம் நடத்திய தாக்குதலில், 28 பேர் கொல்லப்பட்டனர். 27 பேர் காயம் அடைந்தனர். 2 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

தீவிரவாதிகளிடம் இருந்து பயங்கர ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. மேலும், வீதியோரத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடி குண்டுகளும், கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டன. தீவிரவாதிகளுடன் நடந்த போர் மற்றும் கண்ணிவெடித் தாக்குதலில் 3 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். (ஐ)

## தீவிரவாதிகளின் தாக்குதலில் 14 வருடங்களில் ஒன்றரை லட்சம் பேர் சாவு



வொஷிங்டன், ஜூன் 5
பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் நடத்திய போரில் ஒன்றரை லட்சம் பேர் உயிரிழந்துள்ளதாக புதிய ஆய்வு ஒன்றின்மூலம் தெரியவந்துள்ளது.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தானில் தீவிரவாதம் குறித்தும், அதனால் நடைபெறும் போரில் உயிரிழந்தோர் குறித்தும் அமெரிக்காவின் பிரவுன் பல்கலைக் கழகத்தின் வாட்சன் சர்வதேச கல்வி நிறுவனம் ஆய்வு மேற்கொண்டது.

அமெரிக்காவில் அல்கொய்தா தீவிரவாதிகள் தாக்குதலுக்குப் பின்னர், கடந்த 2001 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. தலிபான் தீவிரவாதிகளுடன் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் போரில் ஈடுபட்டன.

அதில் பலர் உயிரிழந்தனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்தனர். இந்த நிலையில் இந்த வருட இறுதிக்குள் படைகளைப் படிப்படியாக மீளப் பெறுவதாக அமெரிக்கா அறிவித்தது. இருந்தும் ஆப்கானிஸ்தானில் போர் இன்னும் முடியவில்லை. அது தொடர் கதையாகவே உள்ளது.

பாகிஸ்தான் தீவிரவாதிகளின் புகலிடமாகவும், சொர்க்கமாகவும் திகழ்கிறது. வடமேற்கு பாகிஸ்தானில் தலிபான்கள், அல்கொய்தா உள்ளிட்ட தீவிரவாதிகளின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. வெடிகுண்டுத் தாக்குதல், இராணுவத்துடன் போர் என அங்கு வன்முறை தினமும் ஒரு வாடிக்கையாகி விட்டது. வன்முறை சம்பவங்களால் இராணுவ வீரர்கள், பத்திரிகையாளர்கள், பொதுமக்கள், உதவியாளர்கள் மற்றும் நேட்டோ படை வீரர்கள், வெளிநாட்டு உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் எனப் பலர் உயிரிழந்துள்ளனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்துள்ளனர்

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுடனான போரில் கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் இதுவரை ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் அவர்களில் பொதுமக்களும், இராணுவ வீரர்களும் அடங்குவர்.

அவர்கள் தவிர ஒருலட்சத்து 62 ஆயிரம் பேர் காயம் அடைந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் அவயவங்களை இழந்துள்ளனர் எனவும் கூறப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் வெடிகுண்டு தாக்குதல் சிறுவர்கள் உட்பட 33 பேர் சாவு

தெற்கு சிரியாவில் நடைபெற்ற பரல் வெடிகுண்டுத் தாக்குதல்களில் 10 சிறுவர்கள் உட்பட 33 பேர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவில் மோசமான தோல்விகளால் படையினர் பலர் கொல்லப்படுவது மற்றும் அதற்கு மாற்றீடாக ஆள்சேர்ப்பதற்கு கடினமான நிலை, போன்ற காரணங்களால் சிரிய அரச படையினர் தடுமாறி வரும் நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகள் குழு தற்போது சிரியா மற்றும் ஈராக்கில் ஒட்டுமொத்தமாக சுமார் 3 லட்சம் சதுர கிலோ மீற்றர் விஸ்தீரணமுள்ள இடங்களைக் கைப்பற்றியுள்ளதாக புவியியல் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தெற்கு சிரியாவில் உள்ள அலப்போ மாகாணத்தில் உள்ள டால் ரிபாத் என்ற இடத்தில் பரல் பொம் எனப்படும் இரசாயனத்துகள்கள்களால் நிறைக்கப்பட்ட பீப்பாய் வெடிகுண்டுகள் வெடித்ததில் 8 சிறுவர்கள் உட்பட 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இதேபோல், கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள ஜப்-அல்-குப்பே நகரில் நடந்த தாக்குதலில் 2 சிறுவர்கள் உட்பட 9 பொதுமக்களும் இட்லிப் மாகாணத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேரும் உயிரிழந்துள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவங்களில் பலர் காயமடைந்துள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது. (ஐ)




# தென்கொரியாவில் 700 பாடசாலைகள் மூடப்பட்டன

## மெர்ஸ் வைரஸ் தாக்கத்தின் எதிரொலி

சியோல்,ஜூன் 5

சவூதி அரேபியா நாட்டுக்குச் சுற்றுலா சென்றுவிட்டு கடந்த மாதம் தென் கொரியா திரும்பிய 60 வயது நபரை மெர்ஸ் நோய் தாக்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் மூலம் அந்த நாட்டில் உள்ள பல்வேறு நபர்களுக்கும் இந்த நோய் பரவியுள்ளது.

அதில் ஒரு ஆண், ஒரு பெண் என இருவர் உயிரிழந்துள்ளதுடன், 35 பேரை இந்த நோய் தாக்கியுள்ளது. மேலும் ஆயிரத்து 300 பேரை இந்த நோய் தாக்கியிருக்கக்கூடும் என்ற அச்சத்தில் முன்னெச்சரிக்கையாக தனி அறையில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து அந்த நாடு முழு வதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வேகமாகப் பரவும் வைரஸைக் கட்டுப்படுத்தும் விதமாகவும் நோய் பரவுவதைத் தடுக்கும் பொருட்டும் நேற்று முன்தினம் 209 முன்பள்ளிகள் மூடப்பட்டன. தற்போது மேலும் 491 பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன. தலைநகர் சியோலில் முக கவசம் அணிந்து செல்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அந்த நாட்டுக்கு சுற்றுலா செல்ல இருந்த 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சீனா மற்றும் தைவான் நாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்களது பயணத்தை இரத்து செய்துவிட்டனர். இந்த விவகாரத்தில் அரசு அலட்சியமாக இருப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதையடுத்து சுகாதார அதிகாரிகளின் அவசரக் கூட்டத்தை கூட்டிய ஜனாதிபதி பார்க், மெர்ஸ் வைரஸ் பரவாமல் தடுக்க விரைவான நடவடிக்கைகளை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

முன்னதாக கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சவூதி அரேபியா நாட்டு மக்களை மர்ம நோய் ஒன்று தாக்கியது. அது புதுவகை கிருமியால் உருவாகியிருந்தது. இந்த நோய்க்கு மெர்ஸ் என்று பெயரிடப்பட்டது. அந்த நாட்டில் இந்த நோய் தாக்கிய பலர் உயிரிழந்தனர். பின்னர் அங்கிருந்து மெர்ஸ் நோய் மற்ற நாடுகளிலும் பரவியதால் உலகம் முழுவதும் இதுவரை ஆயிரத்து 161 பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டனர். இதில் 436 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த நோய்க்கு இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விமானத் தாக்குதல் தொடர்பில் ரஷ்ய நிறுவனம் புதுத் தகவல்



கோலாம்பூர்,ஜூன் 5

மலேசிய விமானம் ஆர்17 , உக்ரைன் ஏவுகணையால் தாக்கப்பட்டுள்ளது என்று ரஷ்ய நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

நெதர்லாந்து தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் இருந்து மலேசிய தலைநகர் கோலாலம்பூருக்கு பயணித்த மலேசியன் ஏயர்லைன்ஸ் விமானம் ஆர்17 மீது கடந்த வருடம் ஜூலை மாதம் 17 ஆம் திகதி உக்ரைனில் பக் ஏவு கணை வீசித் தாக்கப்பட்டதில், விமானத்தில் பயணம் செய்த 298 பேர் உயிரிழந்தனர்.

அந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டமை தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும் உக்ரைனும், ரஷ்யாவும் இதுகுறித்து ஒரு தரப்பு மற்றைய தரப்பு மீது குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் அல்மாஸ் அன்டே என்ற ரஷ்ய ஆயுத தயாரிப்பு நிறுவனம்,மலேசிய விமானத்தை உக்ரைன் தான் சுட்டு வீழ்த்தியிருக்கும். பக்-எம்1 சிஸ்டமில் இருந்து ஏவு கணை மூலம் மலேசிய விமானம் தாக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது. (ஐ)

# உலகநாடுகள் கூட்டுப்படையின் வான்வழித் தாக்குதலில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 10 ஆயிரம் பேர் சாவு

பெய்ரூட்,ஜூன் 5

சிரியா, ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான உலகநாடுகளின் கூட்டுப் படைகள் நடத்திய வான்வெளி தாக்குதலில் 10 ஆயிரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.


ஈராக்கில் கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடங்கி சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள், ஷியா முஸ்லிம் அரச படையினருக்கு எதிராக தாக்குதல் கள் தொடுத்து வந்தனர். இந்த நிலையில் கடந்த வருடம் ஜூன் மாதம் 9 ஆம் திகதி அவர்கள் அதிரடியாக நாட்டின் 2ஆவது பெரிய நகரமான மொசூலை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அதனைத் தொடர்ந்து மேலும் தாக்குதல்கள் தொடுத்து நாட்டின் வடக்கு மற்றும் மேற்கு பகுதி நகரங்களை கைப் பற்றினர்.

சிரியாவிலும் இதே நிலையே நீடித்தது. ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் வசம் பலநகரங்களை கொண்டு கைப்பற்றி தம்வசம் கொண்டு வந்தனர். ஈராக் மற்றும் சிரியா நாடுகளில் தாங்கள் கைப்பற்றிய நிலப்பரப்பை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் இஸ்லாமிய தேசமாக அறிவித்தனர்.

இந்த நிலையில், ஈராக்கில் அமெரிக்கர்களைப் பாதுகாக்கவும், சிறுபான்மையினர் நலனைக் காக்கவும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறி வைத்து வான்வழித் தாக்குதல் நடத்த உத்தரவிட்டு இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி அதிரடியாக அறிவித்தார்.

ஈராக் மற்றும் குர்திஷ் படைகளுக்கு ஆதரவாக வான்வழித் தாக்குதல் நடத்தப்படும். அதே நேரத்தில் ஈராக்கில் தரைவழியில் தாக்குதல் நடத்துவதற்கு துருப்புக்கள் அனுப்பி வைக்கப்படமாட்டாது. ஈராக்குடன் இன்னுமொரு போர் புரியவும் விருப்பம் இல்லையென்றும் ஒபாமா கூறியிருந்தார்.

இதற்கிடையே ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களிடம் பணயக் கைதியாகச் சிக்கியுள்ளவர்களது தலையைத் துண்டித்து கொலை செய்து வெறியாட்டம் ஆடினர். இதனையடுத்து ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளைக்



குறிவைத்து அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் தாக்குதல் தொடுத்து வருகிறன. சிரியாவி லும் அமெரிக் காவும், அரபு நாடுகளும் கூட்டாக வான்வழித் தாக்குதலைத் தொடங்கியன.

அண்மையில் ஈராக்கில் அன்பார் மாகாணத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் மேலும் ஒரு நகரை கைப்பற்றினர். சிரியாஈராக் இடையேயான கடைசி எல்லையையும் அவர்கள் கைப் பற்றினர். ஏறத்தாழ 18 மாதங்கள் நடத்திய போருக்குப் பின்னர் அந்த மாகாணத்தின் தலைநகரான ரமாடி நகரை கடந்த ஏப்ரல் மாதம் கைப் பற்றினர். இது ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான அமெரிக்கக் கூட்டு படையினருக்கு பெருத்த பின்னடைவு என்று அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

இதற்கிடையே சிரியாவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பால்மைரா நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றினர். சிரியாவில் பல்மைரா என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரை கைப்பற்றிய நிலையில், சிரியா ஈராக் இடையேயான கடைசி எல்லையையும் ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றியமை அமெரிக்க கூட்டுப் படைகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத் தியது. இதனையடுத்து உலக நாடுகள் தங்களது தாக்குதலை தீவிரப் படுத்த திட்டம் தீட்டி வருகிறன.

சிரியா, ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான உலகநாடுகள் கூட்டுப் படையினர் நடத்திய வான்வழித் தாக்குதலில் இதுவரையில் 10 ஆயிரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என்று அமெரிக்கா அதிகாரி பலின் கென் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் போரில் பொதுமக்கள் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பதை தெரிவிக்கவில்லை. ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து,தீவிரவாதிகள் தொடர்ந்து இயக்கத்துக்கு ஆள்சேர்த்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் முன்னேறிய ஐ.எஸ். தீவிரவாத படையை குர்திஷ் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர். குர்திஷ் படை அமெரிக்க இராணுவ உதவி யுடன், முக்கியமான நகரங்கள் மற் றும் கிராமங்களை திரும்ப கைப்பற்றி உள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எண்ணங்கள் அழகானால் எல்லாமே அழகுதான்

● கவி



உலகம் இயற்கையின் படைப்பு. இவ்வுலகத்தில் எல்லாப் பொருள்களும் எமது கண்களுக்கு அழகாகத்தான் தெரிகின்றன. எல்லா உயிரினங்களும் தன்னளவில் முழுமையாகவே உருவாக்கப் பட்டு அழகாகவே திகழ்கின்றன. எவையெல்லாம் படைக்கப்பட்டிருக்கின்றனவோ அவையெல்லாம் ஒரு குறைபாடும் இல்லாமல் முழுமையாகவே உருவம் பெற்றிருக்கின்றன. எனவே, முழுமையே அழகு. இதுவே படைப்பின் இலக்கணம். இதுவே வாழ்க்கையைப் பற்றிய எமது முன்னோர்களின் பார்வையும் கூட.

இந்த அற்புதப் பார்வையைக் கொண்டு நாம் பார்க்கும்பொழுது உலகத்தில் எல்லாமே அழகாகத்தான் இருக்கின்றன. யாவும் முறையாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

மனிதன் மட்டும் அழகில் ஏற்றத் தாழ்வு கண்டு, அசிங்கம் என்ற வார்த்தையைக் கண்டுப்பிடித்திருக்கின்றான். சிலரைக் குரூபி என்று குறைப்படுத்துகின்றான்.

இந்த அழகு உணர்ச்சி மிருகங்களிடையே கிடையாது. ஓர் அழகான, கூர்மையான கொம்புடைய மாடு, ஒரு வளைந்த கொம்புடைய மாட்டைப் பார்த்து முகம் சுளிக்காது. ஒரு சிவப்பு நாய், ஒரு கறுப்பு நாயைப் பார்த்து அவமானப்படுத்தாது. அதனோடு கொஞ்சிக் குலாவுவதை நாம் கண்ணால் பார்த்திருக்கிறோம்.

இந்த அழகு உணர்ச்சியில் அமிழ்ந்து போய்த் தனது இனத்தையே இகழ்ந்த பார்வையோடு பார்ப்பவன் மனிதன் மட்டுமே. சிலர் சிவப்பு அழகு என்று இறுமாப்புக் கொண்டிருப்பது, மல்லாந்து படுத்துக்கொண்டு தன் மேலே உமிழ்ந்து கொள்ளும் அவச் செயலுக்குச் சமமாகும். புற அழகை மட்டும் பார்க்கின்ற சில மூடர்கள் இந்தத் தோலை அழகு படுத்துவதுதான் தங்கள் சுய மதிப்பை உயர்த்திக்கொள்ளும் சாதனம் என்று நினைக்கிறார்கள்.

சிந்தனை, சொல், செயல் அழகே மனிதனுக்குப் பேரழகு என்று எமது பெரியோர்கள் சிந்திக்கின்றனர். எண்ணங்கள் அழகானால் வார்த்தைகள் கனிவாகும். வார்த்தைகள் கனிவாக வந்தால் செயல்கள் சீராக அமையும். அன்பையும் அறிவையும் அணியத் தெரியாதவர்கள் தான் அணிகலன்களை அணிந்து தங்கள் அசிங்கத் தோற்றத்தை மறைக்கப் பார்க்கிறார்கள்.

சமுதாயம் உடல் அழகு உள்ளவர்களை மட்டும் மதிப்பதில்லை. அவர்களின் நடத்தை நேராக இருக்கிறதா? சொற்கள் பணிவாக வருகிறதா? செயல்கள் சீராக இருக்கிறதா? என்று பார்த்துத்தான் ஒரு மனிதனை சமுதாயம் எடை போடுகிறது. உடல் அழகு மட்டும் எமக்கு உயர்வைத்தருவதில்லை. மன அழகே மாதவம்.

வார்த்தை ஜாலங்கள் புரிபவர்களை எவரும் மதிப்பதில்லை. வார்த்தைகளைக் கொட்டுபவர்களையும் எவரும் விரும்புவதில்லை. வண்ணங்கள் அழகானால் மண்ணுலகம் அழகாகும். எண்ணங்கள் அழகானால் விண்ணுலகம் வியந்து நிற்கும். வார்த்தைகள் அழகானால் வாழ்க்கையும் அழகாகும். இது புரியாதவர்கள் உடற் தோலுக்கு என்னதான் சாயம் பூசினாலும் அவர்கள் வெளுக்கமாட்டார்கள்.

*"மனம் வெளுக்க மார்க்கம் மன ஒழுக்கம்"* என்கிறார் பாரதியார்.

*"பணிவுடையன் இன்சொலன்*
*ஆதற் ஒருவற்கு*
*அணியல்ல மற்றுப் பிற"* –(குறள் 95)

இனிமையான வார்த்தைகளும் பணிவான நடத்தையுமே ஒருவனுக்கு சிறந்த அணிகலன்கள். அவன் உபயோகிக்கும் அழகுச் சாதனங்கள் அல்ல, என்கிறார் திருவள்ளுவர். முகத்துக்குச் சாயம் பூசும் மனிதனுக்குச் சில சமயங்களில் மனத்துக்கு வெள்ளை அடிக்கத் தெரிவதில்லை.

அழகு என்பது மன உணர்ச்சி. இதை அழகுச் சாதனங்களால் மெருகு படுத்தமுடியாது. எது சதா மனதுக்கு மகிழ்ச்சியை ஊட்டுவதோ, அதுவே அழகு என்கிறான் ஒரு ஆங்கிலக் கவிஞன். கீழான உள்ளக் கிளர்ச்சியோ உடல் தினவோ அல்ல அழகு. அழகு என்பது உடல்களின் தாளம் அல்ல, ஆத்மா வின் இராகம் என்கிறார் கண்ணதாசன்.

இந்த உலகத்தைப் பற்றி நமது ரிஷிகளின் பார்வையோ விசித்திரமாக இருக்கின்றது. இந்த வினோதமான பார்வையைக்கொண்டு இந்த உலகத்தைப் பார்க்கும்பொழுது இங்கு எம்மைவிட அழகானவர்கள் யாருமே கிடையாது. இந்த உலகத் தைவிட அழகான இடம் எங்குமே இருக்க முடியாது என்ற எண்ணம் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் தம்மை அறியாமலேயே ஆழமாகப் பதிந்திருக்கின்றது.

அனைத்தும் அழகு. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வுலகம் அழகு. எமக்குக் கிடைத்திருக்கின்ற இந்த வாழ்வும் அழகு. எமக்கு ஏற்பட்டிருக்கின்ற உறவுகள் அனைத்தும் அழகு. அழகு! அழகு! அழகைத் தவிர்த்து வேறேதும் இங்கு இல்லை. அனைத்திலும் அழகைப் பார்க்கின்றனர்; ரிஷிகள் பார்க்கின்ற அழகு மேலோட்டமான சிவப்பழகு மட்டுமல்ல. கண்களில் படுகின்ற அழகு அனைத்தையும் தாண்டி அதற்குப் பின்னால் ஒளிந்துக்கொண்டிருக்கின்ற கறுப்பழகைக் கண்டனர். இந்த அழகில் கண்ணனைத் தரிசித்தனர். இறைவனே ஒவ்வோர் உயிரிலும் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டனர். மனம் மலர்ந்து ஆராதனை செய்தனர்.

எம்முடைய அனுபவம் மட்டும் என்னவாம்? சற்றே சிந்தித்துப் பாருங்கள். இயற்கையைப் பார்த்தாலே எம்முள் இனம் புரியாத மலர்ச்சி.

ஒரு மரத்தைப் பாருங்கள்...

அது பூத்துக் குலுங்கும்போது நம் உள்ளமும் கூத்தாடவில்லையா?

ஒரு செடியைப் பாருங்கள்...அது இளம் தளிர்களைத் துளிர் விடும்பொழுது அந்தப் பச்சை வர்ணம் நம்முள் ஒரு பேரமைதியை மலர வைக்கவில்லையா?

ஓர் ஆற்றைப் பாருங்கள்.. அது மிக வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது, எதையோ தேடி எந்த ஓய்வும் இன்றி மகிழ்ச்சியாய்ப் போய்க் கொண்டிருப்பதாகப்படவில்லையா?

இயற்கை அன்னை தினமும் நமக்குப் பாடம் நடத்துகிறாள். நாம்தான் செயற்கையை அள்ளி முகத்தில் அப்பிக்கொண்டு தட்டுத்தடுமாறி நிற்கின்றோம். அப்பியது கண்களில் என்று தெரியாமலா? அல்லது தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கிறோமா?

# வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டத்துக்கு ஆதரவளித்த ஜனசக்தி




ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் பாதசாரிகள் மற்றும் மோட்டார் வாகன ஓட்டுநர்களின் பாதுகாப்புத் தொடர்பான அதன் அர்ப்பணிப்பை வெளிப் படுத்தும் வகையில், ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி பன்னிப்பிட்டிய பிர-தேசத்தில் உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்து வைக்கப்பட்ட விசேட வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு திட்டத்துக்கு ஆதரவு வழங்கியிருந்தது.

பாதசாரிகள் மற்றும் மோட்டார் வாகன ஓட்டுநர்களுக்கான வீதிப் பாதுகாப்புகளை அபிவிருத்தி செய் யும் இந்த வீதிப் பாதுகாப்பு செயற்திட்டமானது தேசிய பாதுகாப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக, நாட்டின் 25 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் மிக நெரிசலான இடங்களில் 200 பதாகைகளை வைப்பதற்கு ஜனசக்தி அனுசரணை வழங்கியிருந்தது. சமூக நல அமைச்சின் கீழ் தேசிய சி.எஸ்.ஆர் மேலாண்மை திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட இந்த பதாதைகள் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள், புதையிரதக் கடவைகள், சந்தி, குறுக்கு பாதைகள், பக்கச்சாலைகள், சுற்றுவட்டப் பாதைகள் மற்றும் வழுக்கக்கூடிய வீதிகள் போன்ற இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பதாதைகளை பாதசாரிகளுக்குத் திசைகள் தவிர்ந்து, இடம் குறித்த முக்கிய தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் மூலம் கடந்தாண்டு முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளைத் தொடர்ந்து சமூக நலன்புரி அமைச்சின் கீழ் இந்தத் திட்டம் செயற்படுத்தப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை முன்னெடுக்க தேசிய பாதுகாப்பு குழு பரிந்துரைகளை வழங்கியிருந்தது. அதிக விபத்துக்கள் ஏற்படுவதற்கான அபாயம் நிலவும் கொழும்பில் நாம் இதனை அறிமுகம் செய்துள்ளோம். பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனமான ஜனசக்திக்கு இத் திட்டத்துக்கு அனுசரணை வழங்குமாறு நாம் அழைப்பு விடுத்திருந்தோம். இது வொரு தேசிய தேவைப்பாடு என்பதனால் தனியார்– பொதுத் துறை கைகோர்ப்பு எமக்கு தேவைப் பட்டது. இத் திட்டத்திற்கு ஜனசக்தி ஆதரவு வழங்குவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம் என தேசிய கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு மேலாண்மை திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிஷந்த ஜயதிலக தெரிவித்தார்.

இந்த அறிமுக நிகழ்வில் பிரபல ஓட்டப்பந்தய வீரர் டிலந்த மலகமுவ பங்குபற்றியிருந்தார். வீதி விபத்துக்கள் மூலம் பெரும்பாலான உயிர்கள் சாவடைவதன் காரணமாக ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி பாதுகாப்பு தொடர்பான திட்டமொன்றை விஹாரமகாதேவி பூங்காவில் நாம் ஒழுங்கு செய்துள்ளோம். இந்த முன்னெடுப்பு எமது நாட்டுக்கு மிகவும் ஏற்றது. மக்கள் முறையான வீதி அறிவுறுத்தல்களைப் பின்பற்றினால் பெரும்பாலான விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் என மலகமுவ குறிப்பிட்டார்.

இந்த வீதிப் பாதுகாப்பு பதாகைகள் மூலம் வாகன ஓட்டுநர், திசைகள் பற்றி மட்டுமன்றி வீதி அபாயங்கள் தொடர்பிலும் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். இந்தத் திட்டமானது விசேடமாக பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் உள்நாட்டு அதிகாரிகள் போன்ற பொது மக்களிடமிருந்து கிடைத்த கோரிக்கைகளின் விளைவாக முன்னெடுக்கப்பட்டது. இந்த பதாகைகள் அபாய சமிக்ஞைகளை வழங்குவதுடன், பாதுகாப்பான பயணம் தொடர்பான குறிப்புக் களையும் உள்ளடக்கியுள்ளன. இந்தத் திட்டமானது உள்நாட்டு சமூகத்தை பாதுகாக்கும் ஜனசக்தியின் அர்ப் பணிப்புடன் பொருந்துகிறது. இந்தத் திட்டத்துக்கு அனுசரணை வழங்குவதையிட்டு நாம் பெருமையடைவதுடன், எதிர் காலத்தில் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளோம் என வர்த்தக செயற்பாட்டு முகாமையாளர் கெலும் வீரசிங்க தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் கடவையில் கற்கள்

மல்லாகத்தில் இருந்து குப்பிளான் செல்லும் வீதியில் காணப்படும் ரயில் கடவையைக் கடந்து செல்வதில் சிரமங்கள் தோன்றியுள்ளன.
இந்த ரயில் கடவையில் காணப்படும் சிறிய கற்கள் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறாகக் காணப்படுகின்றன. இதனால் சைக்கிள்களில் செல்பவர்கள் அவற்றை உருட்டியவாறு செல்வதைக் காணமுடிகிறது. மேலும் சிறு வயதினரான பாடசாலை மாணவர்களின் நிலைதான் பரிதாபமாகக் காணப்படுகின்றது.
ஏற்கனவே ரயில் கடவை உயரமாக உள்ள நிலையில் அதனைத் தாண்டிச் செல்வதற்குச் சிரமப்படும் மக்கள், கற்களும் அங்கு நிறைந்திருப்பதால் அதிகளவு இன்னல்களுக்கு ஆளாகின்றனர்.
சென்ற வாரம் இந்தக் கடவை ஊடாக சைக்கிளில் சென்ற முதியவர் ஒருவர் கற்கள் சறுக்கியதால் கீழே விழுந்ததைக் காண முடிந்தது.
எனவே உரிய அதிகாரிகள் அதனைப் பார்வையிட்டு அங்குள்ள குறைபாடுகளை அகற்றித் தர வேண்டியது அவர்களின் கடமையாகும்.

*மு.கந்தப்பு ,மல்லாகம்.*

# வட்டுக்கோட்டை தபாலகத்துக்கு அமையுமா நிரந்தரக் கட்டடம்

வட்டுக்கோட்டை தபாலகம் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று வரை சொந்தக் கட்டடம் இல்லாத நிலையிலேயே இயங்கி வருகின்றது. ஏனைய தபாலகங்கள் வசதிகள் நிறைந்த வாடகைக் கட்டடங்களிலும், சொந்தக் கட்டடங்களிலும் இயங்கி வரும் நிலையில், வட்டுக்கோட்டை தபாலகம் அழிவுற்றுச் செல்லும் ஒரு நாற்சார் வீட்டில் தான் இயங்கி வருகிறது.
வாடிக்கையாளர்கள் தபாலக சேவையை வசதியாகப் பெற்றுக் கொள்ளவும், பணியாளர்கள் வசதியான முறையில் கருமமாற்றவும், வசதியான கரும பீடங்களை அமைப்பதற்கான இடமின்மை காரண்மாக, நடுஅறையில் அமைந்த ஒரு கருமபீடத்தினூடாகவே தபாலக சேவைகள் அனைத்தும் இடம்பெற்று வருகின்றன.
வட்டுக்கோட்டை தபாலகத்துக்கென, வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் காணி ஒன்று வழங்கப்பட்டிருக்கின்ற நிலையிலும், கட்டடம் அமைப்பதற்குரிய நிதி திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெறாமையினால், தொடர்ந்தும் வசதியீனங்களின் மத்தியிலேயே தபாலகம் இயங்கி வருகின்றது.
இதனால் வட்டுக்கோட்டை தபாலக பணியாளர்களும், பிரதேச மக்களும் தபாலகம் வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடத்தில் எப்போது இயங்கும் என எதிர்பார்த்த வண்ணமுள்ளனர்.
எனவே சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொண்டு, நிதி கிடைப்பதற்கு ஆவன செய்து வட்டுக்கோட்டை தபாலகத்தை சொந்தக்கட்டடத்தில் இயங்கச் செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.


*பா.பத்மினிதேவி*
*சந்தை முன்புறம்*
*வட்டுக்கோட்டை*




# வீதி புனரமைக்கப்படுமா?

சுன்னாகம் புத்தூர் வீதியில் ஆரம்பிக்கும் புகையிரத நிலையத்துக்குக் கிழக்குத் திசையில் அமைந்துள்ள வீதி மோசமான நிலையில் காணப்படுவதால் இதனைப் பயன்படுத்துகின்ற மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வீதி ரயில் பாதை ஓரமாகச் சென்று மல்லாகத்தில் முடிவடைகிறது. தினம் நூற்றுக்கணக்கான மக்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றனர்.
மேலும், இந்த வீதி ஆரம்பிக்கும் இடம் பள்ளமான நிலையில் காணப்படுவதால் மழை பெய்யும் போது வெள்ளம் குளம் போன்று தேங்கிக் காணப்படுகின்றது. இதனைக் கடந்து செல்வது கடும் சிரமத்தை ஏற்படுத்தி வருகின்றது. இந்த வீதியின் சில இடங்களில் கற்கள் பரவிக் காணப்படுவதால் சைக்கிள் போன்ற வாகனத்தில் செல்பவர்கள் விழுந் தெழ வேண்டியுள்ளது.
சில இடங்களில் ரயில் பாதைக்கெனப் பரவப்பட்ட கற்களும் பரவிக் காணப்படுகின்றன. இதனையும் சரி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.
பல ஆண்டுகளாகப் புனரமைக்கப்படாத இந்த வீதியின் அவல நிலை தொடர்பாக எவருமே அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. மாரிகாலம் ஆரம்பமாவதற்கு முன்னர் இந்த வீதியைப் புனரமைத்து வழங்குவது உரியவர்களின் முக்கிய கடமையாகும்.

*ம. பொன்னம்பலம்*
*சுன்னாகம்*




# அரசமைப்புப் பேரவையும் மஹிந்த அணியின் அரசியலும்

அரசமைப்புப் பேரவைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிவில் உறுப்பினர்கள் மூவரின் நியமனங்களை அங்கீகரிப்பதற்காக நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் விசேடமாகக் கூடியபோதிலும், ஏற்கனவே நாம் எதிர்பார்த்தது போன்று மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிக்காட்டிய கடுமையான எதிர்ப்பினால் நாடாளுமன்றம் 9ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 19ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் அரசமைப்புப் பேரவையை உரு வாக்குவதும் அதனூடாக சுதந்திர ஆணைக் குழுக்களை அமைப்பதும் கேள்விக்கிடமாகிவிட்டன. 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் சுதந்திர ஆணைக்குழுக்கள் நியமனம் மிகவும் முக்கியமானது.
அரசமைப்புப் பேரவைக்கான அனைத்து உறுப்பினர்களின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டு அதன் விவரம் சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவர்களில் மூன்று சிவில் உறுப்பினர்களும் அடங்குகின்றனர். இவர்கள் தொடர்பாக நாடாளு மன்றத்தின் அங்கீகாரத்தைக் பெறுவதற்காகவே நாடாளுமன்றம் விசேடமாக நேற்றுக் கூட்டப் பட்டிருந்தது. எனினும், மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்திய கடும் எதிர்ப்புக் காரணமாக நாடா ளுமன்ற அமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 9ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்போதும் பேரவைக்கு நியமிக்கப்பட்ட சிவில் உறுப்பினர்களுக்கான அங்கீகாரத்தைப் பெற முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதே. அரசமைப்புப் பேரவையை செயற்படுத்தாது நாடாளுமன்றத்தைக் கலைப்பதே மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களது திட்டம்.
நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்பட இருப்பதால் பொதுத் தேர்தலின் பின்பு அரசமைப்புப் பேரவையை நிறுவமுடியும் என முன்னாள் அமைச்சரும் மஹிந்தவின் தீவிர ஆதரவாளருமான வாசுதேவ நாணயக்கார பகிரங்கமாகவே கருத்து வெளியிட்டுள்ளார். ஆகவே, பொதுத் தேர்தலுக்கு முன் இதனை நிறுவி சுதந்திர ஆணைக் குழுக்களை செயற்படுத்துவது இலகுவான காரியமல்ல. தேர்தலுக்குப் பின்பு பதவிக்கு வரும் அரசுக்கு அரசமைப்புப் பேரவை உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் வாய்ப்பை வழங்கவேண்டும் என்பது இதனை இழுத்தடிக்கும் அல்லது இல்லாமல் செய்யும் நோக்கம் கொண்டது.
அரசமைப்புப் பேரவைக்கு நியமிக்கப்பட்ட மூன்று சிவில் உறுப்பினர்களை எதிர்ப்பதற்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான காரணங்கள் எதுவும் கிடையாது. ஏனெனில் சபாநாயகர், பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் மூவரும் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னரே சிவில் உறுப் பினர்கள் மூவரையும் தெரிவுசெய்தனர். அப்படி இருந்தும் அதற்கு இப்பொழுது எதிர்ப்புக் காட்டப்படுகிறது. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த-19ஆவது அரசமைப்புத் திருத்தத்தினூடாக அரசமைப்புப் பேரவை அமைப்பதைக் குழப்புவது ஒரு நாசகாரச் செயலாகும்.
மூன்று சிவில் உறுப்பினர்களின் நியமனத்தை அங்கீகரிக்க நாடாளுமன்றம் நேற்று விசேடமாகக் கூடியபோதிலும், மத்திய வங்கி ஆளுநர் விவகாரம் பெரும் வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியதையும் மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புக் காரணமாக அரசமைப்புப் பேரவைக்கு சிவில் உறுப்பினர்களை அங்கீகரிப்பது பிற்போடப்பட்டுள்ளதையும் மஹிந்த ஆதரவு எம்.பிக்களால் அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள பெரும் சவாலாகவே கருதவேண்டியுள்ளது.
நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாக மிரட்டுவதும், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் உதவிச் செயலாளர் ராதிகா குமாரசுவாமி அரசமைப்புப் பேரவைக்கு நியமனம் பெறுவதை எதிர்ப்பதும், மத்திய வங்கி ஆளுநர் விவகாரம் முற்றுப் பெறாமல் நீண்டுகொண்டு போவதும் மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போதைய அரசைக் குழப்புவதற்கு எதற்கும் தயாராக உள்ளனர் என்பதையே கோடி காட்டுகின்றது. தேர்தலுக்கு முன்னர் சுதந்திர ஆணைக்குழுக்கள் இயங்குவது மிகவும் அவசியமாகும்.
மஹிந்த அணியினருக்கு மீண்டுமொருதடவை தோல்வியை காட்டமான முறையில் வழங்குவது இந்த நாடு ஜனநாயக ரீதியில் முன்னேறுவதற்கு இன்றியமை யாதது என்பதை நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற நிகழ்வுகள் கோடிட்டுக் காட்டுகின்றன.
ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி கண்ட பின்னரும் மஹிந்தவும் அவரது பரிவாரங்களும் அடங்கியதாகத் தெரியவில்லை. குறுக்கு வழியால் எப்படியாவது ஆட்சிக் கதிரைகளில் அமர்வதற்கு துடியாகத் துடிக்கிறார்கள் அவர்கள். சூடு கண்ட பூனை அடுப்பங்கரை சேராது என்பார்கள். ஆனாலும் மஹிந்தவின் விடயத்தில் அது பொருந்தாத பழமொழியாகவே உள்ளது. சூடு கண்ட பின்னரும் அந்தப் பூனை அடுப்பங்கரையை நோக்கியே ஓடுவதற்கு அடிக்கடி எத்தனிக்கிறது.
அடுத்த பொதுத் தேர்தலில் மஹிந்தவை பிரதமராக களம் இறக்குவதற்கான பகீரதப் பிரயத்தனங்கள் இப்பொழுதே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இதற்காக மஹிந்தவும் அவரது கூட்டாளிகளும் பலவாறான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். தன்னை பிரதமர் வேட்பாளராக அறிவிக்குமாறு கேட்டு ஜனாதிபதி மைத்திரியுடன் மஹிந்த நடத்திய பேச்சு படுதோல்வியில் முடிவடைந்தது. மஹிந்தவின் இந்தக் கோரிகையை அடியோடு மறுத்து நிராகரித்து விட்டார் மைத்திரிபால. இதனால் மனம் உடைந்து போன மஹிந்த சோர்ந்துபோகவில்லை. ஆட்சிக் கதிரையை பிடிப்பதற்காக தன்னாலான அனைத்து பலப் பிரயோகங்களையும் அவர் மேற்கொண்டு வருகிறார். மஹிந்தவே பிரதமர் வேட்பாளர் என்று அவரது கூட்டாளிகள் இப்போது அடிக்கடி அடித்துக் கூறி வருகின்றனர். ஆயினும் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு மௌனமாக காய்நகர்த்து கிறார் மைத்திரி. அந்தக்காய்நகர்த்தலில் மஹிந்தவுக்கு நல்ல காலமா? கெட்ட காலமா? என்பது போகப் போகத் தெரியும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பிரதமர் ரணில் வழங்கிய பதில் எதிரணியினருக்கு வாய்ப்பூட்டுப் போடுமா?

ஒரு மனிதர் மேல்நோக்கிப் படுத்துக்கொண்டு துப்புவாரானால் மேலே சென்ற உமிழ்நீர் அவர் முகத்திலேயே திரும்பவும் வந்து விழும்.

நாடாளுமன்றத்தில் சில எதிர்க்கட்சியினர் - பந்துல குணவர்த்தன, தினேஷ் குணவர்த்தன போன்றவர்கள் இந்த வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள் போல் தோன்றுகிறது.

மத்தியவங்கியின் புதிய ஆளுநராக அர்ஜுன மகேந்திரன் நியமிக்கப்பட்டமை தொடர்பாக ஏற்கனவே அரசுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி குரல் எழுப்பியோர் அரசு நியமித்த விசாரணைக்குழுவினாலும் உயர் நீதிமன்ற வியாக்கியானத்தாலும் அது தெளிவுபடுத்தப்பட்டு விட்டமையால் இப்போது மத்திய ஆளுநர் தொடர்பாக வேறு ஒரு குற்றச்சாட்டைக் கையில் எடுத்துள்ளனர்.

அர்ஜுன மகேந்திரன் சிங்கப்பூர் பிரஜை. ஆகவே அவர் இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநராக எவ்வாறு பதவி வகிக்க முடியும்? பணநோட்டுக்களில் அவர் எப்படி கையெழுத்திட முடியும் எனக் கேள்வி எழுப்புகிறார்கள். அவர்கள் மட்டுமன்றி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவும் இந்தக் கேள்வியைக் கிளப்புவதில் ஈடுபட்டுள்ளார்.

இரத்தினபுரி கலவான தொகுதியில் போதிராம பௌத்த கோயிலில் வழிபாட்டுக்கு பிறகு இடம்பெற்ற கூட்டத்தில் பேசியபோது வெளிநாட்டவரொருவர் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டமை தவறு. அவர் பணநோட்டுக்களில் கையொப்பமிட்டதும் தவறு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், இவர்கள் அனைவருக்குமே முகத்தில் அறைந்தாற்போல பிரதமர் ரணில் தக்கபதிலடி கொடுத்திருக்கிறார்.

இலங்கை சுதந்திரமடைந்ததின் பின்னர் மத்திய வங்கியின் முதலாவது ஆளுநராக பதவி வகித்தவர் ஓர் அமெரிக்கர். எனவே வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் இலங்கையில் தொழில் புரியவோ, வர்த்தகத்தில் ஈடுபடவோ எந்தவித தடையும் இல்லை. அதற்கான சட்டமும் கிடையாது என்ற சுட்டிக் காட்டியுள்ளார் பிரதமர் ரணில் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வேளை,

அர்ஜுன மகேந்திரன் தற்போது மத்தியவங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டதால் கடந்த ஆட்சியில் நடந்த ஊழல் மோசடிகள் வெளிவரப் போகின்றனவே என்ற அச்சம் மஹிந்த ஆதரவாளர்களுக்கு எழுந்துள்ளது. அமெரிக்கப் பிரஜா உரிமை கொண்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலராகவும், ஆஸ்திரேலிய பிரஜாவுரிமை கொண்டுள்ள பாலித ரோகண ஐ.நாவில் இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதியாகவும் நியமனம் பெறமுடியுமானால் சிங்கப்பூர் பிரஜை யான அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநராக ஏன் பதவி வகிக்க முடியாது என்றும் ரணில் கேள்வி எழுப்பியிருந்தார். மகேந்திரன் (தமிழர்) சிறுபான்மையினத்தவர் என்பதாலா அவரது நியமனத்தை எதிர்க்கிறீர்கள் என்று குறிப்பிட்டு எதிர்த்தரப்பினரின் வாதத்தில் மறைந்து கிடக்கும் இனக்குரோதத் திட்டத்தை அம்பலப்படுத்தினார்.

மஹிந்த ஆட்சியில் உயர் அரச பதவிகளில் இருந்த வெளிநாட்டவர் தொடர்பில் தினேஷ் குணவர்த்தன போன்றவர்கள் கேள்வி எழுப்பியிருப்பார்களானால் அவர்கள் வெள்ளை வானில் கடத்தப்பட்டுக் காணாமற் போயிருப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டிய பிரதமர், உங்கள் இனவாதம், மதவாதம், குலவாதத்துக்கு ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் முடிவு கட்டி விட்டனர். அதற்கு மீண்டும் இடமளிக்க முடியாது எனக் காட்டமாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பது போல் மத்திய வங்கி ஆளுநர் நியமன விடயத்தை தொடர்ந்து எழுப்புவதன் மூலம் ஐ.தே.க. அரசின் மீதும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதும் ஊழல் குற்றச்சாட்டுக்களை சுமத்தி மக்கள் மத்தியில் பரப்புரை செய்ய முயலும் எதிரணியினரின் எத்தனத்தை பிரதமர் தமது விரிவான பதிலின் மூலம் புஸ்வாண மாக்கியிருக்கிறார்.

பதவியில் இருந்த முன்னைய அரசில் அங்கம் வகித்திருந்தாலென்ன இன்றைய அரசில் அங்கம் வகித்திருந்தாலென்ன ஊழல் மோசடி நிர்வாகச் சீர்கேடுகளில் சம்பந்தப்படுபவர்கள் மக்கள் வைத்த நம்பிக்கைக்கு துரோகமிழைத்தவர்களாகவே கருதப்படுவார்கள். இவைகளில் இருந்து தப்புவதற்கும் அவைகளை மறைத்துக்கொண்டு மீண்டும் மக்கள் முன்சென்று தமக்கு ஆதரவு கோரும் நோக்கில் இன, மத பேதங்களை கிளப்பி பயன் அடைய விரும்புகிறவர்களை தர்மம் பாதுகாக்கப் போவதில்லை. ஜனவரி 8 ஆம் திகதி அளிக்கப்பட்ட மக்கள் தீர்ப்பு இனி வருங்காலங்களிலும் நிலைக்கும் -- நிலைக்க வேண்டும் -- நிலைக்க செய்வார்கள் மக்கள் என்று நம்புவோம்.

# சாமானியனாக வாழ்ந்து காட்டும் ஜனாதிபதி மைத்திரி

● சேரலாதன்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பில் அமைந்துள்ள பாதணிகளை விற்பனை செய்யும் கடையொன்றுக்குச் சென்று தமக்குத் தேவையான பாதணிகளைக் கொள்வனவு செய்துள்ளார். இதன்போது வாடிக்கையாளர்கள் வழக்க மாகப் பயன்படுத்துகின்ற இருக்கையில் அமர்ந்து அவர் பாதணிகளைத் தெரிவு செய்கின்ற படங்களும் ஊடகங்களில் இடம்பிடித்துள்ளன. ஜனாதிபதி விலையுயர்ந்த பாதணிகளை அங்கு கொள்வனவு செய்யாது சாதாரண தரத்தில் உள்ளவற்றையே கொள்வனவு செய்ததாகவும் அறிய முடிகின்றது. மேலும் ஜனாதிபதியின் வருகையின் பொருட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையெனவும், வீதிகள் மூடப்படவில்லையெனவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.



நாட்டின் அதியுயர் பதவியில் அமர்ந் திருந்தபோதிலும் தம்மையொரு சாதாரண குடிமகனாகவே உருவகித்துக் காண்பித்த ஜனாதிபதி மைத்திரிபால இந்த நாட்டின் அரசுத் தலைவராக இருப்பதற்குத் தமக்குள்ள தகுதியை நிரூபித் துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று லட்சம் ரூபாவுக்குக்கூட பாதணிகளைக் கொள்வனவு செய்து அணிந்ததாகவும், இடுப்புப் பட்டியொன்றை ஒரு லட்சம் ரூபாவுக்கு மேல் பணம் கொடுத்து வாங்கியதாகவும் செய்திகள் வெளிவந்தன. அவர்களின் இந்த நடவடிக்கை பிலிப்பைன்ஸ் நாட்டின் சர்வாதி காரியாக இருந்த மார்க்கோஸின் குடும்பத்தினருடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கதாக உள்ளது. போர் ஒன்றையே காரணம் காட்டி இந்த நாட்டு மக்களை அச்சத்தில் உறைய விட்டு அதில் குளிர் காய்ந்தவர்கள் மஹிந்த குடும்பத்தினர். அதிகார துஷ்பிரயோகமும், ஆடம்பர வாழ்க்கையும் அவர்களுக்கு அத்துப்படியான விடயங்கள். அவர்களுக்கு எதிரான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை விசாரித்து முடிவு காண்பதற்கு தற்போதைய ஜனாதிபதியின் பதவிக் காலம் போதுமானதா என்பது சந்தேகமானதாகவே உள்ளது. மஹிந்த குடும்பத்தினர் மட்டுமல்லாது அவர்களுடன் ஒட்டி உறவாடியவர்களும் ஊழல் மோசடிகள் குறித்து குற்றம் சாட் டப்பட்ட நிலையில் காணப்படு கின்றனர்.

இந்த நிலையில் குற்ற விசாரணைகளிலிருந்து தப்பிக்கவே முடியாது என்பதை நன்றாக உணர்ந்து கொண்ட மஹிந்த தரப்பினர் மீண்டும் மஹிந்தவைப் பதவியில் அமர்த்துவதன் மூலமாகத் தாம் தப்பித்துக் கொள்ள முடியுமென நம்புகின்றனர். இதன் காரணமாகவே மஹிந்தவைத் தீவிர அரசியலில் ஈடுபட வைப்பதற்குத் துடியாய்த் துடிக்கின்றனர். ஆரம்பத்தில் இதற்கெல்லாம் மனமில்லாதவர்போன்று நாடகமாடிய மஹிந்த தற்போது அரசியலில் ஈடுபட இசைவு தெரிவித்திருப் பதாகத் தெரியவருகின்றது.

மஹிந்த தேர்தலில் போட்டியிடுவாராயின் அவரை ஆதரிப்பதற்கும் ஒரு கூட்டம் இருக்கத்தான் போகின்றது. நல்லவர் யார் கெட்டவர் யார் என்பதை நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்க வேண்டிய வாக்காளர்கள் இதை விடுத்து குறுகிய அரசியல் இலாபம் தேடுபவர்களுக்கு ஆதரவு தெரிவிக்க முன்வருகின்றமை ஜனநாயகத்தின் அத்திபாரத்தையே புரட்டிப் போட்டு விடக் கூடும்.

> நாட்டின் அதியுயர் பதவியில் அமர்ந் திருந்தபோதிலும் தம்மையொரு சாதாரண குடிமகனாகவே காண்பித்து வரும் ஜனாதிபதி மைத்திரிபால இந்த நாட்டின் அரசுத் தலைவராக இருப்பதற்குத் தமக்குள்ள தகுதியை நிரூபித்துள்ளார்.

இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் மஹிந்த யார்? மைத்திரி யார்? என்பது நன்கு புரியும். இந்த இருவரும் கடந்த காலங்களில் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதையும் அவர்கள் அறிவார்கள். மிக இளவயதில் அரசியல் பாரம்பரியம் மிக்க ஒரு குடும்பத்திலிருந்து அரசியலுக்குள் நுழைந்தவர் மஹிந்த. நாடாளுமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர், பிரதமர், ஜனாதிபதியென படிப்படியாக அரசியலில் உச்சத்தைத் தொட்டவர் அவர். ஆனால் சர்வ அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்த பின்னர் அவர் தம்மை முழுமையாக மாற்றிக் கொண்டார். எவையெல்லாம் நடக்கக் கூடாதனவோ அவையெல்லாம் தாராளமாகவே இவரது ஆட்சிக் காலத்தில் நடந்தேறின. அரசை எதிர்த்தவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இருக்கவில்லை. கொலைகாரர்களும், கடத்தல்காரர்களும் அரசின் செல்லப்பிள்ளைகளாகப் போஷிக்கப்பட்டனர்.

சிறுபான்மை இனத்தவர்கள் மோசமாக நசுக்கப்பட்டனர். இதைவிட நாட்டின் பொருளாதாரமே ஆட்டம்காணும் அளவுக்கு ஊழலும், மோசடிகளும் தலைவிரித்தாடின. இன்று இந்த நாட்டில் வாழுகின்ற ஒவ்வொரு பிரசையும் பெரு மளவு கடன் சுமைகளைத் தலையில் சுமந்து நிற்கின்றனர்.

மஹிந்தவுடன் ஒப்பிடும்போது மைத்திரிபால சிறிசேன முற்றிலும் வேறுபட்ட ஒரு மனிதராகவே காட்சி தருகின்றார். சாதாரண விவசாயக் குடும்பத்திலிருந்து பிறந்த அவர் அரசியலில் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவராக விளங்கிய போதிலும் இன்றளவும் சாதாரண மனிதராகவே வாழ்ந்து காட்டுகின்றார். அவர் மீது இதுவரை ஓர் ஊழல் புகார்கூடத் தெரிவிக்கப்படவில்லை. அவர் சொன்னதையே செய்கின்றார். செய்ததையே சொல்கின்றார். மஹிந்த இவருக்கு முன்னால் நிற்பதற்குத் தகுதி கொண்டவர்தாமா என்பது சிந்திக்கத்தக்கது.

பல அக்கினிப் பரீட்சைகளைத் தாண்டித்தான் மைத்திரியால் ஜனாதிபதிப் பதவிக்கு வரமுடிந்துள்ளது. தமது வாக்குறுதியின் பிரகாரம் ஜனாதிபதிக்குரிய முக்கிய அதிகாரங்கள் இவரால் களையப்பட்டுவிட்டன. மேலும் அவரது கரங்களைப் பலப்படுத்துவதன் மூலமாகவே முன்னைய ஊழல்களும், மோசடிகளும் வெளிக்கொணரப்படும்.

இந்த நிலையில் இனவாதத்தையும், அரசியல் மோசடிகளையும் மூலதனமாகக் கொண்டு மீண்டும் அரசியலில் ஈடுபடுவதற்கு விழையும் மஹிந்தவை அரசியலில் நிராகரிப்பதன் மூலம் நாட்டின் பொது மக்கள் அவருக்கு மீண்டுமொரு பாடம் கற்பிக்க இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீதிமன்ற தாக்குதலில் பொலிஸாரின் அடுத்த நகர்வு என்ன?

● மதுமிதன்

ஒரு பாடசாலை மாணவியின் படுகொலையைத்தொடர்ந்து ஏற்பட்ட உணர்வுபூர்வமான எதிர்ப்பலைகள் மெதுமெதுவாக யாழ்ப்பாணத்திலிருந்து வடக்கு, கிழக்கு மாகாணமெங்கும் பரவி இலங்கையிலிருந்து சர்வதேசமெங்கும் வியாபித்தது. அந்த எதிர்ப்பலையின் ஒரேநோக்கம் பாதிக்கப் பட்ட தரப்பினருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே.

முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வெளிக்கிளம்பிய மக்கள் சக்தியின் எதிர்ப்பும், ஆவேசமும் கொந்தளிப்பும் பல தரப்பினரின் கவனத்தை ஈர்த்தது. அவ்வாறு பொங்கிக்கிளர்ந்த மக்களின் நியாயமான உணர்வலைகளை தமது குறுகிய சுய இலாபத்துக்காக பயன்படுத்த நினைத்த சதிகாரர்களின் கூட்டுச்சதியின் விளைவுதான் யாழ். நீதிமன்றக் கட்டட தொகுதி மீதான மிலேச்சத்தனமான தாக்குதல். ஆனால் இதில் பரிதாபப்படவேண்டிய விடயம் என்னவெனில், இந்த சதிவலையில் பல உண்மையான உணர்வாளர்களும் சிக்குண்டமைதான்.

யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதிமீதான தாக்குதல் ஏற்கனவே நன்கு திட்டமிடப்பட்ட ஒரு தாக்குதலாகவே காணப்படுகிறது. இதில் பல தரப்பினரின் திட்டமிடல்களும் ஆதரவுகளும் பின்புலத்தில் காணப்படுகின்றன. இந்தத் திட்டமிடல்களுக்கு யாழ்ப்பாணப் பொலிஸாரும் தெரிந்தோ தெரியாமலோ உடந்தையாகச் செயற்பட்டார்களா என ஐயமெழுகின்றது. ஆர்ப்பாட்ட தினத்தன்று பொலிஸார் நடந்து கொண்டவிதம் மேற்கண்ட சந்தேகத்தை தூண்டுகிறது.

இருபதாம் திகதி இடம்பெற்ற தாக்குதலுக்கு முதல்நாளும் நீதிமன்றம் மீது ஒரு குழுவினரால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனையடுத்து நீதிமன்றத்தின் பாதுகாப்பை உறுதி செய்யுமாறு யாழ்ப்பாண நீதிவானினால் யாழ்ப்பாண பொலிஸ்நிலைய தலைமைப் பொறுப்பதிகாரிக்கும் வட பிராந்தியத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. தாக்குதல் நடந்த இருபதாம் திகதி காலையிலும் பாதுகாப்பு நிலைமைகளில் காணப்பட்ட குறைபாடுகளைத் தொடர்ந்து நீதிவானினால் மறுபடியும் தொலைபேசி மூலமாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து சட்டத்தரணிகளாலும் பொலிஸாரின் உதவி நாடப்பட்டிருந்தது. அவ்வாறிருந்த போதும் நீதிமன்ற பாதுகாப்புக்கென பொலிஸார் பெரிதாக எதையும் செய்திருக்கவில்லை.

காலையில் நீதிமன்றத்தை சுற்றி இருபதுக்கும் குறைவான பொலிஸாரே பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களிடம் பெரியதொரு கூட்டத்தை சமாளிப்பதற்கான எந்தவொரு ஏற்பாடும் இருக்கவில்லை. நேரம் முற்பகல் பத்துமணியைத் தாண்டத் தொடங் கியபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் நூற்றுக் கணக்கில் சேரத்தொடங்கியிருந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் மாணவியின் படுகொலைக்கு நீதிகேட்டே திரண்டிருந்தனர். முப்பது வருடகால போரின் ஆரம்பத்தில் பாலகர்களாக இருந்த பலர் இப்போது தலைமைதாங்கும் இளைஞர்களாக மாறி பாதகமொன்றுக்கு நீதிகேட்கும் உத்வேகத்தில் இருந்தனர். இலங்கை சட்டத்தின் சிக்கலான இரும்புப்பிடி செயன்முறைக்குள் மாட்டுப்பட்டால் ஏற்படப்போகும் எதிர்விளைவுகள் எதைப்பற்றியும் அறியாதவர்களாக அவர்கள் இருந்தனர். அவர்களுக்குள் கலந்த புல்லுருவிகள் மெதுவாக தமது நாசகார வேலையை அரங்கேற்றத் தொடங்கினர். பொலிஸாருடன் முரண்பட்டவாறே மெதுமெதுவாக தற்காலிகத் தடைகளைத் தாண்டியவாறு உள்நுழைந்த அவர்கள் சடுதியாக நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது கற்களால் எறிந்தும், வாகனங்களை உடைத்தெறிந்தும் பொலிஸ் அலுவலர்களுக்கு கற்களாலும் போத்தல்களாலும் தாக்கத்தொடங்கினர். இவையனைத்தையும் அரங்கேற்றிய கும்பல் அங்கிருந்து வேகமாக வெளியேறியது. அவர்கள் வெளியேறும் வரையும் பொலிஸாரும் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. சம்பவம் நடந்தபோது பொலிஸ் உயர் அதிகாரிகள் பலர் அந்த இடத்தில் இருந்தனர். ஆனால் அவர்களும் ஆர்ப்பாட்டத்தை வேடிக்கை பார்க்க வந்தவர்கள் போல வெறுமனே எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காமல் பார்த்துக்கொண்டு நின்றனர்.

பொலிஸார் ஆர்ப்பாட்டகாரர்களை கைது செய்யத் தொடங்கியபோது தாக்குதலில் ஈடுபட்ட பெரும்பாலான சூத்திரதாரிகள் அவ்விடத்திலிருந்து தப்பிச்சென்றுவிட்டனர். பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவர்களில் மதுபோதையில் ஓடமுடியாமல் இருந்த தாக்குதலாளிகளும், வேடிக்கை பார்க்க வந்தவர்களும் உணர்வுபூர்வமாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களும் அடங்குகின்றனர். யாழ்.பொது நூலகத்துக்கு கற்றல் நடவடிக்கைகளுக்கு வந்திருந்த மாணவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கின்றது. நீதிமன்றம் மீதான தாக்குதல் நடந்துமுடிந்து இருவார காலம் நிறைவடைந்த சந்தர்ப்பத்தில் இதுவரை 150 பேர் வரையானோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கெதிராக இலங்கை தண்டனைச் சட்டக்கோவையின் கொலை எத்தனிப்பு, சட்ட விரோதமாகக் கூட்டம் கூடியமை, சிறு காயங்களை ஏற்படுத்தியமை, கடுங்காயங்களை ஏற்படுத்தியமை, அத்துமீறி உட்பிரவேசித்தமை, போன்ற சட்டப்பிரிவுகளின் கீழும், பொதுச்சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தியமை என்ற சட்டப்பிரிவின் கீழும் பொலிஸாரால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டடத் தொகுதியைத் தாக்கியமை, கடமையில் இருந்த உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் உட்பட 5 பொலிஸாருக்கு காயம் விளைவித்தமை மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, யாழ்.நகரப் பகுதியில் இருந்த பொலிஸ்காவலரணை உடைத்தமை, சமிக்ஞை விளக்குகளை தாக்கி சேதப்படுத்தியமை, இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தை, தாக்கியமை, யாழ். சிறைச்சாலையை தாக்கியமை, மற்றும் கடமைக்கு இடையூறு விளைவித்தமை போன்ற குற்றசாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

தாக்குதலின் எதிரொலியாக பல உயர் பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் செய்யவென கொழும்பு குற்றதடுப்புபிரிவின் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் உட்பட்ட குழுவினருடன் பல பொலிஸ் குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து விசாரணைகளில் இறங்கியுள்ளனர்.

அத்துடன் கண்டியிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள தண்ணீர் பீரங்கி வாகனத்துடன் கலகமடக்கும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினருடன் நீதிமன்றத்தை சுற்றிய பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர். இது ஒருவித பதற்றமான சூழலை தோற்றுவிக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் முன்னதாகவே பொலிஸாரால் எடுக்கப்பட்டிருந்ததால் இந்தச் சம்பவத்தை நடக்கவிடாமல் தவிர்த் திருக்கலாம்.

எது எவ்வாறாயினும் பொலிஸாரால் இதுவரை இந்திய குடிமகன் ஒருவர், இரண்டு சிறுவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமுர்த்தி உத்தியோகத்தரென 150 பேர் வரையானோர் கைதுசெய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இதுவரையும் இரண்டு சிறுவர்கள் மாத்திரம் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட நாள் தொடக்கம் பலர் இதுவரை பெற்றோர்களாலும் உறவினர்களாலும் சந்திக்கப் படமுடியாதவர்களாகவுள்ளனர். அநுராதபுரத்திலுள்ள அவர்களை சென்று பார்ப்பதில் பெற்றோர்களும் உறவினர்களும் பலவித சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் தாங்கள் பொலிஸாராலும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களினாலும் கடுமையாக தாக்கப்பட்டதாகவும் தங்களுக்கு மருத்துவ சிகிச்சைகளை பெற்று தருமாறும் நீதிமன்றத்தில் கோரினர். சில சந்தேகநபர்கள் அழுதழுதவாறு மேற்கண்டவாறு கோரினர். ஒரு சில சந்தேகநபர்கள் காயங்களுக்கு கட்டுக்கள் இடப்பட்ட நிலையில் மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கெதிராக பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கு சாதாரண நிலமையின் கீழ் பிணை வழங்கக்கூடிய அதிகாரம் நீதிவான் நீதிமன்றத்திற்கு இல்லை. விதிவிலக்கான சூழ்நிலைகளிலேயே விசேட காரணங்களின் அடிப்படையில் கீழ் பிணை வழங்கக்கூடிய அதிகாரம் நீதிவான் நீதிமன்றத்திற்கு காணப்படுகின்றது. இல்லாவிட்டால் மேல் நீதிமன்றத்திலேயே கைதுசெய்யப்பட்டவர்கள் பிணை விண்ணப்பம் கோர வேண்டும். பொலிஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ள அப்பாவிகள் இனம் காணப்பட்டால் அவர்களை விடுவிப்பதற்கு நீதிவான் நீதிமன்றத்திற்கு அதிகாரமுள்ளது. இதுவரையும் இரண்டு சிறுவர்கள் மாத்திரம் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். பொலிஸாரை விசாரணைகளை துரிதப்படுத்தி சம்பவத்துடன் தொடர்பில்லாதவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்களுடைய வாக்குமூலத்தை பதிவுசெய்யும்போது ஒரு சிலரே தாம் பாடசாலை மாணவர்களென வாக்குமூலம் வழங்கிய தாகவும் அவர்களை மன்று பொருத்தமான பிணையில் விடுவிக்கலாம் என்றும், எந்த வொரு சந்தேகநபரும் குற்றம் நடைபெற்ற இடத்தில் தாம் இருந்திருக்கவில்லை என் பதை நிரூபிப்பதற்கு ஆதாரம் எதையும் சமர்ப்பிக்கவில்லை எனவும், நீதிமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நீதிபரிபால னத்துக்கு விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தல் என்பதுடன் நாட்டின் அமைதி, சமாதானத்துக்கு விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தல் எனவும் எனவே தொடர்ந்து விசாரணைகளை நடத்துவதால் சந்தேகநபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுமாறும் பொலிஸார் கோரியிருந்தனா.

தற்போதுள்ள கேள்வி என்னவென்றால் பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தி உண்மையான குற்றவாளிகளை அடையாளம் கண்டு, அவர்களை கைதுசெய்து குற்றமற்றவர்களை விடுவிக்கப் போகிறார்களா? அல்லது கைது செய்யப்பட்டவர்களுடன் காலத்தை ஓட்டி வழக்கை இழுத்தடிக் கப் போகிறார்களா? என்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | | 7 | | | 6 |
| | | 2 | | 6 | | 5 | | |
| | | 6 | 3 | 4 | | | | |
| 5 | | 7 | 4 | | | 3 | | 1 |
| 3 | | | | | | | | 7 |
| 9 | | 1 | | | 3 | 2 | | 8 |
| | | | | 9 | 5 | 7 | | |
| | | 9 | | 3 | | 4 | | |
| 8 | | | 6 | | 4 | | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 9 | 1 | 2 | 8 | 5 | 3 | 4 |
| 2 | 8 | 5 | 3 | 6 | 4 | 1 | 9 | 7 |
| 1 | 4 | 3 | 5 | 9 | 7 | 6 | 2 | 8 |
| 3 | 2 | 4 | 6 | 7 | 9 | 8 | 5 | 1 |
| 9 | 5 | 7 | 8 | 1 | 2 | 4 | 6 | 3 |
| 8 | 6 | 1 | 4 | 5 | 3 | 2 | 7 | 9 |
| 7 | 3 | 6 | 2 | 8 | 1 | 9 | 4 | 5 |
| 5 | 9 | 8 | 7 | 4 | 6 | 3 | 1 | 2 |
| 4 | 1 | 2 | 9 | 3 | 5 | 7 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களை யும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | – | 50 | 60 | 60–80 | 100 | 80 | 30 |
| கத்தரி | 120 | 140 | 160 | 160 | 120–140 | 120 | 120 | 60 |
| கரட் | 200 | 200 | 200 | 280 | 160–200 | 290 | 250 | 220 |
| மரவள்ளி | 60 | 50 | 50 | 50 | 40–50 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 140 | 120 | 200 | 80 | 120–180 | 80 | 140 | 80–100 |
| பாகல் | 200 | 180 | 200 | 120 | 120–140 | 120 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 140 | – | 80–100 | – | 180 | 65 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 120 | 100 | 120–130 | 120 | 120 | 100–110 |
| சி.வெங்காயம் | 100 | 120–160 | 130 | 140 | 100–130 | 180 | 140 | 100 |
| பூசணி | 40 | 30 | 40 | 20 | 30–40 | 40 | 80 | 20 |
| தக்காளி | 70 | 80 | 80 | 60 | 70–80 | 120 | 80 | 60–70 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 40 | 40–60 | 40 | 60 | 25 |
| கீரை | 40 | 30 | 50 | 15 | 30–40 | 30 | 35–40 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 30–40 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 50 | 60 | 60 | 60 | 50–60 | 120 | 130 | 50 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 80–100 | 60 | 100 | 70 |
| கோவா | 200 | 100 | 100 | 120 | 100–120 | 120 | 100 | 70 |
| வெண்டி | 140 | 120 | 160 | 100 | 100–140 | 80 | 100 | 60 |
| போஞ்சி | 160 | 200 | 160 | 160 | 160–200 | – | 220 | 180 |
| லீக்ஸ் | 160 | 200 | 200 | 160 | 140–220 | 180 | 240 | 170 |
| தேங்காய் | 50 | 30–40 | 60 | 40 –50 | 40–60 | 40 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 100 | 120 | 120 |
| தேசிக்காய் | 140 | 120 | 200 | 140 | 120–160 | 120 | 120 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30–40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 80 | 160 | 80 | 160 | 130–140 | 200 | 200 | 100–120 |
| இராசவள்ளி | 120 | – | 140 | 100 | 100–120 | 160 | 200 | – |
| முருங்கக்காய் | 400 | 300 | 400 | 200 | 200–300 | 240 | 250 | 270 |

## நாளை

**வைகாசி-23**
**சனிக்கிழமை**
**06.06.2015**

திதி: சதுர்த்தி மா. 05.41 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
மு.இ.06.52 வரை
சுபநேரம்: 02.52-04.22 வரை
இராகுகாலம்: 08.52-10.22 வரை
சங்கடஹர சதுர்த்தி

# காதுகளை பராமரிப்பதில் அலட்சியம் வேண்டாம்

(நேற்றைய தொடர்ச்சி)

எந்தச் சிகிச்சைக்கும் கட்டுப்படாமல் தொடர்ந்து குழந்தை அழுதுகொண்டே இருந்தால் குழந்தையின் காதில் பிரச்சினை இருக்கலாம். பள்ளியில் கவனக்குறைவாகவும் மந்தமாகவும் குழந்தைகள் இருந்தால் காதில் நீர் கோர்த்து இருக்கலாம். மூன்று மாதத்தில் இருந்து ஒரு வயது வரை உள்ள குழந்தைகள் சத்தம் கேட்டால் திரும்பிப் பார்க்காமலோ பேச ஆரம்பிப்பதில் தாமதம் காட்டினாலோ உடனே காது மூக்கு தொண்டை மருத்துவரிடம் ஆலோசனை பெற வேண்டும். காது கேட்கும் திறன் குறைந்து போனால் ஆரம்பத்திலேயே ஒலிக் கருவியை பொருத்துவதன் மூலம் இயல்பான பேசும் திறன் பழுதாகாமல் பார்த்துக்கொள்ளலாம். காதுக்குள் பூச்சி ஏதேனும் புகுந்து விட்டால் உப்பு நீரைக் காதில் விடுவதுதான் உடனடி முதல் உதவியாகும். தொடர்ந்து ஓசை எழும்பும் தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள் காதுக்கு 'மாஸ்க்' அணிவது நல்லது. குறிப்பிட்ட கால இடைவெளியில் தங்களது காது கேட்கும் திறனை உரிய மருத்துவரிடம் சென்று பரிசோதிப்பது அவசியம். தடிமன் ஏற்பட்டு விட்டால் மூக்கைச் சிந்தும்போது மிகப் பலமாக சிந்துவதுகூடாது. இவ்வாறு செய்தால் காதுக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும்.

நெருங்கிய இரத்த உறவுகளுக்குள் திருமணம் செய்து கொண்ட தம்பதியர்களுக்கு பிறக்கும் குழந்தைகள், பரம்பரையாக காதுகேளாதோர் வழிவந்த குழந்தைகள், சிக்கலான பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகள், பிறந்த உடனேயே மஞ்சள் காமாலையாலும் மூளைக் காய்ச்சலாலும் தாக்கப்படும் குழந்தைகள் காது கேளாமையால் பாதிக்கப் படும் வாய்ப்பு அதிகம்.

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

## நல்லகாலம் வருகிறது

சூழ்நிலைக்குத் தக்கபடி வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றிக்கான இரகசியம். ஒரு செயலின் பயனில் கருத்துச் செலுத்தும் அதே அளவுக்கு அதைச் செய்யும் முறையிலும் கவனம் செலுத்துவது அவசியம். தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விட போராடி மாள்வதே மேலானது. நீ ஒருபோதும் அழக்கூடாது. ஒரு இலட்சியத்தை எடுத்துக் கொண்டு அதற்காக உன்னை அர்ப்பணித்துக் கொள். பொறுமையுடன் விடாமுயற்சி செய்தால் உனக்கு ஆதரவான நல்ல காலம் நிச்சயம் வரும்.சுயநலத்துடன் வாழாமல், நான் அல்லேன் நீயே என்னும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். எல்லா நன்மைகளுக்கும், ஒழுக்கங்களுக்கும் இதுவே அடிப்படைப் பண்பு. உன்னால் எல்லாருக்கும் சேவை செய்ய முடியும். அதுவும் கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கிறது.

## மனிதருக்கு மனத்துணிவு அவசியம்

அச்சமும், அகங்காரமும் தான் மக்களை நல்ல வழியில் செல்ல விடாமல் தடுக்கின்றன. மனத்திலே அச்சம் கொண்டவர்களால் எக்காரியத்தையும் துணிந்து செய்ய முடியாது. தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை என்பது கம்பன் வாக்கு. நாம் செய்கின்ற காரியம் தூய்மையானது என உணர்ந்து கொண்டால் சோதனைகள் எது வந்தாலும் அவற்றைத் தாண்டிச் செய்து முடிக்கும் தன்மை நம்மிடம் ஏற்படும். அகங்காரம் படைத்தவர்கள் பிறர் சொல்வதைப் பொருட்படுத்தமாட்டார்கள். நினைத்ததை முடிப்பவர்கள் நான் என்ற ஆணவத் திமிரோடு செயற்படுவார்கள். அச்சமும் அகங்காரமும் நீங்கிய இடத்திலேயே ஆண்டவன் வீற்றிருப்பான்.

**ஞானச்சுடர்**



**"அச்சம் அகங்காரம்**
**அகத்து அடக்கினால்**
**பின்னை நிச்சயம் ஆம்**
**ஈசன் நிலை"**

– ஔவையாரின் ஞானக்குறள்.

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 800 | 700 | 550 |
| நண்டு | 300 | 450 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 400 | 500 | 600 | 450 |
| பாரை | 600 | 500 | 500 | 600 | 500 | 450 |
| சுறா | 650 | 500 | – | 700 | – | – |
| சீலா | 350 | 400 | 400 | 450 | 300 | – |
| விளை | 650 | 400 | 400 | 400 | 500 | 350 |
| முரல் | 350 | 350 | 350 | 350 | 300 | – |
| கும்பிளா | 450 | 350 | 400 | 400 | 500 | – |
| கிழாக்கன் | 650 | 700 | 300 | 400 | – | – |
| ஓரா | 450 | 400 | – | 350 | 400 | 300 |
| திரளி | 250 | 300 | 200 | 250 | 200 | 250 |
| நகரை | 200 | 300 | – | 300 | 250 | 300 |
| சூடை | 150 | 200 | 150 | 200 | 100 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 200 | 150 | 100 | 250 |
| திருக்கை | 150 | 350 | 300 | 350 | 100 | 150 |
| பாலை | 350 | 300 | – | 400 | 300 | 350 |
| வாழை | 100 | 200 | – | 250 | – | – |
| கொய் | 100 | 150 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 200 | 250 | – | 300 | 150 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் மாத இராசி பலன்கள்



## சிங்கம்

இந்த மாதம் 10 ஆம் இடத்தில் இணைந்திருக்கும் சூரியன், புதன் ஆகியோர் முன்னேற்றத்தை தருவார்கள். சுக்கிரன் மிதுனத்தில் இருந்து நற்பலன் அளிப்பார். 12 இல் குரு, 10 இல் செவ்வாய், 8 இல் கேது, 3இல் ராகு ஆகியோரால் ஓரளவே நன்மை உண்டாகும். சனிபகவான் சாதகமற்ற இடத்தில் இருந்தாலும் ஜூன் 12 ஆம் திகதி முதல் வக்கிரம் அடைந்து துலாம் ராசிக்கு வருவதால் பொருளாதார வளத்தையும் குடும்பத்தில் மகிழ்ச்சியையும் தருவார். சூரியனால் எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். சமூக மதிப்பு உயரும். செவ்வாய் 10 ஆம் இடத்தில் இருப்பதால் வீண் விரயம் ஆகலாம். ஆனாலும் அதைச் சரிக் கட்டும் வகையில் வருமானமும் இருக்கும். குடும்பத்தில் வசதி வாய்ப்புக் கள் பெருகும். புதன் சாதகமாக இருப்பதால் பெண் களால் ஆதாயம் கிடைக்கும். பொன், பொருள் சேரும். உடல் நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை யால் உற்சாகம் உண்டாகும்.

தொழில், வியாபாரம்: வருமானம் சிறப்பாக அமையும். தொழிலாளர் ஆதரவு பெருகும். அரசு வகையில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். பணியாளர்கள் பணி யிடத்தில் நற்பெயர் ஈட்டுவர். எதிர்பார்த்த கோரிக்கை எளிதில் நிறைவேறும். சக ஊழியர்கள் மிகவும் ஆதர வுடன் இருப்பர்.

**கலைஞர்கள்:** புதிய ஒப்பந்தம் பெற்று சிறப்பு நிலையை அடைவர்.

**அரசியல்வாதிகளுக்கு:** முயற்சிக்கு தக்க பலன் கிடைக்கும். தொண்டர் மத்தியில் செல்வாக்குக் கூடும்.

**மாணவர்களுக்கு:** மேல் படிப்பில் விரும் பிய பாடம் கற்க வாய்ப்புக் கிடைக்கும். படிப்பில் அக்கறை தேவை.

**விவசாயிகளுக்கு:** விளைச்சல் சிறப்பாக இருக்கும். சொத்து வாங்க யோகமுண்டாகும். வழக்கு விவகாரம் சீரான நிலையில் இருக்கும்.

**பெண்களுக்கு:** குடும்பம் சிறந்த நிலையை அடையும். தாய் வீட்டுச் சீதனப் பொருள் வரலாம்.

**நல்ல நாள்:** ஜூன் 8, 9, 15

**கவன நாள்:** ஜூன் 10, 11 .

**அதிர்ஷ்ட எண்:** 2,3

**நிறம்:** செந்தூரம், பச்சை

**பரிகாரம்:** தினமும் முருகன் கோவிலுக்குச் செல்லுங்கள். துர்க்கை வழிபாடு நன்மையளிக்கும். வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தியை அர்ச்சனை செய்து வழிபடுங்கள்.



# பெண்களின் ஏற்றங்களும் எதிர்நோக்கும் மாற்றங்களும்

(நேற்றைய தொடர்ச்சி)

மருத்துவ உண்மைகள் அனைத்தையும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வீட்டின் வர வேற்பறைக்கே கொண்டு வந்து வழங்கி விட்டுப் போகின்ற இந்த நவீன யுகத்தில் மெத்தப் படித்ததாய் மார்தட்டிக்கொள்ளும் இன் றைய சமூகத்தினர் குழந்தைப்பேறு வாய்க் காமல் போவதற்கும், பெண் குழந் தைகள் தொடர்ந்து பிறப்பதற்கும், பெண்ணை மட் டுமே குறைசொல்லும் மடமையை, சிறு பிள்ளைத்தனத்தை எங்கு கற்றார்கள்? ஆடவர்க்கென்று ஒரு (பொன்) தராசும் பெண்களுக்கென்று வேறொரு (ம்ண்) தராசும் வாங்கி எடைபோடும் அற்புதப் பயிற் சியை எங்கு பெற்றார்கள்? இவையல் லாமல், குடியைக் கெடுக்கும் குடிக்கு அடி மையான கணவன்மார்களை மணந்து கொண்ட பெண்களின் துயர நிலையோ வார்த்தைகளின் விவரணைகளுக்கு அப் பாற்பட்டது.

அடுத்து, வரதட்சணை என்ற பெயரில் நடத் தப்படும் பணக்கொள்ளை இன்னமும் ஒழிந்த பாடில்லை; சொல்லப்போனால் அதிகரித் திருக்கின்றது என்பதே இன்றைய உண்மை நிலை. இதனால் வசதியில்லாத பெற்றோர் பலர் தங்கள் பெண்களின் எதிர்காலத்தை எண்ணி எண்ணிக் கலங்குகின்றனர். பெண் ணியம் என்ற கொள்கை இப்பொழுது பல ராலும் பரவலாகப் பேசவும் விவாதிக்கவும் படுகின்றது. ஆண்களுக்கு இணையாகப் பெண்களும் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளைப் பெறுவதும், வேலை வாய்ப் புக்களிலும், ஊதிய அளவுகளிலும் சமநிலை காண்பதும் அதன் அடிப்படைக் கோட்பாடு கள் ஆகும். அத்தோடு நில்லாமல், பெண் களின் சிந்தனைச் சுதந்திரத்தைத் தடை செய்து அவர்களின் விருப்பத்திற்கெதிரான செயல்களை அவர்கள்மீது திணிப் பதையும், பெண்களுக்கெதிரான வன்கொடுமைகளையும் பெண் ணியம் கடுமையாகக் கண்டிக் கிறது. இது வரவேற்கத்தக்க ஒன் றாகும்.

இத்தகைய பெண்ணியச் சிந்தனை கள் இன்று எந்த அளவுக்கு செயல் வடிவம் கண்டிருக்கின்றன என் பதை நடுநிலையான பார்வை யோடு சிந்தித்துப் பார்த்தால் பெண் களின் நிலை இன்றைய சமூகத்தில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறி யுள்ளது என்றபோதிலும் இவ் வளர்ச்சி போதுமானது என்று சொல்வதற்கில்லை. அரசியலிலும், பொதுப்பணிகளிலும் இப்போதும் பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவே. இந்நிலை மாறவேண் டும். அரசியலிலும் பொதுப் பணி களிலும் பெண்கள் அதிக எண்ணிக் கையில் ஆர்வத்துடன் ஈடுபடவேண் டும். பெண்கள் தங்கள் உரிமை களைத் தவறாது பெறுவதற்கு அவர்கள் தயக்கமின்றிப் பொதுப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்று தந்தை பெரியார் கூறியதை நாம் இவ்வேளையில் நினைவுகூர்வது நல்லது.

மேடைகளில் மட்டும் பெண்ணுரி மைக்காகக் குரல் கொடுப்பதையும், வீட்டுக்குள்ளேயே பாதுகாப்பாக அமர்ந்துகொண்டு பெண்களின் நலன் குறித்து விவாதிப்பதையும் விடுத்துப் பெண்கள் ஒன்றுகூடி வீதி களில் இறங்கிப் போராட வேண் டும். கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்றோர் பழமொழி உண்டு. நாட் டின் எந்த மூலையில் எந்தப் பெண் ணுக்குப் பிரச்சனை என்றாலும் எல்லாப் பெண்களும், பெண் ணுரிமை அமைப்புக்களும் ஒன்று பட்டுத் தட்டிக்கேட்க வேண் டும், எதிர்ப்புக்குரல் எழுப்ப வேண் டும். கிராமங்களுக்கும், நாட்டின் மூலை முடுக்குகளுக்கும் சென்று பெண் ணுரிமை குறித்தும், அவை மறுக் கப்படும்போது மேற்கொள்ள வேண்டிய சட்ட வழிமுறைகள் குறித்தும் மகளிர் அமைப்புக்கள் கிராமப்புறப் பெண்களுக்குக் கற்பிக்க வேண் டும்.

அணு மிகச்சிறி யதுதான்; ஆனால் அதுபிளக்கப்படும் போது வெளிப் படும் ஆற்றல் அளப்பரியது! அது போல் பல வீனமானவர்கள் என்ற எண்ணத் தில் அநீதிகளுக்கு உட்படுத்தப்படும், அவலங்களுக்கு ஆட்படுத்தப்படும் பெண்ணின மும் ஒன்றுதிரண்டால் ஆகாவென்று எழுந்தது பார் யுகப்புரட்சி என்று பாரதி எக்காளமிட்டது போல் மீண்டும் ஓர் யுகப்புரட்சியை நாடு சந்திக்கும் நிலை வரலாம். எனவே சமுதாயம் பெண்களைச் சுயமா கச் சிந்தித்துச் செயற்படவும், சுயமரியாதையோடு வாழவும் அனுமதிக்க வேண்டும். அது போல், பெண்களும் தம் எதிர் காலத்தை வளமானதாக மாற்று வதற்கான முயற்சிகளில் தாமே ஈடுபடுவதும், அதற்கு ஏற்படும் தடைகளைத் தகர்த்துத் துணிச் சலோடு முன்னேறுவதும் அவர் களுக்கு ஏற்றத்தையும் எதிர்நோக் கும் மாற்றத்தையும் உறுதியாகத் தரும் என்பதில் ஐயமில்லை.


“ மேடைகளில் மட்டும் பெண் ணுரிமைக்காகக் குரல் கொடுப் பதையும், வீட்டுக்குள்ளேயே பாதுகாப்பாக அமர்ந்து கொண்டு பெண்களின் நலன் குறித்து விவாதிப்பதையும் விடுத்துப் பெண்கள் ஒன்று கூடி வீதிகளில் இறங்கிப் போராட வேண்டும். கலகம் பிறந்தால் நியாயம் பிறக் கும் என்றோர் பழமொழி உண்டு. நாட்டின் எந்த மூலையில் எந்தப் பெண்ணுக்குப் பிரச்சினை என்றாலும் எல்லாப் பெண்களும், பெண்ணுரிமை அமைப்புக்களும் ஒன்று பட்டுத் தட்டிக் கேட்க வேண்டும், எதிர்ப்புக் குரல் எழுப்ப வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டலாம் வாங்க



# தூரத்துப் பச்சை!



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று மான் கூட்டத்தை விரட்டிக் கொண்டு ஓடிவர எல்லா மான்களும் வேகமாக ஓடின. அந்தக் கூட்டத்தில் இருந்த குட்டிமான் ஒன்றும் வேகமாக ஓடும் தாயுடன் மிகுந்த சிரமத்துடன் ஓடியது. சிங்கம் ஒரு பெரிய மானை அடித்து வீழ்த்திவிட மற்ற மான்கள் தப்பித்து ஓடி பாதுகாப்பான இடத்தை அடைந்தன. குட்டி மானுக்கு மிகவும் களைப்பாகவும் வருத்தமாகவும் இருந்தது. அது தன் தாயிடம் இது என்ன வாழ்க்கை? ..., தினம் தினம் பயந்து ஓடிக்கொண்டு? எனக்கு மிகவும் ஏமாற்றமாகவும் வேதனையாகவும் அவமானமாகவும் இருக்கிறது. நான் மட்டும் சிங்கமாக இருந்தால் இப்படி பயந்து ஓடும் நிலை ஏற்பட்டிருக்காதே என்று புலம்பியது. தாய் மான் ஆறுதல் கூறி யும் குட்டி அமைதியடையவில்லை.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த வயதான மான் ஒன்று குட்டியிடம், உன் நிலை எவ்வளவோ பரவாயில்லை. உனக்கு ஓட முடிகிறது! சிங்கம் துரத்திக் கொண்டு வந்தால்தான் பிடிக்கமுடியும். பல சமயங்களில் நம்மை பிடிக்க முடியாமல் ஏமாற்றமடைகிறது. ஆனால் நீ ருசித்து உண்ணும் செடிகளின் நிலையை நினைத்துப் பார்! அவற்றால் ஓடக்கூட முடியாது. நாம் கூட்டமாக சென்று கடித்துக் குதறும் பொழுது அப்படியே நிற்கத்தான் வேண்டும். அந்தச் செடிகளுக்கும் உயிர் உண்டுதான். அவற்றின் நிலையை விட எமது நிலை மேலானதே. சிங்கத்தையும் வேட்டையாடி மனிதர்கள் கொன்று விடுவது உண்டு. அவற்றுக்குள் சண்டை வந்து இறந்து விடுவதும் உண்டு. வயதான மற்றும் காயம் பட்ட சிங்கங்களால் ஓடக்கூட முடி யாது!....... ..... இன்பமும் துன்பமும் எப்பொழுதும் கலந்துதான் இருக்கும்! மானாகப் பிறந்தால் மானாகவும் சிங்கமாகப்பிறந்தால் சிங்கமாகவும்வாழ்வதுதான் நல்லது என்றுஅறிவுரை கூறியது. அந்த மான்குட்டிதான் சிங்கமாகப் பிறக்கவில்லையே என்று நினைத்து வருந்தவே இல்லை. எல்லாம் தூரத்துப் பச்சை என்று புரிந்துகொண்டது.

# பொது அறிவுத் தகவல்கள்

- ஆண்டுக்கு 365 நாள்கள் என்ற கலண்டர் முறையை முதலில் பயன்படுத்தியவர்கள்? – எகிப்தியர்.
- புதினாவின் தமிழ்ப் பெயர் – ஈஎச்சக்கீரை
- முத்துக்களின் தீவு என்றழைக்கப்படும் நகரம் – பக்ரைன்
- ஒரே ஒரு ரயில் நிலையம் கொண்ட இந்திய மாநிலம் – நாகலாந்து.
- பயங்கரவாத எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படும் நாள் – மே 21
- அட்லசை கண்டுபிடித்தவர் லப்ரேரி அட்லஸ்.
- சிங்கப்பூரில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் கடலுக்குள் கண்ணாடி மாளிகை அமைக்கப்பட்டு உள்ளது.
- கங்காருதான் அதிக தூரம் தாண்டும் மிருகமாகும். அது ஒரே தாவுதலில் 13 மீற்றர் நீளம் தாண்டிவிடும்.
- தேனீக்கு இரண்டு இரைப்பைகள் உள்ளன. ஒன்று சேமிப்பு அறையாகவும், மற்றொற்று ஜீரண உறுப்பாகவும் பயன்படுகிறது.
- உலகிலேயே மிக நீளமான தாழ்வாரம் உள்ள இடம் இராமேஸ்வரம். 4 ஆயிரம் அடி நீளமுள்ளது.
- 1941ஆம் ஆண்டு இங்கிலாந்தில் முதல்முதலாக ஜெட் விமானம் பறக்கவிடப்பட்டது.
- மண்புழுக்களில் ஆண், பெண் என்ற தனித்தன்மை கிடையாது.
- ஈபிள் டவரின் உயரம் 300 அடி.
- ஆமைக்குப் பற்கள் கிடையாது.

# பசுவும் கன்றும்

பாலைக் கொடுத்த மயிலைப்பசு
படுகையில் மேயுது காலையிலே!
பாலைக் குடித்த கன்றுக்குட்டி
படுத்துத் தூங்குது கொட்டிலிலே!
மேய்ந்து முடித்ததும் மாலையிலே
மெல்ல நிமிருது மயிலைப் பசு!
தூங்கி விழித்ததும் எழுந்து நின்று
சோம்பல் முறிக்குது கன்றுக்குட்டி!
கன்றை நினைத்ததும் தாயின் மடி
கனக்குது பாலைச் சுரந்தபடி!
அம்....மா! என்றே கன்றுக் குட்டி
அழைக்குது வாசலைப் பார்த்தபடி!
ஓடி வந்துமே மயிலைப் பசு
ஊட்டக் கொடுக்குது பாலை பாசத்தோடு!
ஆடிக் குடிக்குது முட்டி முட்டி!
ஆனந்தமாகவே கன்றுக்குட்டி!



# வெற்றியில் ஏமாந்து விடாதீர்கள்!



நற்றையத் தொடர்ச்சி)

கவரைபடத்தில்உகாண்டாஎன்றஆபிரிக்க ட்டை சிரமத்துக்கு இடையே தான் கண்டு க்க முடியும். அத்தனை சிறிய நாட்டில் வாதிகாரியாக இருந்த இடி அமீன் சென்ற ற்றாண்டில் தன்னை கிட்டத்தட்ட கடவு ாகவே நினைத்து நடந்து கொண்ட தத்தை வரலாற்றின் பார்வை யாளர்கள் றந்திருக்க முடியாது. இன்றைய கால ட்டத்திலும் அரசியலைக் கூர்ந்து பார்ப் வர்களுக்கு இதற்கு எத்தனையோ சான்று ளைக் காணமுடியும். சில இமாலய வெற்றி பற்றவர்கள் தங்களை நிரந்தரத் தலைவர்களாக நினைத்துக் கொண்டு செயற்பட்டு அடுத்த தேர்தலில் காணாமல் போவது சர்வ சாதாரணமாக நிகழ்கிறது அல்லவா?

இரண்டாவதாக, வெற்றி, அலட்சியத்தையும் உண்டு பண்ணக் கூடியது. அதுவும் தொடர்ந்து சில வெற்றிகள் கிடைத்துவிட்டால் தங்களை ஒரு அபூர்வ மனிதராக ஒருவர் நினைத்துக் கொள்ள வாய்ப்பு அதிகம். இனி எனக்குத் தோல்வியே கிடைக்க முடியாது என்று ஒருவன் நினைக்க ஆரம்பிக்கும் போது அவனுடைய முயற்சிகள் தரத்திலும் அளவிலும் குறைய ஆரம்பிக்கின்றன. சிறு வயதில் நாம் படித்த முயல், ஆமைக் கதை இந்த உண்மையை மிக அழகாகச் சொல்வது நினைவிருக்கலாம். முயலை எக்காலத்திலும் ஆமை வெல்ல முடியாது என்று நாம் நினைத்தாலும் முயல் தூங்கி விடுமானால், ஆமை விடாமல் முயற்சி செய்து வருமானால் ஆமை வெற்றி பெறுவது நடக்கக் கூடியதே. பள்ளிக் கூடத்திலும், கல்லூரிகளிலும் மிக நல்ல மதிப்பெண்கள் வாங்கி பிரகாசித்து நிஜ வாழ்க்கையில் கோட்டை விட்ட எத்தனையோ பேரை நான் அறிவேன். அதே போல படிக்கையில் சாதாரணமான மதிப்பெண்களே பெற்று வந்த எத்தனையோ பேர் தங்கள் திறமைக் குறைவை உணர்ந்து உழைப்பால் அதை ஈடுகட்டி அதன் மூலம் வாழ்க்கையில் வெற்றி பெறுவதையும் நான் பார்த்திருக்கிறேன். முன்னவர்களின் தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தபோது அவர்களது தோல்விக்குக் காரணம் வெற்றிகளால் அவர்கள் அடைந்திருந்த அலட்சியமே என்ற பதில் தான் கிடைத்தது. இதை விடப் பெரிய விடயங்களில் எல்லாம் வெற்றி பெற்றிருக்கிறேன், இது என் திறமைக்கு முன் எம்மாத்திரம் என்ற எண்ணத்தோடு இறங்கி சிறிய விடயங்களில் தோற்று மூக்குடைந்த மேதாவிகளை நாம் அனைவரும் பார்த்திருக்க முடியும். மூன்றாவதாக, வெற்றி பெற்றவர்களுக்கு யாருடைய அறிவுரையும் தேவை இல்லை என்ற எண்ணம் மேலோங்கி நிற்க வாய்ப்பு உண்டு.

ஒருவன் எத்தனைதான் புத்திசாலியானாலும் அவன் அறிந்திராதவையும் எத்தனையோ இருக்கக் கூடும். அந்த அறிந்திராத விடயங்கள் அவனுடைய எதிர்கால வெற்றிக்கு முக்கியமானவையாக இருக்கக் கூடும். ஆனால் எல்லாம் எனக்குத்தெரியும், தெரியாமலா இத்தனை வெற்றிகள் கண்டிருக்கிறேன் என்று நினைக்கிற சில வெற்றியாளர்கள் அறிவுரை கூற வருபவர்களை ஏளனமாகப் பார்க்க முற்படுகிறார்கள். அவர்களுக்கு அறிவுரை வேப்பம்காயாக கசக்கிறது. எனவே அவர்கள் தங்களைச் சுற்றித் துதிபாடிகள் இருப்பதையே அதிகம் விரும்புகிறார்கள். உள்ளதை உள்ளபடி சொல்பவர்களை அவர்கள் ஒதுக்க ஆரம்பிக்கிறார்கள். யாரானாலும் சரி மற்றவர்கள் கூறுவதில் உண்மை இருக்கிறதா என்று கூட சிந்திக்க மறுக்கும் போது, புதியனவற்றை அறிந்து கொள்ளத் தவறும் போது தோற்கவே ஆரம்பிக்கிறார்கள். எனவே தோல்வி அடையும் சமயத்தை விட அதிகமாய் வெற்றி அடையும் சமயத்தில் எச்சரிக்கையாக இருங்கள். தோல்வி அடையும் போது இருப்பதை விட வெற்றி அடையும் போது அதிக அடக்கமாய் இருங்கள். கர்வமும், அலட்சியமும், அடுத்தவர்களைத் துச்சமாய் நினைக்கும் தன்மையும் உங்களை அண்ட விடாதீர்கள். அப்படிக் கவனமாய் இருந்தால் மட்டுமே வெற்றியை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள முடியும். வாழ்க்கையில் தொடர்ந்து முன்னேறுவதும் அப்படி இருக்கும் போது மட்டுமே சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலக சுற்றுச்சூழல் தினம் - யூன் 5

ஏழு பில்லியன் கனவுகள்...
ஒரு கிரகம்...
கவனத்தோடு நுகர்வோம்!

**உலக சனத்தொகை 7 பில்லியன்.**

**இயற்கை வளங்களை நுகரும் கதி தற்போது உள்ளதைப்போன்றே தொடருமாயின், 2050ஆம் ஆண்டில்**

**உலக சனத்தொகை 9 பில்லியனை எட்டும்போது**

**வளங்களை வழங்க 3 பூமிகள் தேவை.**

## இருப்பதோ ஒரேயொரு பூமி!




## இயற்கை வளங்களை
## அளவோடு நுகர்ந்து வளமோடு வாழ்வோம்!

விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி,
கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல்,
நீர் வழங்கல், நீர்ப்பாசனம்
மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தது குற்றப் புலனாய்வுத் திணைக்களம்

கொழும்பு, ஜூன் 5
கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமற்போன சம்பவங்களின் பின்னணியில் இலங்கைக் கடற்படை அதிகாரிகள் சிலருக்குத் தொடர்பு உள்ளமையைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் உறுதி செய்துள்ளது.
2008 ஆம் ஆண்டு, ஐந்து தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கடத்தப்பட்டு காணாமற்போன சம்பவத்துடன் கடற்படை அதிகாரிகள் சிலருக்கும் தொடர்புள்ளமை குறித்து கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.
கொழும்பில் கடத்தப்பட்டு காணாமற்போன 5 இளைஞர்கள் தொடர்பான வழக்கின் விசாரணை நேற்று முன் தினம் நடந்தபோது சாட்சியமளித்த குற்றப்புலனாய்வுத்திணைக்களப் பொறுப்பதிகாரி ரஞ்சித் முனசிங்க, சம்பந்தப்பட்ட இளைஞர்களின் கடத்தல்களுடன் சுமித் ரணசிங்க மற்றும் சந்தன குமார ஆகிய கற்படை அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக தான் மேற்கொண்ட விசாரணைகளில் தெரிய வந்ததாகக் கூறியுள்ளார்.
இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதால் அவர்களைக் கைது செய்யவில்லை என்று கூறிய ரஞ்சித் முனசிங்க, அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களைத் தடை செய்யும் உத்தரவொன்றை நீதிமன்றத்திடமிருந்து பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்.
இவர்கள் இருவர் தவிர சம்பத் முனசிங்க என்ற மேலும் ஒரு கடற்படை அதிகாரியும் இந்த கடத்தல்களில் சம்பந்தப்பட்டுள்ளமை தான் மேற்கொண்ட விசாரணைகளின்போது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் குற்றப்புலனாய்வுத்திணைக்களப் பொறுப்பதிகாரி ரஞ்சித் முனசிங்க கூறினார்.
மேலும் மூன்றாவது சந்தேகநபருக்குக் கடந்த காலத்தில் கொட்டாஞ்சேனைப் பகுதியில் நிகழ்ந்த கடத்தல் சம்பவங்களுடனும் தொடர்பிருப்பதாக தமது விசாரணைகளில் தெரியவந்திருப்பதாகவும் ரஞ்சித் முனசிங்க நீதிமன்றத்தில் தெரிவித்தார்.
இந்த வழக்கின் மேலதிக விசாரணை எதிர்வரும் 23ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த)

# நீதிமன்றத் தாக்குதல்; நேற்றும் இருவர் கைது

யாழ்ப்பாணம்,ஜூன் 7
யாழ்.நீதிமன்றக் கட்டடத்தொகுதி தாக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மேலும் இருவர் கொழும்புக் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அரியாலையைச் சேர்ந்த யாழ். தபால் நிலையத்தில் கடமையாற்றும் தற்காலிக உத்தியோகத்தர் ஒருவரும் ,யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் கடமை புரியும் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கைதாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
நீதிமன்றம் தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் போன்றவற்றை ஆதாரமாகக் கொண்டே இவர்கள் கைதாகியுள்ளனர்.
பாலியல் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலையைக் கண்டித்தும் ,சம்பந்தப்பட்டவர்களுக்கு அதி உச்ச தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரியும் கடந்த 20 ஆம் திகதி யாழ்.நகரில் கடையடைப்பும் ஆர்ப்பாட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்து.
இதன்போது யாழ். நீதிமன்றக் கட்டத்தொகுதி ஆர்ப்பாட்டக் காரர்களால் தாக்கப்பட்டிருந்தது.
இது தொடர்பில் 129 பேர் கைது செய்யப்பட்டதுடன் ,பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னேடுக்கப்பட்டு இன்று வரை சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பலர் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.
இந்நிலையில் நேற்றைய தினமும் நீதிமன்றக் கட்டடத் தொகுதி தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.இவர்கள் நேற்றிரவு யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். (த-4-ரி)


## மரண அறிவித்தல்கள்



### கந்தையா பரமசாமி

சரசாலை வடக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பரமசாமி நேற்று (04.06.2015) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா – செல்லாச்சி தம்பதியரின் மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், சிவராசா (பிரகாஷ் ஆடையகம்), ஆனந்தராசா (நிலா புடவையகம்),ரங்கநாயகி (லண்டன்),செல்வநாயகி, சிவநேசன் (சிவம் புடவையகம்), சிவபாலன் (லண்டன்), இன்பநாயகி சிவகுமார் (அபி பல்பொருள் வாணிபம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி, தேவமலர், காலஞ்சென்றவர்களான தர்மசீலன், ஈஸ்வரநாதன் மற்றும் கலையரசி, சுதாமதி, திருச்செல்வம் (கணபதி மில்), யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், குருபரன், யாழினி,தாரணி, செந்தூரன், பிரதீபன், வாகினி, கௌரிகரன், செல்வக்குமரன், உசாதேவி, மோகனசகிலன், லோகிதன், யதுர்சன், டிலக்சி, கிருசாந்தி, உசாந்தி, சாரங்கன், அபிவர்ணா ஆகியோரின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.06.2015) வெள்ளிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லதில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொம்பிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சரசாலை வடக்கு, சாவகச்சேரி.*
தகவல்: குடும்பத்தினர். 0213735893



### சுந்தரம் கமலநாதன் (சின்ராசா)

219/5, கனகசபை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் கமலநாதன் நேற்று (04.06.2015) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்-இராசமணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராசமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், பவளம் மற்றும் சிவனேஸ்வரி, இராஜேஸ்வரி, தேவராசா ஆகியோரின் மைத்துனரும், தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி, கனகலிங்கம், வினோத் அஜந்தன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன், றஜனகுமார், முருகாஜினி ஆகியோரின் அன்பு மாமனும் நிவேதிகா, மயூரன், நிருத்திகா, மகினன், மகிஸ்ரா, யகிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.06.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கனகசபை வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர். 0778737199
(60443)(10.6.3)

### திருமதி கமலாம்பிகை பாலசுப்பிரமணியம்

தோற்றம் : 11.07.1922 மறைவு: 04.06.2015



கம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், இளவாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை பாலசுப்பிரமணியம் நேற்று (04.06.2015) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் (P.W.D Oversweer) அன்பு மனைவியும், தர்மபாலாவின் (ஓய்வு நிலை பொறியியலாளர் இ.போ.ச) தாயும், சிவகாமி தர்மபாலாவின் (ஓய்வுநிலை ஆங்கில ஆசிரியை) அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-முத்துப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான போஸ்ற்மாஸ்ரர் செல்லப்பா-வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை, கணேசமூர்த்தி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.06.2015) வியாழக்கிழமை நடைபெற்றன.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 021 221 1980, 021 321 4608
தகவல்: குடும்பத்தினர்.
(60448)(10.6.1)

# விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றிச் சாவு

கிளிநொச்சி, ஜூன் 05
விபத்தில் காயமடைந்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் சிகிச்சை பயனற்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழுந்தார்.
இராமநாதபுரம் வட்டக்கச்சியைச் சேர்ந்த கணேசு சர்வேஸ்வரன் (வயது– 29) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.
இது தொடர்பில் மேலும் தெரிய வருவது:–
கடந்த வாரம் கிளிநொச்சி வைத்தியசாலையின் முன்பாக இடம்பெற்ற வீதி விபத்தின்போது படுகாயமடைந்த வைத்தியசாலையின் பாதுகாப்பு உத்தியோகத்தர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு அனுமதிக்கப்பட்டிருந்தவரே சிகிச்சை பயனற்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (த-101)

# பஸிலின் மனு விசாரணை இன்று

கொழும்பு, ஜூன் 05
முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்பட சந்தேக நபர்கள் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்வதை நீதிமன்றம் இன்று வரை ஒத்திவைத்துள்ளது.
தம்மைக் கைது செய்தமை சட்ட விரோதமானது என அறிவிக்க கோரி முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ஜயதிலக்க ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.
பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன், நீதியரசர்கள் பியசாத் டெப், ரோஹினி மாரசிங்க ஆகியோர் அடங்கிய அமர்வு மனுவை ஆராய்ந்தது.
இதன்போது பஸில் ராஜபக்ஷ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு தேசிய நிறைவேற்றுச் சபையின் தீர்மானத்திற்கு அமைய ஏற்படுத்தப்பட்டதாகக் கூறியுள்ளார். தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கம் வகிக்கும் நபர்கள் ராஜபக்ஷ குடும்பத்தினருடன் பகையுணர்வைகொண்டிருப்பதாகவும் சட்டத்தரணிகூறியுள்ளார். அதேவேளை தற்போதைய அரசின் சட்டவிரோத நடவடிக்கைகள் சம்பந்தமாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை. அரசியல் பழிவாங்கலுக்காக மாத்திரமே அந்த விசாரணைப் பிரிவு பயன்படுத்தப்படுகிறது எனவும் சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (த)

# பஸ் ,ரயில் நிலையங்களில் இலவச இணையத்தள வசதி

*தகவல் தொழில்நுட்ப மையம் நடவடிக்கை*

கொழும்பு, ஜூன் 05
நாட்டிலுள்ள பிரதான பஸ் தரிப்பு நிலையங்களிலும் 33 ரயில் நிலையங்களிலும் பொதுமக்களின் பாவனைக்காக இலவச இணையத் தள வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாக இலங்கை தகவல் தொழில்நுட்ப தொலைத் தொடர்பு நிறுவனம் தெரிவித்திருக்கிறது.
கொழும்பு, கம்பஹா, மாத்தறை, பொலநறுவை, யாழ்ப்பாணம், புத்தளம், அம்பாந்தோட்டை, திருகோணமலை உட் பட்ட பல பிரதான நகரங்களில் தற்சமயம் இந்த வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. இலவச இணையதள வசதிகளை நாடெங்கும் ஏற்படுத்தித்தரும் விரிவான திட்டத்தின் கீழ் பிரதான பஸ் தரிப்பு நிலையங்களிலும் 33 ரயில் நிலையங்களிலும் இந்த இலவச வசதியை ஏற்படுத்தித் தருவதன் மூலம் அந்த இடங்களுக்கு வந்துசெல்லும் பல்லாயிரக் கணக்கான பொது மக்கள் பயனடைவர் என இலங்கை தகவல் தொழில்நுட்ப தொலைத் தொடர்பு நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான முகுந்தன் கனகே தெரிவித்திருக்கிறார்.
இதுவரை 105 நிலையங்களில் இந்த வசதி ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளதாகவும் தெற்காசியப் பிராந்தியத்திலேயே இத்தகைய வசதிகளை விஸ்தீரணமாக மேற்கொண்ட நாடு இலங்கையே எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.(த-சி)

## கண்ணீர் அஞ்சலி



யா/மானிப்பாய் மகளிர் கல்லூரியின் முருகன் ஆலய பிரதம குருக்கள்
**சிவஸ்ரீ இராஜேஸ்வரக்குருக்கள்**
அவர்களின் அன்புத் தந்தை
**சிவஸ்ரீ சுப்பையா ஐயர் கார்த்திகேசு ஐயர்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடிய விரைவில் தேர்தல் நடத்துக

*அரசை வலியுறுத்துகிறது ஜே.வி.பி*

கொழும்பு, ஜூன் 05
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ள அரசமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமித்து சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டதும் கூடிய விரைவில் பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என ஜே.வி.பியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
பத்தரமுல்ல பெலவத்தையில் உள்ள ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய தேர்தல் முறை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமாயின் அனைத்து தரப்பினருக்கும் நியாயமான பிரதிநிதித்துவம் கிடைக்கும் தேர்தல் முறைமையை ஏற்படுத்த வேண்டும்.
புதிய தேர்தல் முறை திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவது சிரமமானது என காண்பித்து நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கும் தேவையே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு உள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு தடையேற்படுத்தி நாட்டை அராஜக நிலைக்குள் தள்ள முயற்சித்து வருகின்றது.
அவர்களின் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்காத அரசு, ஏற்பட்டுள்ள நிலைமைக்குப் பொறுப்புக் கூறவேண்டும்– என்றார். (த)

## தந்தையும் மகளும் விபத்தில் சாவு

கொழும்பு, ஜூன் 05
தம்புள்ளை கெக்கிராவ வீதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் தந்தையும், மகளும் உயிரிழந்துள்ளனர்.
நேற்றுக் காலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் மீது மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
மோட்டார் சைக்கிளில் பயணித்த 8 வயதுடைய சிறுமியும் தந்தையும் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளனர்.
மேலும் விபத்தில் காயமடைந்த மனைவி மற்றும் கைக் குழந்தை தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் பதவி விலகினார்

கொழும்பு, ஜூன் 05
நுகர்வோர் அதிகாரசபையின் பணிப்பாளர் ரூமி மர்சூக், அவரது பதவியில் இருந்து கடந்த வாரம் விலகியதை அடுத்து, நேற்று வியாழக்கிழமை நடைமுறைக்கு வரும் வகையில், அவர் நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வர்த்தக அமைச்சின் செயலாளரிடம் அவரது பதவி விலகல் கடிதத்தைக் கடந்த வாரம் கையளித்திருந்தார்.
கடந்த 8 வருட காலமாக நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் பதவியில் இருந்த இவர், அவருடைய சில தனிப்பட்ட தேவைகளுக்காகவே பதவி விலகியதாகத் தெரிவித்துள்ளார். (த)

## பல்கலை மாணவர் 13 பேருக்கு பிணை

கொழும்பு, ஜூன் 05
சட்டவிரோதமாகக் கூட்டத்தை நடத்தியமை, அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் பலவந்தமாக நுழைந்தமை மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்திக் காயப்படுத்திய குற்றச்சாட்டுகளின் கீழ் நோட்டீஸ் அனுப்பப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 13பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
கோட்டை நீதிவான் பிரியந்த லியனகேயே அந்த 13பேரையும் நேற்று வியாழக்கிழமை பிணையில் விடுவித்துள்ளார்.
பிணையில் விடுவிக்கப்பட்ட அந்த 13 பேரில் அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் ஏற்பாட்டாளர் நஜின் இந்திக்கவும் அடங்குகின்றார்.
அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து அலரி மாளிகை வரைக்கும் கடந்த 30ஆம் திகதி பேரணி நடத்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்கு எதிராகவே இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. (த)

## சிறுவன் மீது துஷ்பிரயோகம்; பிக்குவுக்கு 12 வருட கடூழியம்

கொழும்பு, ஜூன் 05
11 வயதுச் சிறுவனொருவனை வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த விகாராதிபதியான பிக்கு ஒருவருக்கு காலி மேல் நீதிமன்ற நீதியரசர் கே.பி.கே. ஹிரிம்புரேகம 12 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.
அத்துடன், எதிராளிக்கு ஐயாயிரம் ரூபா அபராதமும் விதித்த நீதிவான் பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு எதிராளி 50 ஆயிரம் ரூபா நட்டஈடும் வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.
காலி மினுவாங்கொடை குணரத்னபௌத்த விகாரையின் அதிபதியான நாரங்ஓவிட்ட திலகரத்ன எனும் 63 வயது பிக்குவுக்கே இத்தண்டனை வழங்கப்பட்டது.
இவர் மேற்படி விகாரையின் விகாராதிபதியாகப் பணிபுரிந்த சமயம் 2002 ஜூன் முதலாம் திகதி முதல் 2003 மே 30ஆம் திகதிவரை 11 வயதுச் சிறுவனொருவனை வல்லுறவுக்கு உட்படுத்தியதாக சட்டமா அதிபரால் காலி மேல் நீதி மன்றத்தில் பாரதூரக் குற்றச்சாட்டின் கீழ் தொடரப்பட்டிருந்த வழக்கின் நீண்டகால விசாரணையின் பின் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.
இந்த விகாரையில் இருபது சிறுவர்கள் தங்கியிருந்ததாகவும் இச் சிறுவன் மீது மேற்கொள்ளப்பட்ட வல்லுறவு சம்பந்தமாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் அந்தப் பிக்கு கைது செய்யப்பட் டார் எனவும் தெரிய வருகிறது.
(த–சி)

## தனங்களப்பு விநாயகர் கும்பாபிஷேகம்

சாவகச்சேரி தனங்களப்பு காரைத்தூர் விநாயகர் ஆலய புனருத்தாரன அஷ்டபந்தன பிரதிஸ்டா மஹாகும்பாபிஷேகம் 07.06.2015 நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
இதன் பூர்வாங்கக் கிரியைகள் விநாயகர் வழிபாட்டுடன் இன்று காலையில் ஆரம்பமாவதுடன் மூன்று தினங்கள் நடைபெறும். கிரியை வழிபாடுகளில் இரண்டாம் நாளான நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணி முதல் பி.ப. 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் மூன்றாம் நாள் ஞாயிற்றக்கிழமை மு.ப. 10.55 மணி முதல் 11.55 மணி வரையான சுப வேளையில் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகமும் நடைபெறும்.


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



நல்லூர் பிரதேச செயலராக நீண்டகாலமாக கடமையாற்றி நேர்மை, உழைப்பு அன்பு என்பவற்றால் மக்களின் மனங்களை வென்று பல வருடங்களாக எமது நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கு கௌரவ தலைவராகவும் சேவையாற்றி நல்நிலைக்கு வித்திட்ட எமது அன்புக்குரிய

**பா. செந்தில்நந்தனன் ஐயா**

அவர்கள் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவி உயர்வுபெற்றமையை இட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுடன் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வினையும் அடைய எல்லாம் வல்ல பரம்பொருளை வேண்டிநிற்கின்றோம்.

Best Wishes

இ.சிவகுமார், ந.காராளசிங்கம், ப.நிஜந்தன், ச.பிரதாபன், கு. நர்மேந்திரா.

### மணமகள் தேவை

யாழ். இந்து டென்மார்க்கில் வசிக்கும், உயர் கல்வி அங்கு கற்று, உயர் தொழில் புரியும், 37 வயது நிரம்பிய 5',9'' உயரம், எந்த தீய பழக்க வழக்கங்களுமற்ற, Sponsor வசதியுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

மணமகள் அழகிய, உயர்கல்வி கற்றவராகவும், உயர்கல்வியை தொடர்ந்து படிக்க விரும்பியவர்கள், டென்மார்க்கில் வசிக்க விருப்பமுள்ளவர்களையும் எதிர்பார்க்கின்றோம். திருமணம் இலங்கை அல்லது மணமகள் வசிக்கும் எந்த நாட்டுக்கும் வந்து செய்ய முடியும். விண்ணப்பிப்பவர்கள் பூரண விவரங்களுடனும், புகைப்படங்களுடனும் விண்ணப்பிக் கவும்.

தொடர்புகளுக்கு: 021 231 7232
001 416 298 8463 (கனடா)
கனடா நேரப்படி இரவு 7.30 பின்னர் தொடர்பு கொள்ளவும் அல்லது
0114597120203 (டென்மார்க்) அல்லது
Email: devi_ta12@hotmail.com அல்லது
vasan.dk@hotmail.com (C.18460)(10.6.3)

### தேர்தல்கள் திணைக்களம் அறிவித்தல்

உடல் வலிமையிழப்புக்குட்பட்டோர்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்தும் நடவடிக்கையின்போது, வலிமையிழப்புக்குட்பட்டோர்களுக்காகவே இருக்கும் மக்கள் அமைப்புக்களின்/விசேட அமைப்புக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல்.

2015 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வுக்குரிய வாக்காளர் கணக்கெடுப்பு, 2015 மே மாதம் 15 ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தகைமையுடைய அனைத்துப் பிரசைகளினதும் வாக்குரிமை பாதுகாக்கப்படும் வகையில் தேருநர் இடாப்பில் பெயர்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பிறப்பிலிருந்து ஏற்பட்ட அல்லது வேறு வகையான ஏதேனும் உடலியல் குறைபாட்டின் பெறுபேறாக வாழ்கைத் தேவைகளை முழுமையாகவோ அன்றி ஒரு பகுதியையோ தனக்காக தன்னாலேயே நிறைவேற்றிக்கொள்ள முடியாதவர்கள் தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்ளவும்.

அத்துடன்,

தேர்தலொன்றின்போது தனது வாக்கை, தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்கு நேரில் சென்று அடையாளமிடுவதில் பிரச்சினைகள் இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் தனது வாக்கை சுதந்திரமாகவும், இரகசியமாகவும் அளிப்பதற்குள்ள வசதிகள் தொடர்பாக , பரந்தளவில் விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக ஒத்துழைப்பு வழங்கக்கூடிய முழுமையாகக் கண்பார்வையற்ற மற்றும் அசைவுகளில் குறைபாடுடைய நபர்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மக்கள் அமைப்புக்களின் / விஷேட அமைப்புக்களின் தகவல்கள் அதாவது, அந்நிறுவனத்தின் பெயர் ,நோக்கங்கள், முகவரி, தொலைபேசி, இலக்கம் என்பவற்றுடனான தகவல்களை 2015 யூலை மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல்கள் செயலகம் சரணமாவத்தை இராஜகிரிய எனும் முகவரிக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்,
தேர்தல்கள் செயலகம், ராஜகிரிய.
2015 ஜூன் மாதம் 05 ஆம் திகதி (சி.17458) (45.5.3.7)

Majestic Cineplex Jaffna
கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில் — CEYLON THEATRES
SURIYA IN & AS



பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30
021-2227712
CeylonTheatres | www.ceylontheatres.com

Brighten Economics Hall
342,Stanly Rd. (Near D.M.I)
GAQ / BA Part I
ENGLISH Revision & Paper
R.MAHESWARAN (BA.Dip.in.Eng., Sp.Trd.Eng)
Sat/Sun 8-9/1-2/ 6.00-7.30 pm
Tamil: K. நாகராஜா (MA)
BA-(Jaffna) Final-2-3
ஏனைய பாடங்களும்
ஆரம்பம்-6/6/15 Sat

Nature pure
20L போத்தலில் அடைத்த சுத்தமான தண்ணீரை மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெறமுடியும்.
குறிப்பு: வீடுகளுக்கும் கொண்டுவந்து தரப்படும். (60445)(10.6.3)
தொடர்புகளுக்கு: 077 254 3253

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளின் நோக்கங்களுக்கு வழிபாட்டுத் தலங்களை வழங்காதீர்

## மதத் தலைவர்களிடம் அரசு கோரிக்கை

கொழும்பு, ஜூன் 5
சமய வழிபாட்டுத் தலங்களை அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பெற்றுக்கொடுக்க வேண்டாம் என அரசு மதத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

விகாரைகளில் போதி பூஜை நடத்துவதாகக் கூறி தோல்வியடைந்த அரசியல்வாதிகள், தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பௌத்த வழிபாட்டுத் தலங்களைப் பயன்படுத்துவது கவலைக்குரியது என ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அமைதி, சகவாழ்வுக்குப் பதிலாகப் பகையையும் குரோதங்களையும் பரப்பும் மையங்களாக இந்த பொது ஸ்தலங்களை மாற்றும் நிலைமையைக் காணக் கூடியதாக உள்ளது. குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் மேடையாக வணக்கஸ்தலங்களை மாற்ற வேண்டாம்.

எந்த அரசியல்வாதிக்கும் தனது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள வணக்கஸ்தலங்களைப் பயன்படுத்த இடமளிக்க வேண்டாம் எனப் பௌத்த மதத் தலைவர்கள் உட்பட மரியாதைக்குரிய ஏனைய மதத் தலைவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம் எனவும் அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விகாரைகளை தனது அரசியல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தி வருவதுடன், கொழும்பு நாராஹேன்பிட்டியில் உள்ள அபாயராம விகாரையை தனது அலுவலகமாகவே பயன்படுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, நிதி மோசடி விசாரணைப்பிரிவு குறித்து தென்மாகாண அமைச்சர் ஒருவர் அண்மையில் பேசியிருந்தமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் கருணாதிலக்க,

தென் மாகாண அமைச்சரின் அந்த அச்சுறுத்தல் காவற்றுறைக்கு மாத்திரமல்லாது முழு அரச ஊழியர்களுக்குமான அச்சுறுத்தல் என குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நாட்டு மக்கள் விரட்டியடித்த காட்டுச் சட்டம் மீண்டும் ஏற்பட இடமளிக்க போவதில்லை எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

(த)

## நிதி

மகேஸ்வரி நிதியத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மணல் விநியோகத்தில் இடம்பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் நிதி மோசடி குறித்தும் எதிர்வரும் நாள்களில் இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்படும் என்றும் சுமந்திரன் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் காணப்படும் இயற்கையான மணல் மேடுகளில் இருந்து மண்ணை அள்ளி விற்பனை செய்வதற்கான உரிமையை மகேஸ்வரி நிதியம் பெற்றிருந்தது. இந்த மணல் விற்பனையில் ஈடுபடுவதற்காக லொறி உரிமையாளர்கள் மீளப்பெறக் கூடியதான 5 ஆயிரம் ரூபாவை நிதியத்தில் வைப்புச் செய்து பதிவு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அதனடிப்படையில் லொறி உரிமையாளர்கள் பணம் செலுத்தியிருந்தனர். அத்துடன் ஒரு தடவை மணல் ஏற்றுவதற்கு லொறி ஒன்றுக்கு 300 ரூபாவையும் மகேஸ்வரி நிதியம் லொறி உரிமையாளர்களிடம் இருந்து அறவிட்டு வந்தது.

தமது வைப்புப் பணத்தையும் அறவிடப்பட்ட கட்டணத்தையும் திரும்பத் தருமாறு லொறி உரிமையாளர்கள் அண்மைக்காலமாக மகேஸ்வரி நிதியத்திடம் வலியுறுத்தி வருகின்றனர். போராட்டங்கள் பலவற்றையும் நடத்தினர். பணத்தைத் திருப்பித் தருவதாக மகேஸ்வரி நிதியமும் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உறுதியளித்திருந்தனர். 50 பேரின் பணம் மாத்திரம் வழங்கப்பட்டது.

கடந்த மாதம் லொறி உரிமையாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து பாரஊர்தி உரிமையாளர்கள் சங்க நிர்வாகத்தினரையும் மகேஸ்வரி நிதியத்தினரையும் அழைத்துப் பேசியிருந்தார். அப்போதும் கட்டம் கட்டமாகப் பணத்தைத் திருப்பிச் செலுத்த மகேஸ்வரி நிதியத்தினர் ஒப்புக்கொண்டனர். ஜூன் முதலாம் திகதி முதல் கட்டத்தை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தனர். ஆனால் அந்தப் பணத்தையும் அவர்கள் செலுத்தவில்லை. இப்படி ஏமாற்றப்பட்டே யாழ். மாவட்ட பார ஊர்திச் சங்கத்தின் 500 அங்கத்தவர்களுக்குரிய பணம் இதுவரை வழங்கப்படாமல் மோசடி செய்யப்பட்டுள்ளது என்று அதன் நிர்வாகிகள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதனை வழங்குவதாக முன்னாள் அமைச்சரும் நிதியமும் உறுதிமொழி தந்து 4 மாதங்களுக்கு மேலாகிவிட்டபோதும் அதற்கான ஏற்பாடுகள் எவையும் நடக்கவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த காலங்களில் பயம் காரணமாக, முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக முறைப்பாடு செய்யவில்லை என்று தெரிவித்துள்ள பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தினர், தற்போதுள்ள சூழ்நிலையில் குறித்த மோசடி தொடர்பில் விசாரிக்கப்பட்டு தமக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்று தெரிவித்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈபிடிபி தலைவர்களில் ஒருவருமான தவராசா, இது ஒரு அரசியல் காழ்ப்புணர்வுக் குற்றச்சாட்டு என்றார்.

"இது ஒரு ஜனநாயக நாடு. இங்கு யாரும் யார் மீதும் குற்றஞ்சாட்டலாம். ஆனால் அது நிரூபிக்கப்பட வேண்டும். இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் 3,000க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் நிரூபிக்கப்படவேண்டுமே!" என்றார் அவர். (உ-5)

## 5 மாணவர்

வக்கிரமான கொலையாளிகளால் புங்குடுதீவு மாணவி கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து மே 20ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஹர்த்தால் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. இதன்போது நீதிமன்றத் தொகுதி தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டது. நகரில் இருந்த பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டது. இது தொடர்பில் 130 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அனுராதபுரம் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த 130 பேரில் கடைசித் தொகுதியினரான 40 பேர் நேற்று யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். இவர்கள் அனைவரும் மே 21ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியமை, காயங்களை ஏற்படுத்தியமை, அத்துமீறி உட்பிரவேசித்தமை, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸாருக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸ் நிலையத்தினுள் அத்துமீறி நுழைய முயற்சித்தமை, பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்களை மீட்க முயற்சித்தமை போன்ற குற்றசாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

வழக்கு யாழ். நீதவான் மன்றில் மாவட்ட நீதிபதியும் மேலதிக நீதிவானுமாகிய கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது பலத்த பாதுகாப்புடன் 39 சந்தேகநபர்கள் அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளால் மன்றில் முற்படுத்தப்பட்டனர். பொலிஸாரின் கண்ணீர் புகைக் குண்டு தாக்கி காலில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் உயர்தர வகுப்பு மாணவன் மட்டும் மன்றில் முற்படுத்தப்படவில்லை. அவர் தொடர்பான அறிக்கை யாழ். சிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கல் செய்யப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களில் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச அலுவலர்கள் அடங்குகின்றனர் என்று அவர்கள் சார்பில் முற்பட்டிருந்த சட்டத்தரணிகள் மன்றிற்குச் சுட்டிக்காட்டினர். அத்துடன் அவர்களை பிணையில் விடுவிக்குமாறும் கோரினர். அதற்கான ஆவணங்களையும் சமர்ப்பித்தனர்.

வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டபோது சிலர் பாடசாலை மாணவர்களென வாக்குமூலம் வழங்கினர் என்றும் அவர்களை மன்று பொருத்தமான பிணையில் விடுவிக்க [illegible] பில்லை என்றும் தெரிவித்தனர்.

ஏனைய எந்தவொரு சந்தேகநபரும் குற்றம் நடைபெற்ற இடத்தில் தாம் இருந்திருக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்கு ஆதாரம் எதையும் சமர்ப்பிக்கவில்லை எனவும், நீதிமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நீதி பரிபாலனத்துக்கு விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தல் என்பதுடன் நாட்டின் அமைதி, சமாதானத்துக்கு விடுவிக்கப்பட்ட சவால் எனவும் எனவே அவர்களைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் பொலிஸார் வலியுறுத்தினர்.

5 மாணவர்கள் உட்பட அறுவரை தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவித்த நீதிவான் ஏனையோரின் விளக்கமறியலை நீடித்தார். பாடசாலை மாணவர்கள் தொடர்பான சிறுவர் நன்நடத்தை அதிகாரியின் அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (உ-103)

## ஜனாதிபதி

.பிரிவின் தலைவராகப் பணியாற்றியவர் இவர். தான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்பும் அவரையும் அவரின் கீழான படையினரையும் மைத்திரிபாலவும் பணிக்கு அமர்த்திக் கொண்டார். எனினும் நாமல் ராஜபக்ஷவின் மெய்க் காவலர் ஒருவர் ஆயுதத்துடன் மைத்திரிபாலவை நெருங்கிய சம்பவம் மற்றும் இன்னொரு சந்தர்ப்பத்தில் மற்றொருவர் ஆயுதத்துடன் நெருங்கிய சம்பவம் என்பவற்றைத் தொடர்ந்து, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரை புதிய ஜனாதிபதி நம்பக்கூடாது என்ற விமர்சனங்கள் கடுமையாக எழுந்தன.

இதையடுத்து, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் இருந்த இராணுவ அணி முற்றாக கலைக்கப்பட்டதுடன், மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பு பொலிஸ் பாதுகாப்புப் பிரிவிடம், ஒப்படைக்கப்பட்டது. (உ-5)

## மாணவனைப்

தொகுதி மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை அடுத்து 130 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டனர். அவர்களில் பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்கியிருந்தனர்.

கைதான பாடசாலை மாணவர்களை விடுவிப்பதாகக் கூறி அவர்களது பெற்றோர் சிலரிடம் குறித்த இளைஞன் பணம் பெற்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இருபாலையைச் சேர்ந்த குறித்த இளைஞன், தனக்கு நெருங்கிய சட்டத்தரணி ஊடாக மாணவர்களைப் பிணையில் விடுவித்துத் தருவார் என்று கூறியே இந்த பணத்தைப் பெற்றுள்ளாராம். அதனை நம்பிய அராலியைச் சேர்ந்த பெற்றோர் நேற்றுமுன்தினம் 10 ஆயிரம் ரூபாவைக் கொடுத்துள்ளனர். பிணையெடுப்பதற்கு மேலும் பணம் வேண்டும் என்றுகூறி மேலும் 15 ஆயிரம் ரூபாவை நேற்றுக் காலையில் குறித்த இளைஞர் பெற்றுள்ளார்.

நேற்றைய தினம் குறித்த மாணவன் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதனால் குறித்த் பெற்றோரும் நீதிமன்றுக்கு நேற்றுச் சென்றிருந்தனர். [illegible] மாணவன் [illegible] சட்டத்தரணிகள் எவரும் முற்படடிருக்கவில்லை. குறித்த இளைஞன் நேற்றைய தினம் நீதிமன்றுக்கு வருகை தந்தபோது அவரைப் பொலிஸார் கைது செய்தனர். நீதிமன்றினால் தேடப்படுபவர் என்ற அடிப்படையிலேயே அவர்கள் அவரைக் கைது செய்திருந்தனர். பொலிஸார் அவரைக் கைது செய்து வைத்திருந்தபோது, தமது வழக்கு முடிந்து திரும்பிக் கொண்டிருந்த பெற்றோர் அவரைக் கண்டனர். பொலிஸாரிடம் விவரம் தெரிவித்தனர்.

அதனையடுத்து அந்த இளைஞனிடமிருந்த 15 ஆயிரம் ரூபா பணத்தை மீட்ட பொலிஸார் அதனைப் பெற்றோரிடம் ஒப்படைத்தனர். மிகுதிப் பணம் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

சந்தேகநபர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குற்றச் செயல் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர் என்பதனால் அங்குள்ள பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (உ-4)

## போதைப்

போதைப் பொருள் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. இதனால் குற்றச் செயல்களும் அதிகரித்து வருகின்றன. பாடசாலை மாணவர்கள் இடையேயும் போதைப் பொருள் பாவனை திட்டமிட்ட ரீதியில் பரப்பப்பட்டு வருகின்றது.

இது அரசியல் பின்புல நோக்கங்களுடனேயே போதைப் பொருள் பாவனை திட்டமிட்டு வடக்கில் ஊக்குவிக்கப்படுகிறது என்று அண்மையில் முதலமைச்சர் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார். இதே வேளை, வடக்கில் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு வடக்கு அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கத் தயார் என்று வடக்கு முதலமைச்சரிடம் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்து மாகாண அரசுக்கு கொழும்பு அரசு இந்த விடயத்தில் எத்தகைய உதவிகளை வழங்க முடியும் என்று ஆராய்வதற்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையினரைச் சந்தித்துத் தாம் பேசுவார் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். கொழும்பில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. (உ-5)

## பாலியல்

குள்ளாக்கிய ஆள் என சந்தேகநபரான சிறுவனை தெளிவாக அடையாளம் காட்டினார் சிறுமி. இந்த வழக்கு எதிர்வரும் 11ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது. (உ-21)

## ரயர்

யில் விடு விக்கப்பட்டார்கள்.

கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த மூவரும் கோப்பாய், நல்லூர் மற்றும் உரும்பிராய் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர் கள் தொடர்பான வழக்கு நேற்று யாழ். நீதிவான் மன்றில் மாவட்ட நீதிபதியும் மேலதிக நீதிவானுமாகிய கஜநிதிபாலன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் சிறைச்சாலை அதிகாரிகளால் மன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணிகள் சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரியதுடன் அவர்கள் குற்றத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றனர் எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேகநபர்களை தலா இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் அனுமதியளித்தது. வழக்கு ஜூலை மாதம் 10 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(உ-103)

## கனிமொழி

மாகாண சபை உறுப்பினருமான அனந்தி.

இலங்கை அரசால் பாதுகாப்பு வலயங்கள் என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் தடைசெய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்றும் அவர் தனது சாட்சியத்தில் குறிப்பிட்டார்.

போரின் இறுதியில் இராணுவத்தனரிடம் சரணடைந்து பின்னர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனு மீதான சாட்சிய விசாரணைகள், சம்பவம் இடம்பெற்ற பகுதியான முல்லைத்தீவிலுள்ள நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது. நேற்றைய விசாரணையின் போது, மனுதாரர்களின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. எழிலனின் மனைவி, திருமதி அனந்தி சசிதரன் மற்றும் எழிலனின் தாயார் சாட்சியமளித்தனர். மனுதாரர்கள் சார்பில் மூத்த சட்டத்தரணி கே.என்.ரட்ணவேல் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

அனந்தி சசிதரன் தனது சாட்சியத்தில், 2008ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து, இராணுவத்தினரிடம் சரணடைவது வரையிலான இடப்பெயர்வு சம்பவங்களைக் குறிப்பிட்டார். அரசினால் பாதுகாப்பு வலயம் என்ற அறிவிக்கப்பட்ட பிரதேசத்தில், பொஸ்பரஸ் குண்டு பாவிக்கப்பட்டதையும் இதன் பாதிப்பை தான் நேரடியாக அனுபவித்தார் எனவும் தெரிவித்தார். போர் முடிந்த பின்னர் 4 அல்லது 5 மாதங்கள் இந்தத் தாக்கத்தினால் மூச்சு எடுப்பதற்கு தான் சிரமங்களை எதிர்கொண்டார் எனக் குறிப்பிட்டார்.

தனது பிள்ளையை சத்திரசிகிச்சைக்காக, போரின் போது வைத்தியசாலையில் சேர்த்தார் எனவும், குறித்த வைத்தியசாலையின் மீது ஷெல் வீழ்ந்து பலர் உயிரிழந்தமையைத் தான் நேரில் கண்டார் எனவும் தெரிவித்தார்.

2009 மே மாதம் 17ஆம் திகதி கைத்தொலை பேசியூடாக தனது கணவர் அப்போதைய தமிழக முதலமைச்சராக இருந்த கருணாநிதியின் மகள் கனிமொழியுடன் பேசினார் என வும் இதன் போது சரணடையுமாறு தெரிவிக்கப்பட்டதாகவும், அனந்தி குறிப்பிட்டார்.

இராணுவத்தினர் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள் அனந்தியின் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தனர். அத்துடன், திருமதி அனந்தி சசிதரனிடம், "உமது கணவர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் ஆயுதம் தாங்கிய போராளி என்பதை அறிவீரா" என்று கேட்டனர். "அவர் அரசியல்துறைப் போராளி" என்று பதிலளித்திருந்தார். இதன் பின்னர், எழிலனின் தாயாரின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது. (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டமான் பதுக்கி வைத்த பொருள்கள் பகிர்ந்தளிப்பு



கொழும்பு, ஜூன் 5

கடந்த அரசினால் மக்களுக்காகப் பகிர்ந்தளிக்கும்படி வழங்கப்பட்ட ஒரு தொகுதி பொருள்கள், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கும், கால்நடை அமைச்சுக்கும் பொலிஸாரினால் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் மற்றும் இலங்கை தொழிலாளார் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம் ஆகியோரால், நோர்வூட் தொண்டமான் மைதானத்தில் வைத்து மக்களுக்குப் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதன்போது ஹற்றன் பதில் நீதிவான் தமயந்தி பெர்னாண்டோவினால் குறித்த பொருள்களை பொது மக்களிடம் பகிர்ந்தளிக்க வேண்டாம் என உத்தரவிடும் அறிக்கையின் பிரதி ஒன்றை நோர்வூட் பொலிஸார், ஆறுமுகன் தொண்டமானிடம் கையளித்தனர்.

அதன் அடிப்படையில் பகிர்தளிக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் நோர்வூட் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

எனினும் இந்த பொருள்களை தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கும், கால்நடை அமைச்சுக்கும் வழங்கும்படி ஹற்றன் நீதிமன்றத்தின் நீதிவான் பிரசாத் லியனகே கடந்த 28ஆம் திகதி உத்தரவிட் டுள்ளார்.

இதனடிப்படையில் நேற்று நோர்வூட் தொண்டமான் மைதானத்தில் இருந்த பொருள்களில் சிலவற்றை தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கும், கால்நடை அமைச்சுக்கும் நோர்வூட் பொலிஸார் பகிர்ந்தளித்தனர்.

முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானினால் தோட்ட தொழிலாளிகளுக்குச் சிமெந்து இயந்திரம், தகரம், கூடாரங்கள், கதிரைகள் உட்பட பல பொருள்கள் கடந்த பெப்ரவரி 17 ஆம் திகதி பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கும்போது ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக இதனை பகிர்ந்தளிக்க வேண்டாம் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த பொருள்கள் சம்பந்தமாக சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் ஐந்து உறுப்பினர்களுக்கு எதிராக வழக்கு மேற்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது நோர்வூட் மைதானத்தில் இருக்கும் பொருள்களில் சட்டபூர்வமான முறையில் காணப்படும் பொருள்களை சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்திற்கும் சட்டபூர்வமற்ற நீதியற்ற முறையில் காணப்படும் பொருள்களை தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுக்கும், கால்நடை அமைச்சுக்கும் வழங்குமாறு நீதிவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## பொதுபலசேனா தேரர்கள் 6 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஜூன் 5

மஹியங்கனை பிரதேச சபையின் உறுப்பினரும் தேசிய பல சேனாவின் உறுப்பினருமான வட்டரக்க விஜித்த தேரரை மறைத்து வைத்திருப்பதாகக் கூறி, கொள்ளுப்பிட்டியில் உள்ள கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சுக்குள் 2014ஆம் ஆண்டு அத்துமீறி நுழைந்ததாக கூறப்படும் பொதுபல சேனா அமைப்பின் தேரர்கள் அறுவருக்கு எதிரான குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் பத்திரத்தை ஜூலை 19ஆம் திகதி தாக்கல் செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் பியந்த லியனகே, பொலிஸாருக்கு நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டார். (த)

## ராஜபக்ஷவின் குடும்பத்தினர் விசாரணைக்கு அஞ்சுவது ஏன்?

*அஸாத் சாலி கேள்வி*

கொழும்பு, ஜூன 5

நிதிக் குற்றப்பிரிவுக்கு விசாரணைக்கு செல்ல ராஜபக்ஷ குடும்பத்தினர் அஞ்சுவது ஏன்? – என மத்திய மாகாண சபை உறுப்பினர் அஸாத் சாலி கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்த்தன, பிரேமதாஸ, சந்திரிகா பண்டாரநாயக்க உள்ளிட்டோரும் இவ்வாறு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தைரியமாக விசாரணைகளுக்கு முகங்கொடுத்தனர். அவர்கள் ராஜபக்ஷ குடும்பத்தாரைப் போன்று போராட்டங்களில் ஈடுபடவோ விசாரணைகளை புறக்கணிக்கவோ இல்லை.

ஆனால், இந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் விசாரணைக்கு அழைக்கப்பட்டவுடன் அதனைத் தவிர்க்க போராட்டங்களிலும் பல்வேறு சதிச்செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.மு.தசநாயக்க மற்றும் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே ஆகியோரின் கொலை தொடர்பில் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டும். இவர்களின் கொலை வழக்குகள் குறித்த முக்கிய ஆதாரங்கள் சில எம்மிடம் உள்ளன. இது தொடர்பில் நாம் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதமூலம் அறிவிக்கவுள்ளோம். இந்நிலையில், இந்தக் கொலைகள் தொடர்பில் விசாரணைகள் துரிதப்படுத்தவேண்டும்.

போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு மரணதண்டனை விதிக்க வேண்டுமென்று ஜனாதிபதி அண்மையில் அறிவித்திருந்தார். அதனை நாம் வரவேற்கிறோம். அத்துடன், அண்மையில் யாழ். பயணம் செய்த ஜனாதிபதி, வித்தியா படுகொலை தொடர்பில் விசேட நீதிமன்றம் அமைக்கப்படும் எனக் குறிப்பிட்டார். அதன்படி விசாரணை துரிதப்படுத்தப்பட்டு வித்தியாவின் கொலைக்குக் காரணமானவர்களுக்கு விரைவில் தண்டனை விதிக்கப்பட வேண்டும்'' – என்றார். (த)

## '20' ஐ நிறைவேற்ற மஹிந்த தரப்பே தடை

### விக்கிரமபாகு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 5

தேர்தல் முறைமை மாற்றம் குறித்த 20ஆவது திருத்தச் சட்ட வரைவை நிறைவேற்றுவது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற் றும் மஹிந்த ஆதரவாளர்கள் சிலர் மாற்றுக் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர் என்று நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார்.

இதனாலேயே 20 ஐ நிறை வேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப் பிட்டார்.

நேற்றுக் கொழும்பில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட இந்தத் தேர்தல் முறைமையானது மக்களின் சிவில் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் உருவாக்கப்பட்டதாகும். இதனை நிறைவேற்றுவது தொடர்பில் பல கட்சிகள் தங்களது ஆதரவை வழங்கியுள்ளன. அந்தவகையில் நாமும் இதற்கு ஆதரவை வெளியிட்டுள்ளோம்.

20 தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் சில கருத்துகளை முன்வைத்திருந்தார். அதன்படி இப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்கலாம். ஆனால், மஹிந்த ஆதரவாளர்கள் இதனை நிறை வேற்ற முட்டுக்கட்டையாக விளங்குகின்றனர்.

தேர்தல் முறைமை மாற்றம் குறித்த 20ஆவது திருத்தச் சட்ட வரைவை நிறைவேற்றுவது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் மஹிந்த ஆதரவாளர்கள் சிலர் மாற்றுக் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

20 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாது ஒருவரை ஒருவர் அடிமைப்படுத்தும் நடவடிக்கைகளிலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் ஈடுபட்டுவருகின்றனர்.

20ஐ நிறைவேற்ற வேண்டுமா யின் இலகுவில் நிறைவேற்றலாம். ஆனாலும், அவர்கள் தங்களது அரசியல் இலாபங்களுக்காக இழுத் தடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்–என்றார். (த–சி)

## சிறுபான்மை அதிகாரப் பகிர்வோடு தொடர்புடையதே மாகாண சபை

### கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 5

மாகாண சபையானது சிறுபான்மை மக்களின் அதிகாரப் பங்கீட்டோடு சம்பந்தப்பட்ட விடயமாகும். வடக்கு, கிழக்கில் அதிகாரப்பங்கீட்டை ஏற்றுக்கொண்டவர்கள், ஏற்றுக்கொள்ளாதவர்கள், அனுசரித்துப் போகக்கூடியவர்கள் எனப் பல தரப்பட்டோர் காணப்படுகின்றார்கள். இதற்கப்பால் மாகாணசபை முறையை ஏற்றுக்கொண்டு செயற்படுவதற்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டி ருக்கின்றார்கள்.

–இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் தெரிவித்தார்.புதிய அரசின் செயற்பாடுகள் கிழக்கு மாகாணத்தில் எவ்வாறுள்ளது என்பது பற்றிக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த காலத்தில் நியமனங்கள், நிதியொதுக்கீடுகள், அபிவிருத்திகள் உள்ளிட்ட பல விடயங்களில் தமிழ் மக்கள் கிழக்கு மாகாண சபையால் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான புறக்கணிப்புகள் இனி மேலும் தொடரக்கூடாதென்பதற்காககிழக்குமாகாண சபையில் தமிழர்கள் ஆட்சியாளர்களாக மாற வேண்டும். அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து ஆட்சி அமைத்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மூவினத்தவர்களும் வாழ்வதால், மூவினத்தவர்களும் இணைந்து ஆட்சி புரிவதென்பது மக்களின் மனங்களுடன் ஒன்றிணைந்த ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமாகும். இந்த மாகாணத்தில் தற்போது ஆட்சி அமைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் வேலைத்திட்டங்களை வகுக்க வேண்டும்.–என்றார். (த–சி)

## இலங்கை- இந்திய வம்சாவளி மக்கள் முன்னணி பொதுத் தேர்தலில் ஐ.ம.சு.முன்னணிக்கு ஆதரவு

கொழும்பு, ஜூன் 05

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னியை ஆதரிக்கவும் அதனுடன் இணைந்து போட்டியிடவும் இலங்கை –இந்திய வம்சாவளி மக்கள் முன்னணி முடிவு செய்துள்ளது.

இலங்கை– இந்திய வம்சாவளி மக்கள் முன்னணிக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் முடிவு பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் போது கட்சியின் தலைவர் தேசபந்து முத்தப்பன் செட்டியார் எதிர்வரும் தேர்தலில் ஜனாதிபதியின் ஆட் சியை மீண்டும் பலப்படுக்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் கூட்டணியில் இணைந்து போட்டியிடுவதும் ஆதரவளிப்பதும் கட்சியின் நிலைப்பாடு என்பதை உறுதிபடத் தெரிவித்தார்.

சிறுபான்மைத் தமிழர்களின் வாக்குகள் சிதறிடாமல் அதிகளவில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்ள ஒற்றுமையுடனும் விட்டுக் கொடுப்புகளுடனும் தமது கட்சி செயற்படும் என்றும் அவர் கூறினார். நாட்டின் சகல மாவட்டங்களிலும் போட்டியிட விரும்புபவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

நகரவாழ், மலையகம் வாழ் தமிழரின் வீட்டுப் பிரச்சினைகளையும் [illegible] பிரச்சினைகளையும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறச்செய்ய நடவடிக்கை எடுப்பதற்கான தரவுகளைப் பெற்றுக் கொள்ள மக்களிடமிருந்து விவரங்களையும் முத்தப்பன் செட்டியார் கோரியுள்ளார்.

1. மலையக தரிசு நிலங்களை தேசிய அபிவிருத்திக்காக நிறுவனங்களிடமிருந்து அரசின் மூலமோ அல்லது உப குத்தகைக்கோ பெற்று தோட்டத் தொழிலாளர்களுக்கும், இளைஞர்–யுவதிகளுக்கும் பண்ணை, சுயதொழில் ஏற்றுமதிப் பயிர்ச் செய்கை ஆகிய திட்டங்கள்.

2. இந்திய நிதியுதவியின் கீழ் அரசிடமிருந்து முறையாகக் காணி பெற்று தனி அல்லது தொடர்மாடி வீட்டுத்திட்டம் அமைத்து கொழும்பு நகர் மக்களுக்கும், மலையக சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தாம் வாழும் நகரங்களில் பெருந்தோட்ட மக்கள், ஆசிரியர்கள், பெருந்தோட்ட சேவையாளர்கள், அரச உத்தியோகத்தர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுத்தல் திட்டங்கள்.

இந்த இரண்டு திட்டங்களுக்குமான பயனாளிகளைக் கணக்கிடுவதற்காக இவற்றில் இணைய விரும்புவோர் பெயர், விலாசம், மாவட்டம், தேர்தல் தொகுதி, தொலைபேசி எண் உட்பட குடும்ப விவரங்களுடன் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு விண்ணப்பிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். சகல [illegible] களையும் தலைவர், இலங்கை –இந்திய வம்சாவளி மக்கள் முன்னணி அலுவலகம், இல:111, [illegible] யார்தெரு, கொழும்பு–11 என்ற முகவரிக்கு மக்கள் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவானந்தாவை போராடி வீழ்த்தியது விண்மீன்



கரணவாய், ஜூன் 5

இறுதிவரை பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் இறுதி நேரத்தில் டேமியன் அதிரடிக் கோல் போட 1:0 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம்.

கரணவாய் கொலின்ஸ் விளையாடுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 'கிங் ஒவ் யப்னா' உதைபந்தாட்டத் தொடருக்கான லீக் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகமும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை விறுவிறுப்புக்கு பஞ்சம் இல்லாமல் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளுக்கும் கோல் போடும் வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும் எந்த அணியும் வாய்ப்பை கச்சிதமாகப் பயன்படுத்தவில்லை. எனவே கோல்கள் எதுவும் பதிவுசெய்யப்படாமல் ஆட்டம் இழுபறியாக நீடித்துக்கொண்டே சென்றது. இந்த நிலைமை அப்படியே நீடிக்க ஆட்டத்தின் முதல் பாதிவரை இரு அணிகளும் எந்தவிதமான கோல்களையும் பெறவில்லை.

எதிர்பார்ப்புக்கள் இரட்டிப்பாக ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. இரண்டாவது பாதியில் இரு அணிகளாலும் வாய்ப்புக்கள் தவறவிடப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. மைதானத்தின் மத்திய பகுதியிலேயே பந்து அல்லோலகல்லோலப்பட்டது. இந்த நிலைமை ஆட்டத்தின் பெரும்பாலான நேரங்கள் வரையில் நீடித்துச் சென்றாலும் ஆட்டம் முடிவடைய 2 நிமிடங்கள் இருக்கும் போது விண்மீன் அணியின் டேமியன் அருமையான கோல் ஒன்றைப் பதிவுசெய்ய அந்தக் கோலே ஆட்டத்தின் முதல் கோலாகவும் ஒரே கோலாகவும் விண்மீனின் வெற்றிக் கோலாகவும் அமைந்தது.

(ம-108)

# மகாஜனா திரில் வெற்றி

வலி வடக்கு, ஜூன் 5

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 15வயதுப்பிரிவு அணிகளிடையே நடைபெற்றுவரும் சிங்கர் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் ஆட்டமொன்றில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஒரு ஓட்டத்தினால் வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் சிங்கர் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட பாடசாலைகளின் பிரிவு மூன்றுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் துடுப்பாட்டத்தொடரில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற. ஆட்டமொன்றில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து ஸ்கந்தவரோதயா கல்லூரி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி 39.3 பந்துப்பரிமாற்றங்கள் மட்டுமே தாக்குப்பிடித்து அனைத்து இலக்குகளையும்; இழந்து 143 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக சதுர்ஷன் 29 ஓட்டங்களையும் பகீரதன் 20 ஓட்டங்களையும் நிசானியன் 16 ஓட்டங்களையும் ரிசாந் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி சார்பாக டிலுக்சன் 03 இலக்குகளையும் டனுசன் மற்றும் சோபிகன் 02 இலக்குகளையும் லக்சன் ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

144 ஓட்டங்கள் என்ற எட்டக்கூடிய இலக்கை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியினர் ஆமை வேகத்தில் நிதானித்தாலும் இலக்குகள் சரிவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே அமைந்தது. 142 ஓட்டங்களைப் பெற்றவர்களால் மேலதிகமாக இரண்டு ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டவோ அல்லது ஒரு ஓட்டத்தைப் பெற்று ஆட்டத்தை சமநிலையில் முடிக்கவோ இயலவில்லை. இதனால் ஸ்கந்தவரோதயா 48.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக நிகந்தன் 38 ஓட்டங்களையும் டான்சன் 12 ஓட்டங்களையும் டிலக்சன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மகாஜனாக் கல்லூரி சார்பில் றேனுகன் 3 இலக்குகளையும் பகீதரன் 2 இலக்குகளையும் சர்மிலன் ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

(ம-86)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 5

**கொலின்ஸ் வி.க.தொடர்**

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.பீற்றஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது

**யங்கம்பன்ஸ் வி.க.தொடர்**

கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மின்னொளியில் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 8மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**ஸ்ரார் ஈகிள்ஸ் வி.க.தொடர்**

மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 20 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வவுனியா சலஞ்சர்ஸ் அணியை எதிர்த்து மன்னார் றோயல் அணி மோதவுள்ளது. மதியம் 2மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் லயன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முல்லை கிங்ஸ் அணி மோதவுள்ளது.

**வவுனியா உதைபந்தாட்டத் தொடர்**

வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் தம்பையா மரியாம்பிள்ளை அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 2.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்மதினா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்இக்பால் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை, 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பீனிக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.(ம-23)

# பல்கலையை வீழ்த்தியது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை



வலி வடக்கு, ஜூன் 5

பெண்களின் ஹொக்கி ஆட்டமொன்றில் யாழ். பல்கலைக்கழக அணியை வீழ்த்தியது பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அவையும் ஹொக்கி அணியும் இணைந்து நடத்திய ஹொக்கித் தொடரின் இறுதியாட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியும் யாழ்.பல்கலை அணியும் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்துக்கு முன்பதாக காட்சியாட்டமாக நடந்த பெண்களுக்கான ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பல் கலைக் கழக பெண்கள் அணி மோதிக்கொண்டது.

பல்கலை அணியின் மீது ஏகப்பட்ட எதிர்பார்ப்புக்கள் இருந்த போதிலும் ஆட்டத்தின் முதல் பாதியிலேயே பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி முதலாவது கோலைப் பதிவுசெய்து முன்னிலை பெற்றது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சம ஆதிக்கம் செலுத்த முடிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் பல்கலைக்கழக அணியை வெற்றி பெற்றது.

(ம-86)

# ஈஸ்வரன் அணி அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 5

வவுனியா உதைபந்தாட்டச் சங்கம் அல்பிரட் பொன்கலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக நடத்தும் 11பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மருதநிலா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)

# யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட தொடரின் தொடக்க விழா இன்று



யாழ்ப்பாணம், ஜூன் 5

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான இரண்டாவது கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் இடம்பெறவுள்ளது. தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-23)

# பொம்மர்ஸிடம் அடங்கியது யங்ஹென்றிஸ் 'பி'

யாழ்ப்பாணம், ஜூன் 5

மாதகல் புனித தோமையார் ஆலயத்தின் பெரு விழாவையும் புனித தோமையார் இளைஞர் கழகத்தின் 11ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மேற்படி கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் 'பி' அணியும் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணியும் பலப் பரீட்சையில் ஈடுபட்டன. இந்த ஆட்டத்தில் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக அணி 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)



சுதந்திரபுரம் மத்திய இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட மானசா நினைவுக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரில் றெட்பானா பாரதி விளையாட்டுக்கழகம் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது. (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிறியது பவுன்சர்; சுருண்டது தீவுகள்

## சந்தர்போல் இல்லாதது துல்லியமாக உணரப்படுகிறது



முதல் நாளின் முதல் பந்தை பிரீத் வைட்டுக்கு பவுன்சராக வீசும் ஜோன்சன்

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்டின் முதல் நாளில் தீவுகள் சகல இலக்குகளையும் 148 ஓட்டங்களில் பறிகொடுத்தது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் ஆஸி. 85–3 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து வம்பை விலை கொடுத்து வாங்கியது. கொளுத்தும் வெயிலில் தீவுகளின் ஆடுகளங்கள் முதல்நாள் வேளைகளில் இறுகிப் போயிருக்கும். இதனால் வேகப்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் மிகவும் அதிகரித்துக் காணப்படும். அதிலும் பவுன்சர்களைப் பறக்க விடும் ஆஸி. வேகங்களின் ஆதிக்கம் எவ்வாறு காணப்படும் என்பதனை கேட்கத்தான் வேண்டுமா? களத்தில் பிரீத்வைட் மற்றும் ஹோப். முதல் பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்தே பவுன்சர்தான். எதிர்கொள்ள முடியாமல் ஆடிப்போனார் பிரீத்வைட். தீவுகளின் இன்னிங்ஸில் தடுமாற்றம் தடையில்லாமல் ஒட்டிக் கொள்ள பத்தே ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் பிரீத்வைட்.

ஹோப்புடன் பிராவோ இணைந்து சற்று நிதானித்து மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் ஐம்பதை எட்டச்செய்தார். இலக்குச் சரிவை தற்காலிகமாக தடுக்க முடிந்ததே தவிர நிரந்தரமாகத் தடுக்க முடியவில்லை. இருவரும் அடுத்தடுத்து விடைபெற தற்பொழுது தீவுகள் 75–3. காலை வெயிலிலேயே ஆடுகளங்கள் இறுக்கமடைந்திருந்தென்றால் மதிய வெயிலுக்கு கேட்கவும் வேண்டுமா? வெயில் அதிகரிக்க அதிகரிக்க ஆஸி வேகங்களின் மிரட்டலும் அதிகரித்துக் கொண்டே சென்றது. அதே போல் இலக்குச் சரிவும் அதிகரித்துக் கொண்டே சென்றது. பத்து ஓட்டங்களை எட்டவே படாதபாடுபட்டனர் மத்தியவரிசை மற்றும் பின்வரிசை வீரர்கள். முடிவில் தீவுகள் 148 ஓட்டங்களில் சுருண்டது. சந்தர்போல் இல்லாமை தீவுகளின் இன்னிங்ஸில் துல்லியமாக உணரப்பட்டது.

பந்துவீச்சில் ஜோன்சன், ஹசில்வூட் தலா மூன்று இலக்குகளையும் ஸ்ராக் இரண்டு இலக்குகளையும் லைன், சிமித் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இலகுவாக முன்னிலைபெறலாம் என்ற நிலையில் களமிறங்கிய ஆஸி. வீரர்களின் இன்னிங்ஸும் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை. இணைப்பாட்டமாக பதின்மூன்று ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் பவிலியன் திரும்பினார் வோர்ணர். மார்ஷுடன் இணைந்தார் எதிர்கால ஆஸியின் தலைவர் சிமித். தீவுகள் துடுப்பெடுத்தாடும் வேளையில் வீசப்பட்ட அதே பவுன்சர்கள் அதே தடுமாற்றம் அவ்வாறே ஆஸியின் இன்னிங்ஸிலும் பிரதிபலித்தது. 20 ஓட்டங்களை எட்டுவது எட்டாக் கனியாகப் போக மார்ஷ் 19 ஓட்டங்களுடனும் கிளார்க் 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். முதலாம் நாள் முடிவில் ஆஸ்திரேலியா 85–3.

ஆட்டம் இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகிறது. (ம)

## நான் திருந்த மாட்டேன்



என்னை டோனியுடன் ஒப்பிட வேண்டாம். எனது குணம் மாறுபட்டது. தலைவராக தொடர்ந்து ஆக்ரோஷமாக செயல்படுவேன் என்று இந்திய டெஸ்ட் அணித் தலைவர் விராட் ஹோக்லி தெரிவித்துள்ளார்.

டெஸ்ட், ஒருநாள், ரி–20 அணிகளின் தலைவராக நீடித்து வந்த டோனி கடந்த வருடத்தின் இறுதியில் இந்தியா ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெற்ற 3 டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வினை அறிவித்தார். இதனையடுத்து மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்கு தலைவராக ஹோக்லி நியமிக்கப்பட்டார். ஹோக்லியின் தலைமைத்துவம் திருப்தியளித்த நிலையில் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் ஹோக்லி.

இந்த நிலையில் தனது தலைமைத்துவம் தொடர்பாக ஹோக்லி தெரிவித்ததாவது இந்திய கிரிக்கெட்டிற்கு டோனி அதிகம் செய்துள்ளார். இதை எட்டுவது கடினம். டோனியும், நானும் வித்தியாசமான குணம் கொண்டவர்கள். அப்படி இருக்கும்போது ஏன் இருவரையும் ஒப்பிட்டுப் பேசுகிறீர்கள். எதிரணி வீரர்களிடம் தலைவர் என்ற முறையில் மனதில் என்ன நினைக்கிறோம் என்பதை வெளிக்காட்டக் கூடாது. அப்படி நடந்தால் இதை அவர்கள் சாதகமாக பயன்படுத்திக் கொள்வர். இதுபோன்ற சின்ன விடயத்தில் நான் முன்னேற்றம் அடைய வேண்டும். மற்றபடி, மற்றவர்களுக்காக என்னால் முழுமையாக மாற முடியாது. தலைமைத்துவத்தில் எனது ஆக்ரோஷமான செயற்பாடு தொடரும். என்றார். (ம)

# இந்தியா பங்களாதேஷ் தொடர் பங்களாதேஷ் அணி அறிவிப்பு



பயிற்சியில் பங்களாதேஷ் வீரர்கள்

இந்திய பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவதும் முடிவானதுமான ஒரே டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி பங்களாதேஷில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த ஆட்டத்துக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா பங்களாதேஷ் அணிகளுக் கிடையிலான ஒரு டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட தொடர் எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் டெஸ்ட் ஆட்டத்துக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் காயம் காரணமாக பாதியில் விலகிய வேகப்பந்து வீச்சாளர் ருபெல் ஹுசைன் அணியில் இடம் பிடித்துள்ளார். பங்களாதேஷ் அணி வருமாறு:–

முஷ்பிகர் ரஹிம் (தலைவர்), ரமிம் இக்பால், இம்ருல் ஹையிஸ், மொனிமுல் ஹக், முகம துல்லா, ஷகிப் அல் ஹசன், சர்கார், ஹோம், தைஜுல் இஸ்லாம், முகமது ஷகித், ருபெல் ஹுசைன், ஜுபைர் ஹுசைன், லிட்டான் தாஸ், அபுல்.

இந்திய வீரர்களின் உடற்தேர்வு நாளை மறுதினம் கொல்கத்தாவில் நடைபெறவுள்ளதால் இந்திய அணி நாளை மறுதினம் மாலை அல்லது எதிர்வரும் எட்டாம் திகதியே அறிவிக்கப்படும் என்று தெரிகிறது. (ம)

## காந்திக்கும் மண்டேலாவுக்கும் இடையில் டெஸ்ட் தொடர் விரைவில்

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையே காந்தி–மண்டேலா என்ற பெயரில் டெஸ்ட் தொடர் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நான்கு ஆட்டங்களைக் கொண்ட காந்தி–மண்டேலா டெஸ்ட் தொடருக்கான பரிந்துரைகள் இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கின்றன. அடுத்த 2 ஆண்டுக்குள் இந்தத்தொடர் நடைபெறும் எனத் தெரிகிறது. காந்தி–மண்டேலா டெஸ்ட் தொடர் தொடர்பாக தென்னாபிரிக்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் ஹரூன் லார்கட் தெரிவித்ததாவது இந்த தொடருக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மிகுந்த வரவேற்புத் தெரிவித்துள்ளது. காந்தி–மண்டேலா தொடர் வருடாவருடம் நடைபெறும். ஒரு வருடத்தில் தென்னாபிரிக்கா இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டால் அடுத்த வருடம் இந்தியா தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும். இது ஒரு வருடாந்த தொடராக அமையும் என்றார். (ம)



## குக்கிடம் வீழ்ந்தார் சச்சின்



குறைந்த வயதில் 9ஆயிரம் ஓட்டங்களை எட்டிய டெஸ்ட் வீரர் என்ற சச்சினின் சாதனையை இங்கிலாந்தின் டெஸ்ட் அணித் தலைவரான அலிஸ்டர் குக் முறியடித்துள்ளார்.

இங்கிலாந்து நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் லீட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்திலேயே குக் இந்த சாதனையைப் படைத்தார்.

சச்சின் டெண்டுல்கர் தனது 9 ஆயிரம் டெஸ்ட் ஓட்டங்களை 30 வயது, 253 நாள்களில் எடுத்திருந்தார். குக் 30வயது 159 நாள்களில் இந்த மைல் கல்லை எட்டியுள்ளார். அதாவது சச்சின் டெண்டுல்கரை விட 94 நாள்கள் முன்னதாகவே குக் இந்த சாதனையைப் படைத்துவிட்டார். சச்சின் டெண்டுல்கர் 2004ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக சிட்னி மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் ஆட்டத்தில் விளாசிய இரட்டைச் சத இன்னிங்ஸ் மூலம் 9 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இலங்கை பாகிஸ்தான் தொடர் பாகிஸ்தான் அணி அறிவிப்பு

இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணியை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட், 5 ஒருநாள், இரண்டு ரி–20 ஆட்டங்கள் கொண்ட நீண்ட தொடரில் விளையாடுகிறது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. பந்துவீச்சு சர்ச்சையில் சிக்கி மீண்ட முன்னாள் முதல்தர சுழற்பந்து வீச்சாளர் சயீத் அஜ்மல் அணியில் இருந்து மீண்டும் நீக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் டெஸ்ட் அணி வருமாறு:– மிஸ்பா உல் ஹக் (தலைவர்), முகமது ஹபீஸ், அகமது ஷேசாத், ஷஜுன் மசூத், அசார் அலி, யூனிஸ்கான், ஆசாத் ஷபிக், ஹாரிஸ் சோகைல், சர்ப்ராஸ் அகமது, யாசிர் ஷா, சுல்பிகர் பாபர், வஹாப் ரியாஸ், ஜூனைத் கான், இம்ரான்கான், இஷான் அடில். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ரபேல் நடால்

# காலிறுதியில் நடால் தோல்வி பத்தாவது கிண்ணக் கனவும் தகர்ந்தது

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரின் காலிறுதியில் ரபேல் நடால் ஜோகோவிக்கிடம் தோல்வியடைந்து வெளியேறினார். இதன் மூலம் நடப்புச் சம்பியன் அந்தஸ்தையும் இழந்துள்ளார்.

சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான பிரான்ஸ் ரென்னிஸ்தொடர் பிரான்ஸின் தலைநகரான பரீஸில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஜோகோவிக், நடால் இருவரும் பலப்பரீட்சை நடத்தினர். 5 செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் நடால் 7–5, 6–3, 6–1 என்ற நேர் செற்களில் தோல்வியடைந்து வெளியேறினார்.

2005ஆம் ஆண்டு அறிமுகமான நடால் அன்று முதல் களிமண் தரை ஆடுகளங்களில் முடிசூடா மன்னனாக விளங்கினார். பிரான்ஸ் ரென்னிஸ் தொடரும் களிமண் தொடராக அமைந்ததால் 2005, 2006, 2007, 2008, 2010, 2011, 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகள் என்று மொத்தமாக தான் எதிர்கொண்ட பத்து தொடர்களில் 9 முறை கிண்ணத்தைக் கைப்பற்றி வரலாறு படைத்தார். 2009ஆம் ஆண்டு 4ஆவது சுற்றில் தோற்ற பின்னர் பிரான்ஸ் தொடரில் நடால் சந்தித்த இரண்டாவது தோல்வி இதுவாகும். பிரான்ஸ் தொடரில் நடால் இதுவரை 70 ஆட்டங்களில் வெற்றியும், 2 ஆட்டங்களில் தோல்வியும் கண்டுள்ளார். தொடர்ச்சியாக 39 வெற்றிகளைப் பெற்றுவந்த நடாலின் வெற்றிப் பயணமும் இந்தத் தோல்வியின் மூலம் முடிவுக்கு வருகிறது. (ம)

# அனல் பறக்கும் அரையிறுதிக்கு செரீனா, டிமியா தகுதி



பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், சுவிற்ஸர்லாந்தின் டிமியா பெசின்ஸ்கை இருவரும் அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் செரீனா 6–1, 6–3 என்ற நேர் செற்களில் தரவரிசையில் 17ஆவது இடத்தில் இருந்த இத்தாலியின் சாரா எர்ரானியைத் தோற்கடித்தார். செரீனா தனது அரையிறுதியில் சுவிற்ஸர்லாந்தின் டிமியா பேசின்ஸ்கையை எதிர்கொள் கிறார்.

டிமியா தனது காலிறுதியில் 6–4, 7–5 என்ற நேர் செற்களில் பெல்ஜியத்தின் வான் உய்ட்வாங்கைத் தோற்கடித்தார். இதன்மூலம் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரென்னிஸ் தொடரில் முதல்முறையாக அரையிறுதிக்கு முன்னேறியிருக்கிறார் டிமியா.

பெண்கள் பிரிவின் இரட்டையர் ஆட்டத்தில் சானியா – ஹிங்ஹிஸ் ஜோடி மடேக் – லூசி ஜோடியிடம் 7–5, 6–2 என்ற நேர் செற் கணக்கில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



உலகக்கிண்ண வில்வித்தை தொடர் துருக்கியின் அன்டாலியா நகரில் நடந்து வருகிறது. இதில் சில தினங்களுக்கு நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை தீபிகா குமாரி 6–2 என்ற புள்ளி கணக்கில் கொரியாவின் சாங் ஹைஜின்னை வீழ்த்தி வெண் கலப்பதக்கத்தை தட்டிச் சென்றார். (ரி).

# இலங்கைக்கு இரண்டாவது வெண்கலம்

2ஆவது ஆசிய மெய்வல்லுனர் போட்டிகளின் இரண்டாம்நாள் முடிவில் இலங்கைக்கு மற்றொரு வெண்கலப்பதக்கம் கிடைத்துள்ளது.

2ஆவது ஆசிய மெய்வல்லுனர் போட்டிகள் தற்பொழுது சீனாவில் நடைபெற்று வரும்நிலையில் நேற்றைய இரண்டாம்நாள் காலை வேளை போட்டிகளில் ஒன்றாக நடைபெற்ற ஆண்களுக்கான 4பேர் கொண்ட 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட ஹிமஷா வத்தகெதரஹே, சிஹான் அபிப்பிட்டிய, வினோஜ் மதுமுனி, முஹமட் அப்துல் லைப் ஆகியோர் மூன்றாம் இடத்தைக் கைப்பற்றி இலங்கைக்கு இந்த வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தனர்.

தவிர தங்கப்பதக்கத்தை சீனாவைச் சேர்ந்த வீரர்கள் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

காசி யாத்திரை

காசி யாத்திரை கோயில் குருக்கள் சமூகத்தவரையும், வயதானவர்களின் நலனையும் கருத்திற் கொண்டு நடைபெறும் புனித காசி யாத்திரை கொழும்பு-டெல்லி, டெல்லி-சென்னை. சென்னை-கொழும்பு. யாத்திரை முழுவதும் AC வாகன வசதி.

செல்லுமிடங்கள்:
காசி, கயா, குருசேத்திரம், ஹரித்துவார், ரிஷிகேஸ், ஆந்திரா, தாஜ்மஹால், அலகபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சீத்தாமடி, மதுரா, புத்தகாயா, இராமேஸ்வரம் காளகஸ்திரி தரிசிப்பதுடன் வேறு ஆலயங்களையும் தரிசிக்கலாம்.

* மூன்று வேளை சுத்தமான உணவு, குடி தண்ணீர், இரண்டு பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள்.
* ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.

ஆரம்பம் :- 10.07.2015
நிறைவு :- 26.07.2015
யாத்திரீகர் :- 15
(C/16458)(10.6.3)

மேலதிக விபரங்களுக்கு:
கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
T.P:0777680102, 0777362154

MBA
MASTER OF BUSINESS ADMINISTRATION
General / Marketing / Finance / HR / IT
Duration : 1 year
New Batch Starts on 14.06.2015
ADMISSION REQUIREMENTS
• A Bachelor Degree - must be from a recognized University or College.
• An Accepted Professional Qualification
• Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.
ACCREDITED AND UGC APPROVED
IIS CITY CAMPUS
மேலதிக விபரங்களுக்கு :
071 777 4555

நற்கருணை ஆண்டவருக்கு நன்றி கூறல்

நற்கருணை ஆண்டவரிடமும், பரிசுத்த ஆவியிடமும் கண்ணீரோடும் ஆழ்ந்த விசுவாசத்துடனும் நான் கேட்ட வேண்டுதல் லூர்துமாதாவின் பரிந்துரையாலும் கிடைக்கப்பெற்றுள்ளேன். அதற்கு ஆண்டவருக்கு நன்றி கூறுகின்றேன்.

ஓர் அடியாள்.

JCB (பைக்கோ) வாடகைக்கு உண்டு

பலாலி றோட், புன்னாலைக்கட்டுவன் எரிபொருள் நிரப்பு நிலையம்.
தொடர்பு: 0777 238 615

துர்க்கா கிரேசர்
புத்தூர் கிழக்கு, புத்தூர்

குறைந்த நேரத்தில் அதி கூடிய வேலையைச் செய்யக்கூடிய நவீனரக இரு ஜே.சி.பீ (JCB) வாடகைக்கு விடுவதற்குத் தயார் நிலையிலுள்ளது. கட்டணம் பேசித் தீர்மானிக்கப்படும்.
* போக்குவரத்து இலவசம்.
தொடர்பு:
077 8448775, 021 720 1824

British College of Higher Studies
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
A1 IELTS Life Skills
இப்பாட நெறியானது எளிதாகக் கற்கக் கூடிய முறையிலும், உத்தரவாதத்துடனான பரீட்சை வெற்றியையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டு எமது நிறுவனத்தில் நடாத்தப்படுகிறது. 2015 புதிய வீசா நடைமுறையின் கீழ் British High Commission இனால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறி
Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கூடுதல் பயிற்சிகள் வழங்கப்படும்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422, 0714299935

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org